# கத்தோலிக்க திருச்சபையின் மறைப்போதகக் கைநூல்



# Catechism of the Catholic Church

லத்தீன் மொழியில் ஆயத்தம் செய்யப்பட்ட இந்நூல் 1992 டிசம்பர் 7ஆம் நாள் உத்தியோக பூர்வமாக முதலில் பிரெஞ்சு மொழியில் வத்திக்கானில் வெளியிடப்பட்டது.

இளைப்பாறிய **யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப் பிள்ளை ஆண்டகை,** பிரெஞ்சு மொழியிலிருக்கும் நூலைப் பயன்படுத்தி நம் மக்களின் நலன் கருதி இந்நூலின் சில முக்கிய பாகங்களையும், ஒவ்வொரு அதிகாரத்தினதும் கருத்துக்களையும் இரத்தினச் சுருக்கமாகத் தருகின்றார்.

மறைக்கல்வி நடுநிலையம்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்

Imprimatur :
+ Thomas Savundaranayagam
Bishop of Jaffna

# கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி கைநூல்

## அறிமுகம்

கத்தோலிக்க திருச்சபையின் நீண்ட சரித்திரத்தில் திருமறைப் போதகம் ஒரு முக்கிய இடத்தை வகித்துவந்துள்ளது. கிறிஸ்துநாதரின் திருமறையை மக்களுக்குப் போதிப்பதற்கு பல்வேறு வழிவகைகள் கையாளப்பட்டு வந்துள்ளன.

திருமறைப் போதகத்தை மக்களுக்குச் சரியாக அளிப்பதற்கு உதவியாக, **திரிதெந்தீன் பொதுச்சங்கத்தின்** (Council of Trent 1545 - 1563) தீர்மானத்தின்படி பரிசுத்த பாப்பு 5வது பத்திநாதர் (Pius V) **உரோமைத் திருமறைப் போதகக் கைநூலை** வெளியிட்டார். 1985-ம் ஆண்டில் நடைபெற்ற ஆயர்கள் சங்கத்தின் விசேட அமர்வில் **"கத்தோலிக்க மறைப் போதகத்தின் கைநூல் ஒன்று இயற்றப்படவேண்டும்"** என்று தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை, பரிசுத்த தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர், **"கத்தோலிக்க திருச்சபையின் மறைப்போதகக் கைநூல்"** என்ற நூலை 1992 ஆண்டு டிசம்பர் மாதம் 7ந் திகதி வெளியிட்டு நிறைவேற்றியுள்ளார். இந்நூல் திருச்சபையிலுள்ள எல்லா ஆயர்களின் ஒத்துழைப்போடும் இயற்றப்பட்டுள்ளது.

1. **இந்நூலின் நோக்கம் :**

கத்தோலிக்க மக்கள் விசுவசிக்கவேண்டிய மறை உண்மைகளையும், அனுசரிக்கவேண்டிய ஒழுக்க விதிகளையும் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளையும் திருச்சபையின் பாரம்பரியத்தையும் பின்பற்றி, ஒழுங்காகவும் சுருக்கமாகவும் தருவதே இந்நூலின் நோக்கமாகும்.

2. **இந்நூல் யாருக்கு அளிக்கப்படுகிறது?**

கத்தோலிக்க திருச்சபையின் போதனைக்குப் பொறுப்புள்ளவர்களாய் இருக்கிற மறை ஆயர்களுக்கே அளிக்கப்படுகிறது. திருச்சபையின் உண்மைப் படிப்பினையை இலகுவாய் அறிந்து கொள்வதற்கு இந்நூல் ஒரு துணையாக அமைகிறது.

3. **இந்நூலைப் படிப்பதனால் அடையவேண்டிய பயன்.**

இறைவனினதும், தம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துநாதரினதும் அன்பை எல்லா மனிதரும் அறிந்து அவர்களை அன்புசெய்யத் துணைபுரிதல் ஒரு நோக்கம். கத்தோலிக்க மக்கள் தாங்கள் விசுவசிக்கவேண்டிய உண்மைகளையும், அனுசரிக்கவேண்டிய ஒழுக்க விதிகயையும் இலகுவாக அறிந்து தங்களைப் புனிதப்படுத்திக்கொள்ள உதவி அளித்தல் இன்னொரு நோக்கமாகும்.

4. **இந்நூலின் அமைப்பு.**

திருச்சபையின் நீண்ட வரலாற்றில் தோன்றியுள்ள திருமறைப்போதகக் கைநூல்களின் அமைப்பைப் பின்பற்றி, இந்நூல் பின்வரும் நான்கு பாகங்களை அடக்கியுள்ளது,

1 ஆம் பாகம் : விசுவாச அறிக்கை

2 ஆம் பாகம் : கிறிஸ்தவ மறைபொருளைக் கொண்டாடுதல்

3 ஆம் பாகம் : கிறிஸ்துவில் வாழ்வு

4. ஆம் பாகம் : கிறிஸ்தவ செபம்

# கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி கைநூல்

## பொருளடக்கம்

## 1ஆம் பாகம் : விசுவாச அறிக்கை


1வது பெரும் பிரிவு : நான் விசுவசிக்கிறேன் - நாங்கள் விசுவசிக்கிறோம்.

**1வது அத்தியாயம்** : மனிதன் இறைவனை அறிய முடியும்

**2வது அத்தியாயம்** : இறைவன் மனிதனைச் சந்திக்கிறார்.

**3வது அத்தியாயம்** : இறைவனுக்கு மனிதனின் பதில்.

2வது பெரும் பிரிவு : கிறிஸ்தவ விசுவாசத்தின் அறிக்கை விசுவாசப்பிரமாணங்கள்.

1வது அத்தியாயம் : பிதாவாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.

2வது அத்தியாயம் : சுதனாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.

3வது அத்தியாயம் : பரிசுத்த ஆவியாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.

## 2ஆம் பாகம் : கிறிஸ்தவ மறைபொருளைக் கொண்டாடுதல்

### 1வது பெரும் பிரிவு:அருளடையாளத்திட்டம்

1வது அத்தியாயம் : பாஸ்கா மறைபொருள் திருச்சபையின் காலத்தில்.

2வது அத்தியாயம் : பாஸ்கா மறைபொருளை அருளடையாளங்கள் வழியாகக் கொண்டாடுதல்.

### 2வது பெரும் பிரிவு:திருச்சபையின் ஏழு அருளடையாளங்கள்.

1வது அத்தியாயம் : கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத்திற்குரிய அருளடையாளங்கள்.

2வது அத்தியாயம் : குணப்படுத்தலுக்குரிய அருளடையாளங்கள்.

3வது அத்தியாயம் : கிறிஸ்தவ உறவை வளர்க்கும் அருளடையாளம்.

4வது அத்தியாயம் : திருவழிபாட்டிற்குரிய பிற சடங்குகள்.

## 3ஆம் பாகம் : கிறிஸ்துவில் வாழ்வு

### 1வது பெரும் பிரிவு : மனிதனின் அழைப்பு அருள் வாழ்வுக்கு

1வது அத்தியாயம் : மனிதனின் மாண்பு.

2வது அத்தியாயம் : மனித சமூகம்.

3வது அத்தியாயம் : இறைவன் தந்த மீட்பு : சட்டமும் அருளும்.

### 2வது பெரும் பிரிவு : பத்துக் கட்டளைகள்

1வது அத்தியாயம் : "உன் ஆண்டவராகிய கடவுளை... அன்பு செய்வாயாக,"

2வது அத்தியாயம் : "உன்னை அன்பு செய்வது போல உன் அயலவனையும் அன்பு செய்வாயாக"

## 4ஆம் பாகம் : கிறிஸ்தவ செபம்

### 1வது பெரும் பிரிவு : கிறிஸ்தவ வாழ்வில் செபம்.

1வது அத்தியாயம் : செபத்தின் வெளிப்பாடு. செபிக்க எல்லோருக்கும் அழைப்பு.

2வது அத்தியாயம் : செபத்தின் பாரம்பரியம்.

3வது அத்தியாயம் : செப வாழ்வு.

### 2வது பெரும் பிரிவு : கிறிஸ்து கற்பித்த செபம் :

**"பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே"**

இந்த 2வது பெரும் பிரிவில் அத்தியாயங்கள் இல்லை.

குறிப்பு : ஒவ்வொரு அத்தியாயத்திலும் "சுருக்கம்" உண்டு, இச்சுருக்கங்கள் இங்கு தரப்படுகின்றன.

# கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி கைநூல்

# 1ஆம் பாகம் : விசுவாச அறிக்கை

## 1வது பெரும் பிரிவு :நான் விசுவசிக்கிறேன், நாங்கள் விசுவசிக்கிறோம்.

### 1வது அத்தியாயம் : மனிதன் இறைவனை அறிய முடியும்.

#### சுருக்கம்

மனிதன் தன் இயல்பாலும் அழைத்தலாலும் ஒரு வழிபாட்டுச் சிருட்டி, ஏனெனில், அவன் கடவுளோடு தனக்குள்ள தொடர்பைச் சுயாதீனமாக ஏற்று வாழாவிடின், அவன் ஒரு பூரண மனித வாழ்வை வாழமுடியாது.

மனிதன் கடவுளோடு உறவுகொண்டு வாழவே படைக்கப்பட்டான். அவரிலேயே தனது இன்பத்தைக் காண்பான்.

மனிதன் சிருட்டிகள் தரும் செய்தியையும், தனது மனச்சான்றின் குரலையும் கேட்டால், எல்லாவற்றிற்கும் ஆதியும் அந்தமுமான கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற உண்மையை அடைய முடியும்.

நம்மைப் படைத்தவரும், ஆண்டுவருபவருமான உண்மையான ஒரே கடவுளை மனிதன் தனது இயல்பான புத்தியால், அவருடைய படைப்புக்கள் வழியாக, நிச்சயமாக அறிந்துகொள்ள முடியும் என்று திருச்சபை படிப்பிக்கிறது.

சிருட்டிகளின் பலவிதமான திறமைகளிலிருந்து அளவுகடந்த திறமைகளையுடைய கடவுளைப் பெயர் சொல்லி அழைக்கலாம். ஆனால், கடவுளைப்பற்றிய மறைபொருளை நமது பேச்சால் குறைத்துவிட முடியாது.

"சிருட்டிகர் இல்லையேல் சிருட்டிகளும் இல்லை" (இன்றைய உலகில் திருச்சபை 36). ஆகையால்தான் விசுவாசிகள் கிறிஸ்துவின் அன்பினால் உயிருள்ள கடவுளின் ஒளியை, அவரை அறியாதவர்களுக்கு அல்லது ஏற்காதவர்களுக்கு அளிக்க உந்தப்படுகிறார்கள்.

### 2ஆவது அத்தியாயம் : இறைவன் மனிதனைச் சந்திக்கிறார்

#### 1. இறைவனின் வெளிப்படுத்தல்

#### சுருக்கம்

கடவுள் அன்பினால் தூண்டப்பட்டு தம்மை வெளிப்படுத்தித் தம்மை மனிதனுக்கு அளிக்கிறார். இவ்வாறு மனிதன் தன்னைப்பற்றி, தனது வாழ்வின் கதிபற்றி எழுப்பும் கேள்விகளுக்குத் திட்டமான, தேவைக்கு மேற்பட்ட ஒரு விடையை அளிக்கிறார்.

கடவுள் தமது செயல்கள், வார்த்தைகள் மூலம் தமது மறை பொருளை படிப்படியாக மனிதனுக்குத் தெரிவித்துத் தம்மை வெளிப்படுத்தினார்.

படைப்புக்கள் மூலம் கடவுள் தம்மை வெளிப்படுத்தியதற்கு மேலாக, நமது ஆதிப் பெற்றோருக்குத் தம்மை வெளிப்படுத்தினார். அவர்களோடு உரையாடினார். அவர்களது வீழ்ச்சியின் பின் அவர்கட்கு **மீட்பை வாக்களித்து** அவர்களுக்கு ஒரு உடன்படிக்கையை முன்னறிவித்தார்.

கடவுள் நோவாவோடு அவர் சந்ததியோடும் ஓர் **உடன்படிக்கையைச்** செய்துகொண்டார். அது உலகம் இருக்கும் வரை நீடிக்கும்.

கடவுள் ஆபிரகாமைத் தேர்ந்து, அவரோடும் அவர் சந்ததியோடும் ஓர் **உடன்படிக்கையைச்** செய்தார். அவர்களைத் தமது இனமாக்கி, அவர்களுக்கு மோயீசன் மூலம் தமது கற்பனைகளை வெளிப்படுத்தினார். அவர்கள் மனுக்குலத்தின் மீட்பை ஏற்க அவர்களை இறைவாக்கினர் மூலம் ஆயத்தப்படுத்தினார்.

கடவுள் தமது திருமகனை உலகிற்கு அனுப்பித் **தம்மைப் பூரணமாக வெளிப்படுத்தினார்.** அவர் மூலம் தமது நிரந்தர உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அவரே தந்தையின் நிரந்தர வார்த்தை. ஆகவே, அவர் வருகைக்குப்பின் வேறு வெளிப்படுத்தல் இருக்கமாட்டாது.

#### 2. இறைவெளிப்பாடு வழிவழியாக வழங்கப்படல்

#### சுருக்கம்

கிறிஸ்துநாதர் அப்போஸ்தலர்களிடம் ஒப்படைத்த இறை வெளிப்பாட்டை அவர்கள் தங்கள் போதனையாலும், பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எழுதியவைகளாலும், சகல சந்ததியினருக்கும் அவர் மகிமையோடு திரும்பி வரும்வரை வழிவழியாக வழங்கினர்.

**திருமரபும் திருமறை நூலும்** திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்ட இறைவார்த்தையின் ஒரே திருக்களஞ்சியமாகும். பயணம் செய்யும் திருச்சபை சகல செல்வங்களுக்கும் ஊற்றாகிய இறைவனை ஒரு கண்ணாடியில் பார்ப்பதுபோல் அதில் பார்க்கின்றது.

"திருச்சபை தன் போதனையிலும், வாழ்விலும், வழிபாட்டிலும் தன்னை, தான் விசுவசிப்பவற்றை எல்லாத்

தலைமுறைகளுக்கும் வழங்கி, நீடித்து நிற்கச் செய்கின்றது". (இறை வெளிப்பாடு 8)

முழு இறைமக்கள் கூட்டம் தனது இயல்புக்கு மேற்பட்ட விசுவாசத்தின் உணர்வால் திருவெளிப்பாட்டுக் கொடையை ஏற்று, அதை ஆழமாக ஆராய்ந்தறிந்து, அதைப் பூரணமாக வாழ்வில் கடைப்பிடிக்க என்றும் முயற்சித்து வருகிறது.

இறைவாக்குக்கு **அதிகார பூர்வமாக விளக்கம் அளிக்கும் பொறுப்பு** திருச்சபையின் ஆசிரியத்திற்கு, அதாவது, பரிசுத்த பாப்பானவருக்கும் அவரோடு இணைவுள்ள மறை ஆயர்களுக்கும் மட்டுமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### 3. திருமறைநூல்

### சுருக்கம்

திருமறைநூல் முழுவதும் ஒரே ஒரு நூல். ஏனெனில், திருமறைநூல் முழுவதும் கிறிஸ்துநாதரைப்பற்றியே கூறுகின்றது, அவரிலேயே அது நிறைவு பெறுகின்றது.

"திருமறை நூல்களில் இறைவனின் வார்த்தை அடங்கியுள்ளது. இறை ஏவுதலால் எழுதப்பட்டபடியால் அவை உண்மையாகவே இறைவனின் வார்த்தையாக உள்ளன," (திருவெளிப்பாடு 24)

இறைவனே திருமறைநூலின் ஆசிரியர். ஏனெனில், அவர் மனித ஆசிரியர்களை ஏவி, அவர்களில், அவர்கள் வழியாகச் செயலாற்றுகிறார். இவ்வாறு, அவர்கள் எழுதியவை மூலம் மீட்பிற்குரிய உண்மைகளைப் பிழையின்றிப் போதிக்கின்றனர் என்று உறுதி அளிக்கின்றார்.

**பழைய ஏற்பாட்டின் 46 நூல்களையும் புதிய ஏற்பாட்டின் 27 நூல்களையும்** திருச்சபை ஏற்று, அவை இறை ஏவுதலால் எழுதப்பட்டவை, என உறுதிப்படுத்துகின்றது.

**நான்கு நற்செய்திநூல்கள்** நடுநிலையைப் பெறுகின்றன. ஏனெனில், கிறிஸ்துநாதரே அவைகளின் மையப் பொருள்.

இரு ஏற்பாடுகளுக்குமிடையே ஒற்றுமையுண்டு. அது இறைவனின் ஒரே திட்டத்திலும், வெளிப்படுத்தலிலும் இருந்து வருகின்றது. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டிற்கு ஆயத்தம் செய்கின்றது, புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டை நிறைவு செய்கின்றது. இரண்டும் ஒன்றுக்கொன்று விளக்கம் அளிக்கின்றது. இரண்டும் உண்மையில் இறைவனின் வார்த்தையே.

இறை ஏவுதலால் எழுதப்பட்ட திருமறை நூல்களுக்கு உண்மை விளக்கம் அளிப்பதற்கு அந்நூல்களின் ஆசிரியர்கள் வழியாக இறைவன் நமது மீட்பிற்கென வெளிப்படுத்த விரும்பியவை பற்றி முதல்முதல் கவனம் செலுத்தவேண்டும்.

"எழுதப்பட்ட அல்லது மரபுவழிவந்த இறைவனின் வார்த்தைக்கு அதிகாரபூர்வமான பொருள் விளக்கம் செய்யும் பொறுப்பு இயேசுக்கிறிஸ்துவின் பெயரால் அதிகாரம் செலுத்தும் திருச்சபையின் உயிருள்ள ஆசிரியத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது" (இறைவெளிப்பாடு 10)

"திருச்சபை நம் ஆண்டவரின் திருவுடலுக்கு வணக்கம் செலுத்துவது போலவே, இறைநூல்களுக்கும் என்றும் வணக்கம் செலுத்தி வந்துள்ளது" (இறை வெளிப்பாடு 21). இவை இரண்டும் முழுக்கிறிஸ்தவ வாழ்வுக்கு உணவூட்டி அதை வழி நடத்துகின்றன.

### 3வது அத்தியாயம் இறைவனுக்கு மனிதனின் பதில்

### சுருக்கம்

தம்மை வெளிப்படுத்தும் இறைவனை மனிதன் முழுமையாக ஏற்றுக்கொள்வதே **விசுவாசம்**, இறைவன் தமது சொல்லாலும் செயல்களாலும் தம்மைப்பற்றித் தந்த வெளிப்பாட்டை மனிதன் தனது புத்தியையும் சித்தத்தையும் கொண்டு ஏற்றுக்கொள்கிறான். ஆகவே, "விசுவசித்தல்" ஒரு ஆளோடும் உண்மையோடும் தொடர்பு கொண்டுள்ளது. உண்மையை உறுதிப்படுத்தும் இறைவனில் கொண்டுள்ள நம்பிக்கையின் நிமித்தம் அதை விசுவசிக்கிறோம்.

நாம் பிதா, சுதன், பரிசுத்த ஆவி என்னும் இறைவனைவிட வேறு எவரையும் விசுவசிக்கக் கூடாது. "விசுவசித்தல்" மனிதனுடைய புத்திக்கும் சுயாதீன சித்தத்திற்கும் ஏற்ற செயல். அது மனிதனுடைய மாண்புக்கு ஏற்றது.

"விசுவசித்தல்" திருச்சபையின் செயல், திருச்சபையின் விசுவாசம் எமது விசுவாசத்திற்கு முன்னோடியாகவும், காரணமாகவும். அதைப்பாதுகாத்து வளர்ப்பதாகவும் இருக்கின்றது. திருச்சபை எல்லா விசுவாசிகளினதும் தாயாக இருக்கின்றாள். "திருச்சபையைத் தாயாகக் கொள்ளாத எவனும் இறைவனைத் தந்தையாகக் கொள்ள முடியாது" (புனித சிப்பிரியன்).

"கடவுளின் வார்த்தை எழுத்துவடிவிலும் வாய்மொழியிலும் வழங்கப்பெற்றதென்றும், திருச்சபை தமது சிறப்பான வரையறுக்கப்பட்ட போதனையாலோ, சாதாரண, பொதுவான போதனையாலோ அது கடவுளால் வெளிப்படுத்தப்பட்டதென்றும் விசுவசிக்கும்படி எடுத்துரைக்கின்றது" (இறைமக்களின் விசுவாச அறிக்கை 20)

மீட்பிற்கு விசுவாசம் அவசியம், "விசுவசித்து

திருமுழுக்குப் பெறுபவன் மீட்புப்பெறுவான். விசுவசியாதவனுக்குத் தண்டனை கிடைக்கும்" (மாற் 16,16) என்று இயேசு தாமே கூறியுள்ளார்.

மறுவாழ்வில் நமக்குப் பேரின்பமளிக்கும் அறிவுக்கு முன்னோடியே விசுவாசம்.

**2வது பெரும் பிரிவு : கிறிஸ்தவ விசுவாசத்தின் அறிக்கை - விசுவாசப்பிரமாணங்கள்.**

**முன்னுரை**

திருச்சபையின் நீண்ட சரித்திரத்தில் பல விசுவாசப் பிரமாணங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் **"அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணம்"** **"நிசேயா - கொன்ஸ்தாந்தி நோப்பிள் விசுவாசப் பிரமாணம்"** என்பன பிரசித்திபெற்றவை.

**அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணம்** அப்போஸ்தலருடைய காலத்திலேயே உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. அது ஆதியில் உரோமாபுரித் திருச்சபையில் திருமுழுக்கிற்குப் பயன்படுத்தப்பட்டது. இப்போதும் திருமுழுக்கின்போது பயன்படுத்தப்படுகிறது.

**நிசேயா - கொன்ஸ்தாந்திநோப்பிள் விசுவாசப்பிரமாணம்** நிசேயா கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச் சங்கங்களில் (325+381) உருவாக்கப்பட்டது. இப்போது ஞாயிறு வாரங்களிலும் பெருவிழாக்களிலும் திவ்விய பூசைப்பலியில் பயன்படுத்தப்படுகிறது.

2ஆம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் (1962 - 65) படிப்பினைகளைத் தழுவி, பரிசுத்த தந்தை **6வது சின்னப்பர்** 1968 இல் **"இறைமக்களின் விசுவாச அறிக்கையை"** வெளியிட்டார்.

**1வது அத்தியாயம் பிதாவாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.**

**1. சருவேசுரன்**
**சுருக்கம்**

"இஸ்ராயேலே கேள் : நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர்" (உ.,ஆ, 6:4, மாற்கு 12:29)." இருக்கும் உன்னத பொருள் தனிப் பொருள் அதற்குச் சரிசமனானது ஒன்றும் இல்லாமல், இருக்க வேண்டும். கடவுள் தனிப்பொருள், இல்லையேல் அவர் கடவுளில்லை" (தேர்த்துல்லயன்).

கடவுள் மேல் உள்ள விசுவாசம் அவரை நமது ஆதியும் அந்தமுமாக ஏற்கவும், அவருக்குப் பதிலாக வேறொருவரை விரும்பாமலிருக்கவும் இட்டுச் செல்கின்றது.

கடவுள் தம்மை வெளிப்படுத்தும்போது அறிக்கையிடமுடியாத மறைபொருளாகவே இருக்கின்றார். "அவரை நீ முற்றாக அறிந்தால் அவர் கடவுளாய் இருக்கமாட்டார்" (புனித அகுஸ்தீனார்).

நாம் விசுவசிக்கும் கடவுள் "இருப்பவராகவே" தம்மை வெளிப்படுத்தியுள்ளார். "அருள் நோக்கும், தயவும் பொறுமையும்" (யாத். 34:6) உள்ளவராக வெளிப்படுத்தியுள்ளார். அவரே உண்மையும் அன்பும் ஆனவர்.

**2. பிதாவாகிய சருவேசுரன்**
**சுருக்கம்**

அதிபரிசுத்த திரித்துவத்தின் மறைபொருள் கிறிஸ்தவ விசுவாசத்தினதும், வாழ்வினதும் மறைபொருள். இதன் அறிவை கடவுளே தம்மை பிதா, சுதன், பரிசுத்த ஆவி என வெளிப்படுத்தித் தரமுடியும்.

சுதனாகிய சருவேசுரனின் மனித அவதாரம், கடவுள் நித்தியமும் பிதாவாக இருக்கிறார் என்றும், சுதன் பிதாவோடு ஒரு சுபாவமானவர். அதாவது, அவர் பிதாவிலும் பிதாவோடு ஒரேகடவுளாய் இருக்கிறார் என்றும் வெளிப்படுத்துகிறது.

பரிசுத்த ஆவி பிதாவாலும் சுதனாலும் அனுப்பப்படல், அவர் அவர்களோடு ஒரே கடவுளாய் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது. "இவர் பிதாவோடும் சுதனோடும் ஒன்றாக ஆராதனையும் மகிமையும் பெறுகின்றார்" (விசுவாசப் பிரமாணம்).

பரிசுத்த ஆவி முதல் ஊற்றாகிய பிதாவில் நின்றும், அவர் நித்தியமாகத் தம்மை மகனுக்கு அளிப்பதனால் பிதாவிலும் சுதனிலும் நின்றும் புறப்படுகின்றார்" (புனித அகுஸ்தீனார்).

பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் பெறப்படும் **திருமுழுக்கின்** அருளால் பரிசுத்த திரித்துவத்தின் வாழ்வில், விசுவாசத்தின் வழியாக இவ்வுலகில் மங்கலாகவும், மரணத்தின்பின் நித்திய ஒளியினாலும் பங்குபற்ற அழைக்கப்படுகின்றோம்.

"கத்தோலிக்க விசுவாசம் இதில்தான் தங்கியுள்ளது. ஒரே சருவேசுரனை திரித்துவத்திலும், திரித்துவத்தை ஒற்றுமையிலும், ஆட்களை மாறுபடுத்தாமலும் இயல்பைப் பிரிக்காமலும் வணங்குவதிலேதான். ஏனெனில், பிதாவின் ஆள்தன்மையும், சுதனின் ஆள்தன்மையும், பரிசுத்த ஆவியின் ஆள்தன்மையும் வித்தியாசமானவை. ஆனால், பிதாவினதும், சுதனினதும், பரிசுத்த ஆவியினதும் தேவ இயல்பு ஒன்றே, மகிமை சமமானது, மாட்சிமை நித்தியமானது" ("Quicumque" என்ற விசுவாசப் பிரமாணம்).

தேவ ஆட்கள் தங்களில் பிரிக்க முடியாதவர்களாய்

இருப்பதுபோல, தங்கள் செயல்பாட்டிலும் பிரிக்கமுடியாதவர்கள். ஆனால், தங்கள் ஒரே செயலில் ஒவ்வொரு தெய்வீக ஆளும் தமக்குச் சிறப்பாயுள்ளதைக் காண்பிக்கின்றனர். இது தேவ சுதனின் மனித அவதாரத்திலும், பரிசுத்த ஆவியின் வருகையிலும் சிறப்பாகக் காணப்படுகின்றது.

### 3. எல்லாம் வல்ல சருவேசுரன்
#### சுருக்கம்

"நீர் எல்லாம் செய்ய வல்லவர் என்பதையும், எந்தத் திட்டமும் உம் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதன்று என்பதையும் நானறிவேன்" (யோபு 42\2) என்று நீதிமானான யோபுவுடன் நாமும் அறிக்கையிடுவோம்.

திருமறை நூலின் சாட்சியத்தைப் பிரமாணிக்கமாய்ப் பின்பற்றி, திருச்சபை தனது செபத்தை "எல்லாம் வல்ல நித்திய இறைவனுக்கு" அடிக்கடி சமர்ப்பிக்கிறது. ஏனெனில் "கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை" (லூக். 1:37, தொ.நூல் 18:14) என்று அது உறுதியாக நம்புகிறது.

கடவுள் நம்மை நமது பாவங்களிலிருந்து திருத்தி, தமது அருளினால் தமது சிநேகத்தில் மீண்டும் நிலைநாட்டுவதால் தமது மட்டற்ற வல்லமையைக் காட்டுகிறார். "மன்னிப்பு அளிப்பதாலும், இரக்கங் காட்டுவதாலும் எல்லாம் வல்லவரென்று சிறந்த முறையில் இறைவன் காட்டுகின்றார் ..." (26 ஆம் ஞாயிறு பூசையின் சபைச் செபம்).

இறைவனின் அன்பு எல்லா வல்லமையுள்ளது என்று விசுவசியாமல், தந்தை எங்களைப் படைத்தார், சுதன் எங்களை இரட்சித்தார், பரிசுத்த ஆவி எங்களைப் புனிதப்படுத்துகிறார் என்று எவ்வாறு விசுவாசிக்க முடியும்?

### 4. படைத்த கடவுள்
#### சுருக்கம்

பூமியினதும் மனிதனதும் படைப்பினால் கடவுள் தமது அளவு கடந்த அன்பிற்கும், ஞானத்திற்கும் முதலானதும், பொதுவானதுமான அத்தாட்சியையும் தமது "அன்புத் திட்டத்தின்" முதல் அறிவிப்பையும் தந்துள்ளார். இவ்வன்புத் திட்டம் கிறிஸ்துநாதரின் புதிய படைப்பில் நிறைவேறும்.

படைப்புவேலை பிதாவாகிய கடவுளுக்குச் சிறப்பாக உரியதாகக் கூறப்பட்டாலும், பிதாவும் சுதனும் பரிசுத்த ஆவியும் படைப்பின் பிரிபடாத ஒரே காரணர் என்பது விசுவாச சத்தியமாகும்.

கடவுள் உலகம் முழுவதையும் சுயாதீனமாகவும், நேரடியாகவும், எவரின் உதவியின்றியும் படைத்தார்.

"படைத்தல்" என்றால் ஒன்றுமில்லாமையிலிருந்து தோன்றச் செய்தல். இதற்கு அளவில்லாத வல்லமை தேவை. அது கடவுளிடம் மட்டுமே உண்டு.

கடவுள் தமது மகிமையை வெளிப்படுத்தும்படியே உலகைப் படைத்தார். தமது படைப்புக்கள் தமது உண்மையில், நன்மைத்தனத்தில், தமது அழகில் பங்குபெறும் பொருட்டே அவற்றைப் படைத்தார். இவ்வாறு கடவுளின் மகிமை வெளிப்படுத்தப்பட்டது.

உலகைப் படைத்த கடவுள் அதைத் "தம்முடைய வல்லமைமிக்க வார்த்தையால் எல்லாவற்றையும் தாங்கிவருகிறார்" (எபி. 1:3), வாழ்வளிக்கும் ஆவியினாலும் பாதுகாத்து வருகிறார்.

எல்லாப் படைப்புக்களும் தங்கள் இறுதிக்கதியை அடையும்படி கடவுள் கையாளும் திட்டங்களே **தேவபராமரிப்பு** எனப்படுகிறது.

ஒரு பிள்ளைக்குரிய நம்பிக்கையோடு இறை தந்தையின் பராமரிப்புக்கு நம்மைக் கையளிக்குமாறு கிறிஸ்து அழைக்கிறார். (மத். 6:26-34). "உங்கள் கவலைகள் அனைத்தையும் கடவுள் மேல் சுமத்தி விடுங்கள்: உங்கள் மீது அவருக்கு அக்கறை உண்டு" (1பேதுரு 5:7) என்று அப்போஸ்தலரான புனித பேதுரு விடை பகருகிறார்.

இறை பராமரிப்பு படைப்புக்களைக் கொண்டு செயற்படுகின்றது. தமது திட்டத்தோடு சுதந்திரமாக ஒத்துழைக்கும் வாய்ப்பை இறைவன் மனிதருக்கு அளிக்கிறார்.

இயற்கையிலும் ஒழுக்கத்திலும் தீமை இருத்தல் ஆகிய இரகசியத்தை இறைவன் தீமையை வெல்ல மரித்து உயிர்த்து தமது திருமகனாகிய இயேசு கிறிஸ்துமூலம் விளக்கியுள்ளார். தீமையிலிருந்து நன்மை பிறக்காவிடின் அது இருக்க இறைவன் அனுமதிக்கமாட்டார் என்று விசுவாசம் நமக்கு உறுதியளிக்கின்றது. தீமையிலிருந்து நன்மை பிறப்பது எவ்வாறென்று நித்திய வாழ்விலேயே நாம் பூரணமாய் அறிய முடியும்.

### 5. பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்தார்.
#### சுருக்கம்

சம்மனசுகள் சரீரமற்ற சிருட்டிகள். அவர்கள் கடவுளை இடைவிடாது மகிமைப்படுத்தி, மற்றச் சிருட்சிகள் மட்டில் அவர் கொண்டுள்ள மீட்புத் திட்டங்களை நிறைவேற்ற உதவிபுரிகின்றனர்.

சாத்தானும் மற்றப் பேய்களும் கடவுளுக்கும் அவருடைய திட்டத்திற்கும் பணிய மறுத்து, தங்கள் நிலையிலிருந்து வீழ்ச்சியடைந்த சம்மனசுகளே. அவர்கள் மறுப்பு நிரந்தரமானது. அவர்கள் மனிதனைக் கடவுளுக்கு எதிராகத் தங்கள் மறுப்பில் பங்குகொள்ளத் தூண்டுகின்றனர்.

சம்மனசுகள் தங்கள் ஆண்டவராகிய

கிறிஸ்துநாதரை சூழ்ந்து நிற்கின்றனர்.அவர் மனிதர் மட்டில் மேற்கொண்ட மீட்புப்பணியை நிறைவேற்ற அவருக்குச் சிறப்பான முறையில் பணிபுரிகின்றனர்.

திருச்சபை தனது பயணத்தில் துணைபுரியும் சம்மனசுகளுக்கும் எல்லா மனிதரையும் பாதுகாத்துவரும் சம்மனசுகளுக்கும் வணக்கம் செலுத்துகிறது.

கடவுள் சிருட்டிகளிலுள்ள வேற்றுமையையும், அவைகளில் காணப்படும் நன்மைத்தனத்தையும், அவைகளுக்கிடையிலுள்ள ஒழுங்கையும் தொடர்பையும் விரும்பியுள்ளார். சடப் பொருளான சிருட்டிகளை மனுக்குலத்தின் நன்மைக்காகவே அளித்துள்ளார்.

சிருட்டிகளில் பதிக்கப்பட்டுள்ள இயற்கை விதிகளையும் அவைகளிடையே காணப்படும் இயல்பான தொடர்புகளையும் மதித்தல், ஞானத்தின் மேல்வரிச் சட்டமும், வாழ்வின் அத்திவாரமும் ஆகும்.

### 6. மனிதனைப் படைத்தார்
### சுருக்கம்

கடவுள் முதல் மனிதராக ஆதாமையும் ஏவாளையும் பரிசுத்தமான அருள்நிலையில் படைத்தார்.

"சாவைக் கடவுள் உண்டாக்கவில்லை. வாழ்வோரின் அழிவைக் கண்டு அவர் மகிழ்வாரல்லர்" (ஞா. 1:13) "பசாசின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது" (ஞா 2:24).

"கடவுளால் அருள்நிலையில் படைக்கப்பட்டிருந்த மனிதன் தீயோனின் தூண்டுதலால் வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே தன் சுதந்திரத்தைத் தவறான வழியில் பயன்படுத்தினான், கடவுளுக்கு எதிராகத் தன்னை நிறுத்தி, அவருக்குப் புறம்பாகத் தன் கதியை அடைய நாடினான்" (இன்றைய உலகில் திருச்சபை 13,1).

ஆதாம், முதல் மனிதன் என்றபடியால், தனது பாவத்தினால் கடவுளிடமிருந்து தனக்கென்று மட்டுமல்லாமல் எல்லா மனிதருக்காகவும் பெற்றிருந்த பரிசுத்த தனத்தையும் ஆதி அருள்நிலையையும் இழந்தான்.

ஆதாமும் ஏவாளும் தங்கள் சந்ததியினருக்கு முதல் பாவத்தினால் தீண்டப்பட்ட மனித இயல்பையே, அதாவது, பரிசுத்ததனமும் ஆதி அருளும் இல்லாத நிலையிலேயே, அளித்தனர்.

ஆதிப்பாவத்தின் பயனாக மனித இயல்பு தனது ஆற்றல்களில் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. அறியாமை, நோய், சாவின் ஆதிக்கம், ஆசாபாசம் முதலியவைகளுக்கு இலக்காகியுள்ளது,

"சென்ம பாவம் மனித இயல்புக்குக் கண்டு பாவிப்பினால் அன்று சந்தான விருத்தியினால் வருகின்றதென்றும், அதனால் அது ஒவ்வொருவருக்கும் உரியதென்றும் திரிதெந்தீன் பொதுச்சங்கத்துடன் விசுவசிக்கின்றோம்" (இறை மக்களின் விசுவாச அறிக்கை16)

பாவத்தின்மேல் கிறிஸ்துநாதரால் கொள்ளப்பட்ட வெற்றி, பாவத்தினால் பறிக்கப்பட்ட நன்மைகளைத் தந்துள்ளது. "பாவம் பெருகிய இடத்தில் அருள் அணைகடந்து பெருக்கெடுத்தது" (உரோ 5:20).

"கிறிஸ்தவ விசுவாசத்தின்படி இவ்வுலகு பாவத்தின் அடிமைத்தனத்திற்கு உள்ளாயிற்று என்பது உண்மையே, ஆனால் கிறிஸ்துநாதர் தம்முடைய சிலுவைப்பாடுகள், உயிர்ப்பு வழியாக தீயோனின் வல்லமையை முறியடித்து விடுதலை அளித்தார்" (இன்றைய உலகில் திருச்சபை 2:2)

### 2வது அத்தியாயம் : சுதனாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன்.

### 1. "அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன்."

### சுருக்கம்

"இயேசு" என்ற பெயருக்கு "மீட்பளிக்கும் கடவுள்" என்பது பொருள். மரியாளிடமிருந்த குழந்தை "இயேசு" என்று அழைக்கப்பட்டது. "ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" (மத். 1:21). "நாம் மீட்படைவதற்கு அவர் பெயரைத் தவிர இவ்வுலகில் மனிதருக்கு வேறு பெயர் அருளப்படவில்லை" (தி.தூ 4:12)

"கிறிஸ்து" அல்லது "மெசியா" என்ற பெயருக்கு "அபிஷேகம் செய்யப்பட்டவர்" என்பது பொருள். இயேசு கிறிஸ்துவாயிருக்கிறார். ஏனெனில் "கடவுள் அவருக்குப் பரிசுத்த ஆவியையும் வல்லமையையும் அளித்து அபிஷேகம் செய்தார்" (தி.தூ 10:38). அவரே "வரப் போகிறவர்" ஆகவும், "இஸ்ராயேல் மக்களுக்குள்ள நம்பிக்கை"(தி.தூ 28:10) யின் பொருளாகவும் விளங்கினார்.

"கடவுளின் திருமகன்" என்னும் நாமம் இயேசுக்கிறிஸ்து தமது தந்தையாகிய கடவுளோடு கொண்டுள்ள தனிப்பட்ட நித்திய உறவைக் குறிக்கின்றது, அவர் பிதாவின் ஒரே மகனும், கடவுளுமாய் இருக்கிறார். இயேசுக்கிறிஸ்து கடவுளின் திருமகன் என்பதை விசுவசிப்பது ஒருவன் கிறிஸ்தவனாய் இருப்பதற்கு அவசியமானதாகும்.

"ஆண்டவர்" "நாதர்" என்ற பெயர் அவருடைய தெய்வீக ஆதிக்கத்தைக் குறிக்கின்றது. இயேசுவை "ஆண்டவர்" "நாதர்" என்று அழைத்தல் அல்லது அறிக்கையிடுதல் அவருடைய தெய்வீகத்தை விசுவசித்தலுக்குச் சமமாகும். "பரிசுத்த ஆவியின்

ஏவுதலாலன்றி "இயேசு ஆண்டவர்" என்று யாரும் சொல்லமுடியாது" (1கொரி 12:3)

## 2. "இயேசுகிறிஸ்துநாதர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்து புனித கன்னிமரியிடமிருந்து பிறந்தார்."

### 1. இறைவனின் திருமகன் மனிதனானார்

### சுருக்கம்

கடவுளால் தீர்மானிக்கப்பட்ட காலத்தில் தேவ பிதாவின் ஏகமகனாகிய நித்திய வார்த்தையானவர், அதாவது, பிதாவோடு ஒரேபொருளான அவரது வார்த்தையும் சாயலுமானவர் மனுவுரு எடுத்தார், தமது தெய்வீக இயல்பை இழக்காமல் மனித இயல்பை எடுத்துக்கொண்டார்.

இயேசுகிறிஸ்துவுக்கு தேவசுபாவம் மனித சுபாவம் ஆகிய இரு சுபாவங்களுண்டு. அவை கலப்பின்றி இறைமகனின் ஒரே ஆளுமையில் இணைக்கப்பட்டுள்ளன.

இயேசுகிறிஸ்து தெய்வீக ஆளுமையில் உண்மையான கடவுளும் உண்மையான மனிதனுமாய் இருக்கிறார். ஆகையால், கடவுளுக்கும் மனிதருக்கும் இடையிலுள்ள ஒரே இடைநிலையாளர் அவரே.

கிறிஸ்து உண்மையான கடவுளும் மனிதனுமாய் இருக்கிறார் என்றாலும், அவருடைய மனித புத்தியும் சித்தமும் அவருடைய தெய்வீக புத்தியோடும் சித்தத்தோடும் பூரணமாக இணைந்து அவற்றிற்குக் கீழ்ப்படிந்துள்ளன.

ஆகவே, தேவசுபாவமும் மனித சுபாவமும் ஆச்சரியத்திற்குரிய முறையில் வார்த்தையானவரின் ஒரே தெய்வீக ஆளுமையில் இணைந்திருக்கும் பரம இரகசியமே மனித அவதாரமாம்.

### 2. இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்து புனித கன்னிமரியிடமிருந்து பிறந்தார்.

### சுருக்கம்

ஏவாளின் சந்ததியிலிருந்து கடவுள் கன்னிமரியாளைத் தமது திருமகனுக்குத் தாயாகத் தெரிந்துகொண்டார். "அருள் நிறைந்த அவள்" "மீட்பின் உன்னத கனியாக" (திருவழிபாடு 103) விளங்குகிறாள். தனது உற்பவத்தின் முதல் நிமிடத்திலிருந்தே அவள் சென்மபாவ மாசிலிருந்து பூரணமாகப் பாதுகாக்கப்பட்டாள். தனது நீண்ட வாழ்க்கை முழுவதிலும் சொந்தப் பாவம் எதுவுமில்லாமலே வாழ்ந்தாள்.

மரியாள் மனித அவதாரம் எடுத்த நித்திய குமாரனாகிய கடவுளின் தாய் ஆகையால், அவள் "கடவுளின் தாயாக" விளங்குகிறாள்.

"மரியாள் தனது மகனைக் கருத்தரித்த பொழுதும், அவரைப் பெற்றெடுத்த பொழுதும் அவரைப் பாலூட்டி வளர்த்தபொழுதும், என்றும் கன்னியாகவே விளங்கினாள்" (புனித அகுஸ்தீனார்). அவள் தனது உள்ளத்தில் என்றும் "ஆண்டவருடைய அடிமை" (லூக். 1:38) யாகவே விளங்கினாள்.

கன்னிமரியாள் "விசுவாசத்தாலும் கீழ்ப்படிதலாலும் மனுக்குல மீட்புக்குத் தன்னுரிமையுடன் ஒத்துழைத்தாள்" (திருச்சபை 56). தனது ஒத்துழைப்பை "முழு மனுக்குலத்தின் பெயராலேயே" (புனித அக்குவினா தோமையார்) வழங்கினார். தனது ஒத்துழைப்பால் புதிய ஏவாளும், வாழ்வோரின் தாயும் ஆனாள்.

### 3. கிறிஸ்துநாதருடைய வாழ்க்கையின் பரம இரகசியங்கள்

### சுருக்கம்

"கிறிஸ்துவின் வாழ்க்கை முழுவதும் தொடர்ச்சியான ஒரு போதனையாகவே தோன்றும், அவரது மௌனம், அருஞ்செயல்கள், செபம், மக்களிடம் அன்பு, தாழ்வுற்றோர், எளியோர் மீது தனிப்பற்று, மனிதனை மீட்க சிலுவைப்பலியை முற்றாக ஏற்றுக்கொள்ளல், இறுதியாக உயிர்த்தெழுதல், அனைத்தும் அவரது போதனையை மெய்ப்பித்தன.அவருடைய வெளிப்பாட்டின் நிறைவாயிருந்தன" (இக். மறைக்கல்வி அளித்தல் 9).

கிறிஸ்துவின் சீடர்கள் தங்களில் கிறிஸ்து உருவாகும்வரை (கலா. 4:19) தங்களை அவரைப்போல் ஆக்கவேண்டும். "இதற்காகவே, அவரைப்போல் உருவாக்கப்பெற்று அவரோடு இறந்து உயிர்த்த நாம் அவருடன் ஆட்சிசெய்யும்வரை அவரது வாழ்வின் மறை நிகழ்ச்சிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம்."(திருச்சபை 7).

இடையனோ ஞானியோ, பெத்லேமின் மாட்டுத்தொட்டிலின் முன் மண்டியிட்டு, பெலவீனமுள்ள ஒரு குழந்தையில் மறைந்திருப்பவரை வணங்கும் வரை இவ்வுலகில் இறைவனை அடைய முடியாது.

இயேசு மரியாளுக்கும் சூசையப்பருக்கும் காட்டிய கீழ்ப்படிதலாலும், பல வருடங்களாக நசரேத்தில் தாம் செய்த மதிப்பற்ற வேலையாலும், குடும்பத்தில் நாளாந்த வாழ்க்கையையும் வேலையையும் புனிதப்படுத்தும் முறையை தமது மாதிரியால் காட்டியுள்ளார். இயேசு தமது பிரசித்த வாழ்வின் ஆரம்பத்திலிருந்து, அதாவது, அவரது திருமுழுக்கிலிருந்து தமது பாடுகள் என்னும் "திருமுழுக்கால்" தாம் நிறைவேற்றவிருக்கும் ஈடேற்ற வேலைக்குத் தம்மை முற்றாகக் கையளித்த பணியாளனாகவே காட்டுகின்றார்.

வனாந்தரத்தில் நிகழ்ந்த சோதனையால் தாழ்ச்சி மிகுந்த மெசியாவாகிய இயேசு, இறைதந்தையுடைய மீட்பின் அன்புத் திட்டத்தை ஏற்று, சாத்தான்மேல்

வெற்றிகொண்டார் என்று காட்டப்படுகிறது.

கடவுளின் அரசு இவ்வுலகில் கிறிஸ்துவின் போதனையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. "இந்த அரசு கிறிஸ்துவின் சொல்லாலும், செயலாலும், பிரசன்னத்தாலும் மாந்தர்க்குத் துலங்குகிறது" (திருச்சபை 5)திருச்சபையே இந்த அரசின் வித்தும் தொடக்கமும். அதன் திறவுகோல்கள பேதுருவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கிறிஸ்துவின் உருமாற்றம் அவரது பாடுகளை முன்னிட்டு அவர்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்காகவே நிகழ்ந்தது, உயர்ந்தமலைக்கு அவர்கள் ஏறியது கல்வாரி மலைக்கு அவர் ஏறுவதற்கு அவர்களை ஆயத்தப்படுத்தியது. திருச்சபையின் தலைவராகிய கிறிஸ்து, தமது உடல் கொண்டுள்ள அருள் செல்வங்களை அருளடையாளங்கள் மூலம் காண்பிக்கிறார். "நாம் மாட்சிமை அடைவோம் என்பதற்கு அவரே நம் நம்பிக்கை" (கொலோ. 1:27).

பாவிகளால் தமக்கு உண்டாகும் எதிர்ப்பினால் (எபி. 12:3) தாம் அவல மரணத்திற்கு உள்ளாவார் என்று அறிந்திருந்தும், இயேசு சுயாதீனமாக எருசலேமுக்கு எழுந்தருளினார்.

இயேசு சிறுவர்களாலும், இருதய தாழ்ச்சி உள்ளவர்களாலும் மெசியாவாக (அரசராக) வரவேற்கப்பட்டு, பட்டணத்துள் நுழைந்தார். இயேசு எருசலேமுள் நுழைந்தது மெசியாவின் வருகையை சுட்டிக் காட்டியது. அவர் தமது மரணத்தினாலும், உயிர்ப்பினாலும் பாஸ்காவை நிறைவேற்ற அங்கு சென்றார்.

## 3. "போஞ்சியு பிலாத்துவின் அதிகாரத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டார்."

### 1இயேசுவும் இஸ்ராயேலும்
### சுருக்கம்

இயேசு சீனாய்த் திருச்சட்டத்தை அழிக்கவில்லை, ஆனால் அதைப் பூரணமாய் நிறைவேற்றி (மத். 5:17-19), அதன் கடைசிக் கருத்தை வெளிப்படுத்தி, அதற்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களைச் சீர்ப்படுத்தினார்.

இயேசு யூதருடைய யாத்திரைத் திருவிழாக்களுக்குச் சென்று, தேவாலயத்திற்குத் தகுந்த வணக்கம் செலுத்தினார். அது அவரது மறைபொருளுக்கு முற்குறியாக இருந்தது, மனிதர் மத்தியிலிருந்த இறைவனின் உறைவிடத்தைத் தனி அன்போடு நேசித்தார். தமது மரணத்திற்கும், மீட்புத்திட்டத்தின் புது யுகத்தில் பிரவேசிப்பதற்கும் முன் அடையாளமாகவே அதன் அழிவை முன்னறிவித்தார். மீட்புத் திட்டத்தில் அவரது உடலே நிரந்தர தேவாலயமாய் விளங்கும்.

பாவங்களை மன்னித்தல் போன்ற சில செயல்களைச் செய்து, தாமே மீட்பளிக்கும் இறைவன் என்று இயேசு காட்டினார்.. (யோ5:16-18) சில யூதர் அவரை மனுவுரு எடுத்த இறைவனாக ஏற்றுக்கொள்ளாமல் ( யோ1:14) "நீ மனிதனாயிருந்தும் உன்னைக் கடவுளாக்கிக் கொள்கின்றாய்" (யோ 10:33) என்றார்கள். அவர் தூஷணம் சொல்கிறார் என்று அவர்கள் மதிப்பிட்டனர்.

## 2. இயேசு சிலுவையில் அறையுண்டு மரித்தார்.
### சுருக்கம்

"மறை நூலில் உள்ளபடி கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இறந்தார்" (1கொரி. 15:3).

நமது மீட்பு இறைவன் நம்மட்டில் கொண்டுள்ள அன்பிலிருந்தே ஊற்றெடுக்கின்றது. ஏனெனில். அவரே நமக்கு அன்புசெய்து, நம் பாவங்களுக்குப் பரிகாரமாகத் தம் மகனை அனுப்பியதால்தான் அன்பின் தன்மை விளங்குகிறது" (1யோ. 4:10). "கடவுள் உலகினரின் குற்றங்களுக்குரிய கடனைக் கணிக்காமல். அவர்களைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினார்" (2கொரி. 5:19).

இயேசு எமது மீட்புக்காகத் தம்மைச் சுயாதீனமாக ஒப்புக்கொடுத்தார். இக்கொடையை கடைசி இராப்போசனத்தின்போது முற்குறியால் காட்டி, முன்னதாகவே நிறைவேற்றினார் "இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல்" (லூக். 22:19).

மனுமகன் "பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்க வந்தார்" (மத். 20:28). அதாவது, அவர் "இறுதிவரை அவர்கள்மேல் அன்புகூரலானார்" (யோ 13:1). இவ்வாறு, அவர் அவர்களுடைய முன்னோரிடமிருந்து வழிவழியாய் வந்த பயனற்ற நடத்தையினின்று அவர்களை விடுதலை ஆக்கினார் (1பேதுரு 18). "சிலுவைச்சாவையே ஏற்கும் அளவிற்கு (பிலி. 2:8) இயேசு தந்தைக்கு அன்புடன் கீழ்ப்படிந்து, "அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொண்டு, பலரை நீதிமானாக்குவார்" (இசை. 53:11) என்ற பரிகாரப் பணியை நிறைவேற்றினார் (இசை. 53:10).

## 3. இயேசு கிறிஸ்து அடக்கம் செய்யப்பட்டார்.
### சுருக்கம்

எல்லா மாந்தருடைய நன்மைக்காக இயேசு சாவுக்குட்பட்டார் (எபி. 2:9). மனுவுரு எடுத்த கடவுளின் திருமகனே மரித்து அடக்கம் செய்யப்பட்டார்.

கிறிஸ்து கல்லறையில் அடக்கப்பட்டிருந்தகாலத்தில். அவரது தெய்வீக ஆளுமை, அவரது சாவினால் பிரிக்கப்பட்டிருந்த ஆன்மாவையும் உடலையும் தொடர்ந்து தன்னோடு தனித்தனியாக இணைத்து வைத்திருந்தது. ஆகவேதான் இறந்த கிறிஸ்துவின் உடல் அழிவுற வில்லை (தி.தூ 13:37).

### 4. "பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தருளினார்"

#### 1. கிறிஸ்து பாதாளத்திற்கு இறங்கினார்.

**சுருக்கம்**

"இயேசு பாதாளத்திற்கு இறங்கினார்" என்று கூறுவதால், இயேசு உண்மையாக மரித்தார் என்றும், அவர் நமக்காக மரித்ததினால் சாவையும் "சாவைத் தன் கையில் கொண்டிருந்தவனையும் அதாவது, அலகையையும்" (எபி. 2:14) வென்று விட்டார் என்றும், விசுவாசப் பிரமாணம் அறிக்கையிடுகின்றது.

மரித்த கிறிஸ்து, அதாவது, தேவ ஆளுமையோடு இணைந்திருந்த அவரது ஆன்மா, மரித்தவர்களுடைய ஆன்மாக்கள் இருந்த பாதாளத்திற்கு இறங்கினார். தமக்குமுன் அங்கு சென்றிருந்த நீதிமான்களின் ஆன்மாக்களுக்கு பரலோகத்தின் வாசல்களைத் திறந்து விட்டார்.

#### 2. மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.

**சுருக்கம்**

உத்தானத்தின் விசுவாசம் இரு பொருள்களை அடக்கியுள்ளது. **முதலாவது,** சரித்திர ரீதியான ஒரு சம்பவத்தை அதாவது, உயிர்த்தெழுந்தவரை அவருடைய சீடர்கள் சந்தித்தனர், **இரண்டாவது,** மனித புத்திக்கு மேற்பட்ட மறைபொருளை, கிறிஸ்துவின் மனித சுபாவம் கடவுளின் மகிமையில் பிரவேசித்தது என்பதையும், வெறுமையாய் கிடந்த கல்லறையும், அங்கு கிடந்த அவருடைய அடக்கத்துணிகளும் கிறிஸ்துவின் சரீரம் கடவுளின் வல்லமையால் சாவின் அழிவிலிருந்து தப்பிவிட்டது என்பதையும் காட்டுகின்றன. உயிர்த்தெழுந்தவரைச் சந்திக்க சீடர்களை அவை ஆயத்தப்படுத்தின.

"இறந்தோரினின்று பிறந்த தலைப்பேறு" (கொலோ. 1:18) ஆகிய கிறிஸ்து நமது உத்தானத்திற்கு முதற் காரணமாக இருக்கின்றார். இப்போது நமது ஆன்மாவைப் புனிதப்படுத்துவதால், பின்பு மரித்த நமது உடலுக்கு உயிரளிப்பதனால்.

### 5. "பரலோகத்திற்கு எழுந்தருளி எல்லாம் வல்ல பிதாவாகிய சருவேசுரனுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார்"

**சுருக்கம்**

கிறிஸ்து பரலோகத்திற்கு எழுந்தருளியது இயேசுவின் மனித சுபாவம் கடவுளின் பரலோகத்தில் திண்ணமாய் நுழைந்ததைக் காட்டுகின்றது. அங்கிருந்து ஒரு நாள் உலகிற்குத் திரும்பி வருவார். இடைப்பட்ட காலத்தில அவர் நம் கண்களுக்கு மறைவாக இருக்கிறார்.

இயேசு கிறிஸ்து திருச்சபையின் தலைவராக நமக்கு முன் தந்தையின் மகிமையுள்ள பரலோக இராச்சியத்தில் பிரவேசித்துள்ளார். அவருடைய உடலின் உறுப்புகள் ஆகிய நாம், அவரோடு நித்தியமாய் இருப்போம் என்ற நம்பிக்கையோடு வாழும்படியே அதைச் செய்தார்.

பரலோக தூயகத்தில் நிரந்தரமாய் நுழைந்துள்ள இயேசுகிறிஸ்து இடைநிலையாளராக எங்களுக்காகப் பரிந்துபேசி, பரிசுத்த ஆவி தம் கொடைகளை எமக்கு என்றும் பொழிவார் என்ற நம்பிக்கையைத் தருகின்றார்.

### 6. "அவ்விடத்திலிருந்து சீவியரையும்மரித்தவரையும் நடுத்தீர்க்க வருவார்".

**சுருக்கம்**

ஆண்டவராகிய கிறிஸ்து திருச்சபை மூலம் இப்போது ஆட்சிபுரிகின்றார். ஆனால், உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் அவருடைய ஆட்சிக்கு இன்னும் உட்படவில்லை தீமையின் சக்திகள்மேல் ஒரு இறுதித் தாக்குதலின்றி கிறிஸ்துவின் அரசு பூரண வெற்றியை அடையாது.

கோதுமையோடு களைகள் வளர்வதுபோல், நன்மையோடு காலப்போக்கில் வளர்ந்த தீமைகள் மேல் நிரந்தர வெற்றி கொள்ள கிறிஸ்து உலகமுடிவில் தீர்வைநாளில் மாட்சிமையோடு வருவார்.

சீவியர்களையும் மரித்தவர்களையும் நடுத்தீர்க்க உலக முடிவில் மாட்சிமையுடன். வரும் கிறிஸ்து, இதயங்களின் அந்தரங்கங்களை வெளிப்படுத்தி, ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய செயல்களின் படியும், தேவ அருளை ஏற்றுக்கொண்டது அல்லது தள்ளிவிட்டதின்படியும் தீர்ப்பளிப்பார்.

## 3வது அத்தியாயம்: பரிசுத்த ஆவியாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.

### 1. "பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன்"

**சுருக்கம்**

"நீங்கள் இறைமக்களாய் இருப்பதனால், கடவுள் தம்மகனின் ஆவியை நம் உள்ளங்களுக்குள் அனுப்பினார். அந்த ஆவியானவர் 'அப்பா' 'தந்தாய்' எனக் கூப்பிடுகிறார்" (கலா 4:6).

தொடக்கத்திலிருந்து காலம் முடிவடையும் வரை கடவுள் தமது மகனை அனுப்பும்போது தமது ஆவியையும் அனுப்புகிறார். அவர்களின் வருகை பிரிக்கமுடியாத முறையில் இணைந்துள்ளது.

காலம் நிறைவேறியபோது கடவுளின் மக்கள் மத்தியில் கிறிஸ்துவின் வருகைக்கென நிகழ்ந்த ஆயத்தங்களை மரியாளில் பரிசுத்த ஆவி நிறைவேற்றினார்.

பரிசுத்த ஆவி அவளில் ஆற்றிய செயலால் தந்தை உலகிற்கு **இம்மனுவேலை** "நம்மோடு கடவுள்" (மத். 1:23) என்பவரை அளித்தார்.

கடவுளின் மகன் மனுவுரு எடுத்தபோது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் **"கிறிஸ்து"** (மெசியா) ஆனார்.

தமது மரணத்தினாலும் உயிர்ப்பினாலும் இயேசு ஆண்டவராகவும் மகிமையுள்ள மெசியாகவும் ஆக்கப்பட்டார் (தி.தூ. 2:36). தமது நிறைவிலிருந்து அவர் அப்போஸ்தலர் மேலும், திருச்சபை மேலும் பரிசுத்த ஆவியைப் பொழிந்தார்.

தலையாகிய கிறிஸ்து தமது அங்கத்தவர்கள்மேல் பொழிந்த பரிசுத்த ஆவியானவர் திருச்சபையைக் கட்டியெழுப்பி அதற்கு உயிரளித்து, அதைப் புனிதப்படுத்துகிறார். அது பரிசுத்த திரித்துவத்திற்கும் மாந்தருக்கும் இடையிலுள்ள உறவின் புனித அடையாளமாகும்.

### 2. "பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையையும், புனிதர்களின் சமூக உறவையும் விசுவசிக்கிறேன்".

#### 1. கடவுளின் திட்டத்தில் திருச்சபை.

**சுருக்கம்**

"திருச்சபை" என்னும் சொல்லுக்கு "திருக்கூட்டம்" என்பது கருத்து. அது கடவுளின் வார்த்தையால் கடவுளின் மக்கள் ஆக்கப்பட்டு. கிறிஸ்துவின் உடலால் ஊட்டம் பெற்று, கிறிஸ்துவின் மறைஉடல் ஆகும்படி அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்.

கடவுளின் திட்டத்தில் திருச்சபை ஓர் இலக்காகவும், ஒரு வழியாகவும் இருக்கின்றது. எவ்வாறெனில், படைப்பின்போது முற்குறியால் காட்டப்பட்டு, பழைய உடன்படிக்கையால் ஆயத்தம் செய்யப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் சொல்லாலும் செயலாலும் தொடங்கப்பட்டு, அவரது மீட்பளிக்கும் சிலுவை மரணத்தினாலும் உயிர்ப்பினாலும் உருவாக்கப்பட்டு, பரிசுத்த ஆவி பொழியப்பட்டதால் அது மீட்பின் மறைபொருளாக வெளிப்படுத்தப்பட்டது. அது உலகிலிருந்து மீட்கப்பட்ட சகல மக்களின் கூட்டமாக பரலோக மகிமையில் நிறைவு பெறும்.

திருச்சபை ஒரேநேரத்தில் காணக்கூடியதாகவும், கண்ணுக்கெட்டாததாகவும், திரு ஆட்சிச் சமுதாயமாகவும், கிறிஸ்துவின் மறை உடலாகவும் விளங்குகின்றது. அது மனித, தெய்வீக அம்சங்களால் உருவான ஒன்றாக விளங்குகிறது. இந்த மறை பொருளை விசுவாசம் மட்டுமே ஏற்க முடியும்.

திருச்சபை இவ்வுலகில மீட்பளிக்கும் அருள்சாதனமாக, அதாவது, கடவுளுக்கும் மனிதருக்கும் இடையில் உறவை ஏற்படுத்தும் அடையாளமாகவும், கருவியாகவும் விளங்குகின்றது.

#### 2. திருச்சபை - கடவுளின் மக்கள், கிறிஸ்துவின் மறை உடல், பரிசுத்த ஆவியின் ஆலயம்.

**சுருக்கம்**

"இயேசுகிறிஸ்து நம்மை எல்லா அக்கிரமத்திலிருந்தும் மீட்கவும், நம்மைத் தூயவர்களாக்கி, நற்செயல்களில் ஆர்வமுள்ள ஓரினமாகத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளவும் தம்மை நமக்காகக் கையளித்தார்" (தீத். 2:14).

"நீங்களோ தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத்திருக்கூட்டம், பரிசுத்த குலம், இறைவனுக்குச் சொந்தமான மக்கள்" (1பேதுரு 2:9)

கடவுளின் மக்கள் கூட்டத்தில் விசுவாசத்தினாலும் ஞானஸ்நானத்தினாலும் தான் சேரலாம். "இறைவனின் புதிய மக்கள் குலத்தில் சேர எல்லா மக்களும் அழைப்புப் பெறுகிறார்கள்" (திருச்சபை 13) இவ்வாறு கிறிஸ்துவில்" எல்லா மனிதரும் ஒரே குடும்பமும் ஒரே மக்களினமுமாக அமைவர்" (மறைஅறிவிப்புப்பணி 1).

திருச்சபை கிறிஸ்துவின் மறை உடலாக இருக்கிறது. மரித்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து, பரிசுத்த ஆவியினாலும், அவர் அருளடையாளங்கள் வழியாகவும் சிறப்பாகத் தேவநற்கருணையாலும் விசுவசிப்போரின் சமூகத்தை தமது மறை உடல் ஆக்குகின்றார்.

இம்மறை உடலின் ஒருமைப்பாட்டில் உறுப்பினரதும் செயல்பாட்டினதும் வேற்றுமை உண்டு. எல்லா உறுப்பினரும் ஒருவரோடு ஒருவர் இணைக்கப்பட்டுள்ளனர். விசேடமாக துன்புறுவோர், ஏழைகள், துன்புறுத்தப்படுவோர் என்பவர்கள்.

மறை உடலாகிய திருச்சபையின் தலைவர் கிறிஸ்துவே. அது அவரால், அவரில், அவருக்காகவே வாழ்கின்றது. அவர் அதிலும், அதனோடும் வாழ்கின்றார்.

திருச்சபை கிறிஸ்துவின் மணமகள். அவர் அவளை அன்பு செய்து, அவளுக்காகத் தம்மைக் கையளித்தார். அவர் அவளைத் தமது இரத்தத்தால் சுத்திசெய்தார். அவள் எல்லா இறைமக்களின் தாயாகும் வரத்தை அவர் அவளுக்கு அளித்தார்.

திருச்சபை பரிசுத்த ஆவியின் ஆலயம். பரிசுத்த ஆவியானவரே மறை உடலின் ஆன்மாவைப்போலும், அதன் உயிர் வாழ்வு, வேற்றுமைகளிடையே ஒற்றுமையாகவும், அதன் கொடைகள் அருங்கொடைகள் ஆகிய செல்வத்திற்குக் காரணராகவும் விளங்குகிறார்.

"இவ்வாறு அனைத்துலகத் திருச்சபை 'தந்தை மகன், பரிசுத்த ஆவி ஆகியோரிடையே உள்ள

ஒற்றுமையோடு இணைந்துவிட்ட ஒரு மக்கள் குலம்' (புனித சிப்பிரியன்) போல் திகழ்கிறது" (திருச்சபை 4).

### 3. "ஏக, பரிசுத்த, கத்தோலிக்க திருச்சபை."

**சுருக்கம்**

**திருச்சபை ஒன்றாய் இருக்கிறது:** அதன் ஆண்டவர் ஒருவரே, அது ஒரே ஞானஸ்நானத்தால் பிறக்கின்றது, அது ஒரே நம்பிக்கையின் பொருட்டு ஒரே ஆவியால் உயிரூட்டப்பெற்ற உடலாக விளங்குகிறது, அதன் இறுதியில் எல்லாப் பிரிவுகளும் மேற்கொள்ளப்படும்.

**திருச்சபை பரிசுத்தமாய் இருக்கிறது:** அதிபரிசுத்த இறைவனே அதை உருவாக்கினார். அதன் பத்தாவாகிய கிறிஸ்து அதைப் புனிதப்படுத்தத் தம்மைக் கையளித்தார், புனிதத்துவத்தின் ஆவி அதற்கு உயிரளிக்கின்றார். அது பாவிகளையும் உறுப்பினராகக் கொண்டிருந்தாலும், பாவமற்றதாய் விளங்குகிறது, புனிதர்களில் அதன் பரிசுத்த தனம் விளங்குகிறது, மரியாளில் அது பூரண புனிதவதியாக விளங்குகிறது.

**திருச்சபை பொதுவானதாய் இருக்கிறது:** அது விசுவாசத்தின் முழுப்பொருளை அறிவிக்கின்றது, மீட்புக்குத்தேவையான எல்லாச் சாதனங்களையும் தன்னுள் கொண்டுள்ளது, அது எல்லா மக்களுக்கும் அனுப்பப்பட்டு, எல்லா மக்களுக்கும் நற்செய்தியை அறிவிக்கிறது, அது எல்லாக் காலங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது, அது "தன்னியல்பிலேயே மறை அறிவிப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது" (மறை அறிவிப்புப் பணி 2).

**திருச்சபை அப்போஸ்தலிக்க சபையாக இருக்கிறது:** அது "தேவசெம்மறியின் பன்னிரு அப்போஸ்தலர்களை" (திருவெளிப்பாடு. 21:14) அடிக்கற்களாகக் கொண்டுள்ளது, அது ஒருபோதும் அழிந்து போகாது. அது உண்மையில் பிழையின்றி நிலைநாட்டப்பட்டுள்ளது, அதை, பேதுரு மற்ற திருத்தூதர்கள் அவர்களைத் தொடர்ந்து வரும் பரிசுத்த பாப்பு, ஆயர்குழாம் வழியாகக் கிறிஸ்து ஆண்டு நடத்துகிறார்.

"கிறிஸ்துவின் ஒரே திருச்சபையை விசுவாசப் பிரமாணத்திலே தாம் ஒரே, தூய, பொதுவான, அப்போஸ்தலிக்க திருச்சபையென்று வெளிப்படையாக அறிக்கையிடுகிறோம்... அது இவ்வுலகில் நிறுவப்பெற்றதும், ஒழுங்கு முறையில் அமைந்ததுமான ஒரு சமுகமாகக் பேதுருவின் வழி வருபவராலும், அவரோடு ஒன்றித்திருக்கும் ஆயர்களாலும் ஆளப்படும் கத்தோலிக்க மறையில்தான் உறைகிறது. இதன் அமைப்பிற்கு வெளியேயும் புனிதத்தன்மை, உண்மை எனும் அம்சங்கள் காணப்படக் கூடும்." (திருச்சபை 8).

### 4. கிறிஸ்துவின் விசுவாசிகள்: திரு ஆட்சியமைப்பு, பொது நிலையினர், அர்ப்பண வாழ்வு.

**சுருக்கம்**

"இறை ஏற்பாட்டின்படியே திருச்சபையின் விசுவாசிகள் மத்தியில் குருகுலத்தார் என்ற உரிமையுடன் அழைக்கப்படும் திருப்பணியாளரும் உள்ளனர். ஏனையோர் பொதுநிலையினர் என்று அழைக்கப்படுகின்றனர்" (தி.ச.731). இவ்விரு பிரிவைச் சேர்ந்தவர்களில் சிலர் கடவுளுக்கும் திருச்சபையின் பணிக்கும் நற்செய்தி அறிவுரைகளைக் கடைபிடிப்பதன் மூலம் அர்ப்பணித்துள்ளனர்.

தமது அரசை அறிவிக்கவும், அதை நிலைநாட்டவும் கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களையும், அவர்களைத் தொடர்ந்து வருபவர்களையும் அனுப்பினார். தமது பணியில் அவர்களுக்குப் பங்களித்தார். ஆகையால், அவர் பெயரால் பணிபுரியும் அதிகாரத்தை அவர்கள் அவரிடத்திலிருந்து பெறுகின்றனர்.

இயேசு பேதுருவை தமது திருச்சபையின் காணக்கூடிய அத்திவாரமாக ஏற்படுத்தனார். அதன் திறவுகோல்களை அவருக்குக் கொடுத்தார். புனித பேதுருவைத் தொடர்ந்து வருபவராகிய உரோமாபுரித் திருச்சபையின் ஆயரே "ஆயர் குழுவின் தலைவரும், கிறிஸ்துவின் பதிலாளரும், முழுத்திருச்சபையின் மேய்ப்பரும்" (தி.ச. 331) ஆக இருக்கிறார்.

பாப்பானவர் "இறைவனின் நியமனப்படி கிறிஸ்துவின் திருச்பையில் ஆன்மாக்களைப் பராமரிக்க ஒப்புயர்வற்ற, முழுமையான, நேரடியான, உலகம்முழுவதும் பரந்த, அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்" (திருச்சபையில் ஆயர்களின் மேய்ப்புப்பணி 2).

பரிசுத்த ஆவியினால் ஏற்படுத்தப்பட்ட ஆயர்கள் அப்போஸ்தலர்களைத் தொடர்ந்து வருகின்றனர். "தனிப்பட்ட தம் சபைகளில் ஒவ்வோர் ஆயரும் ஒற்றுமையின் காணக்கூடிய ஊற்றாகவும், அடித்தளமாகவும் அமைந்திருக்கின்றனர்" (திருச்சபை 23)

ஆயர்கள் தங்கள் உடன் உழைப்பாளராகிய குருக்களினதும் திருத்தொண்டரினதும் உதவியுடன் விசுவாசத்தைச் சரியாகப் போதிக்கவும், திரு வழிபாட்டை, சிறப்பாகத் திவ்விய நற்கருணையை நிறைவேற்றவும், தங்கள் சபைகளை உண்மை ஆயர்களாக ஆண்டு நடத்தவும் பொறுப்புள்ளவர்களாய் இருக்கின்றனர். பாப்பானவரோடும் அவர் அதிகாரத்தின் கீழும் முழுத்திருச்சபை பற்றி அக்கறை கொள்ள அவர்களுக்குப் பொறுப்புண்டு.

"உலகின் நடுவில் உலகியல் அலுவல்களிடையே

வாழ்வது பொது நிலையினருக்கு உரித்தானதொன்று, ஆகவே, கிறிஸ்தவ உணர்வு கொண்டவர்களாய், புளிக்காரம்போல உலகிலிருந்து தம் மறைப் பணியைஆற்ற இறைவனால் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்." (பொது நிலையினரின் மறை பணி 2).

**பொதுநிலையினர் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கு கொள்கின்றனர்**: அவரோடு மென்மேலும் ஒற்றுமைப்பட்டு, ஞானஸ்நானம், உறுதிப்படுத்தல் ஆகிய அருளடையாங்களின் அருளைத் தங்கள் தனி வாழ்வு, சமூக, திருச்சபை வாழ்வு ஆகிய துறைகளில் வாழ்வதால், ஞானஸ்நானம் பெற்ற எல்லாரும் புனிதத்துவதற்கு விடுக்கப்பட்ட அழைப்பை நிறைவேற்றுகின்றனர்.

பொது நிலையினர், இறைவாக்களிக்கத் தங்களுக்குள்ள அழைத்தலால். "உலகைக் கிறிஸ்தவ மனப்பான்மையால் உயிரூட்டக்" கடமைப்பட்டிருப்ப தோடல்லாமல், மனித சமூதாயத்தின் நடுவில் அனைத்திலும் கிறிஸ்துவின் சாட்சிகளாக இருக்கவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பொதுநிலையினர், இறையரசை வளர்க்கத் தங்களுக்குள்ள அழைத்தலால் தம் ஒறுத்தலாலும் புனித வாழ்வாலும் தம்மிலும் உலகிலும் உள்ள பாவ அரசை வெல்லவும் வல்லமை உள்ளவர்களாய் இருக்கிறார்கள் (திருச்சபை 36).

**கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை**, தரித்திரம், கற்பு, அமைச்சல் எனும் நற்செய்தி அறிவுரைகளை திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிரந்தர வாழ்க்கை முறைமில் பிரசித்தமாக அறிக்கைமிட்டு வாழ்வதில் தங்கியுள்ளது.

ஞானஸ்நானத்தால் இறைவனுக்கு உரியவர் ஆக்கப்பெற்றவர், அர்ப்பண வாழ்வில் அவருடைய சேவைக்கும் முழுத்திருச்சபையின் நலனுக்கும் தன்னைக் கையளித்து, எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்யவேண்டிய இறைவனுக்குத் தன்னை நேர்ந்தளிக்கிறார்.

## 5. புனிதர்களின் சமூக உறவு.

திருச்சபை "புனிதர்களின் சமூக உறவாக" இருக்கிறது. இக்கூற்று முதல் முதல் "**புனித பொருள்களை**," சிறப்பாக, நற்கருணையைக் குறிக்கின்றது. அது "கிறிஸ்துவின் ஒரே உடலாக அமையும் விசுவாசிகளின் ஒற்றுமையைக் காட்டி அதனை விளைவிக்கவும் செய்கின்றது" (திருச்சபை 3).

இக்கூற்று, "எல்லாருக்காகவும் மரித்த" கிறிஸ்துவில் ஐக்கியப்பட்டுள்ள "புனித ஆட்களை" குறிக்கின்றது. இதனால் ஒவ்வொருவரும் கிறிஸ்துவிலும் கிறிஸ்துவுக்காகவும் செய்யும் நற்செயல் அல்லது அனுபவிக்கும் துன்பம் எல்லாருக்கும் பயனளிக்கக் கூடியதாய் அமைகிறது.

"கிறிஸ்துவின்மேல் விசுவாசம் கொண்ட அனைவரும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளனர். அதாவது, இவ்வுலகில் பயணம் செய்பவர்களும், சாவின் பின் தூய்மைப்படுத்தப்படுகிறவர்களும், விண்ணகத்தில் பேரின்பத்தை அனுபவிப்பவர்களுமாகிய மூவகையினரும் ஒன்றாகக் கூடி ஒரு திருச்சபையாகின்றனர் என்று விசுவசிக்கின்றோம். இவ்வொன்றிப்பின் நிமித்தம் இறைவனினதும் அவருடைய புனிதர்களினதும் இரக்கப் பரிவு நமது செபங்களுக்கு என்றும் செவிசாய்க்கிறது என்றும் விசுவசிக்கிறோம்" (இறைமக்களின் விசுவாச அறிக்கை 30).

## 6. மரியாள் - கிறிஸ்துவின் தாயார், திருச்சபையின் அன்னை.

### சுருக்கம்

மரியாள் இறைவனின் திருமகன் தன்னில் மனுவுரு எடுத்தலுக்குத் தனது சம்மதத்தை அளித்து, அவர் செய்யப்போகும் எல்லா வேலைகளிலும் பங்குகொள்கிறாள். அவர் மீட்பரும் மறை உடலின் சிரசுமாகையால் அவள் மீட்பரின் தாயாரும் மறை உடலின் தாயாருமாய் இருக்கிறாள்.

அதிபரிசுத்த கன்னிமரியாள் இவ்வுலக வாழ்வை முடித்தபின் ஆன்மசரீரத்தோடு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள், அங்கு தமது மகனின் உத்தானத்தின் மகிமையில், அவருடைய மறை உடலின் உறுப்புக்களுடைய உத்தானத்திற்கு முன்னோடியாகப் பங்கு கொள்கிறாள்.

"கடவுளின் தாயும், புதிய ஏவாளும், திருச்சபையின் தாயுமாகிய மரியாள் விண்ணுலகில் இருந்துகொண்டே, கிறிஸ்துவின் உறுப்புக்கள் மட்டில் தனது தாய்க்குரிய அலுவலைத் தொடர்ந்து செய்து வருகிறாள்" (இறைமக்கள்விசுவாச அறிக்கை 15).

## 3. "பாவப்பொறுத்தலை விசுவசிக்கிறேன்"

### சுருக்கம்

விசுவாசப்பிரமாணம் பாவங்களின் மன்னிப்பைப் பரிசுத்த ஆவிபற்றிய விசுவாச அறிக்கையோடு தொடர்புபடுத்துகிறது. ஏனெனில், உயிர்த்தெழுந்த கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியை அளித்தபோதே பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தைக் கொடுத்தார். திருமுழுக்கே பாவங்களின் மன்னிப்புக்குரிய முதலாவதும், பிரதானமானதுமான அருளடையாளம் அது, மரித்து உயிர்த்த கிறிஸ்துவோடு எம்மை இணைத்து, பரிசுத்த ஆவியை எமக்கு அளிக்கிறது.

கிறிஸ்துவின் தீர்மானப்படி, திருமுழுக்குப் பெற்றவர்களின் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம்

திருச்சபைக்கு உண்டு. இந்த அதிகாரத்தை அது ஆயர்கள். குருக்கள் மூலம் பச்சாத்தாபம் (ஒப்புரவு) என்னும் அருளடையாளம் வழியாக வழமையாகப் பயன்படுத்தி வருகிறது.

"பாவங்களின் மன்னிப்பில் குருக்களும் அருள்சாதனங்களும் எமது மீட்பின் ஏக கர்த்தாவும், அதை அளிப்பவருமான எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கருவிகளாகவே இருக்கின்றன. அவை வழியாக அவர் நமது பாவங்களை அழித்து, நம்மை நீதிமான்களாக்கும் அருளை அளிக்கும் கருவிகளாக அவைகளைப் பயன்படுத்த விரும்புகிறார்." (உரோமைத் திருமறைப் போதகக் கைநூல் 1,11, 6).

4. **"சரீர உத்தானத்தை விசுவசிக்கிறேன்". சுருக்கம்**

"உடலே மீட்பின் அச்சாணி" (புனித அந்தியோக்கு இன்னாசியார்). உடலைப் படைத்த கடவுளை விசுவசிக்கிறோம், உடலை மீட்க வார்த்தையானவர் உடலெடுத்தார் என்று விசுவசிக்கிறோம், உடலின் படைப்பினதும் மீட்பினதும் நிறைவே உடலின் உயிர்ப்பு என்று விசுவசிக்கிறோம்.

சாவினால் ஆன்மா உடலிலிருந்து பிரிக்கப்படுகின்றது. ஆனால் உத்தானத்தில் மாற்றப்பட்ட நம் உடலை இறைவன் நம் ஆன்மாவோடு இணைத்து, அதற்கு அழிவில்லா வாழ்வை அளிக்கிறார். உயிர்ப்பிக்கப்பட்ட கிறிஸ்து என்றும் வாழ்வதுபோல, நாமும் கடைசிநாளில் உயிர்பிக்கப்படுவோம்.

நமக்கு இப்போதுள்ள உடல் உண்மையாக உயிர்ப்பிக்கப்படும் என்று விசுவசிக்கிறோம். கல்லறையில் அழிவுக்குரிய உடல் வைக்கப்படுகிறது, ஆனால் உயிர்த்தெழுவது அழியாததும் "தேவ ஆவிக்குரிய உயிர்கொண்டதும்" (1கொ.15:44).

முதற் பாவத்தின் விளைவாக மனிதன் உடலின் சாவுக்கு உள்ளானான். "மனிதன் பாவம் செய்யாதிருந்தால் இந்த உடலின் சாவு அவனைப் பாதித்திருக்க முடியாது" (இன்றைய உலகில் திருச்சபை 18).

இறைவனின் மகனாகிய இயேசு, தமது தந்தையாகிய இறைவனின் திருவுளத்திற்குச் சுதந்திரமாகவும் பூரணமாகவும் கீழ்ப்படிந்து நமக்காக மரணத்தை ஏற்றார் தமது மரணத்தால் அவர் சாவைவென்று, எல்லா மனிதருக்கும் மீட்பைப் பெறக்கூடிய நிலையை அளித்தார்.

5. **"நித்திய சீவியத்தை விசுவசிக்கிறேன்" சுருக்கம்**

ஒவ்வொரு மனிதனும் தனது மரணத்தின்பின் சீவியர்களையும் மரித்தவர்களையம் நடுத்தீர்க்கிறவராகிய கிறிஸ்துவால் நடத்தப்படும் ஒரு தனித்தீர்ப்பில் தனது என்றும் அழியாத ஆன்மாவில் தனது இவ்வுலக வாழ்வின் நித்திய சம்பாவனையைப் பெறுவான்.

கிறிஸ்துவின் அருளோடு இறக்கும் ஆன்மாக்கள் எல்லாரும்... சாவுக்குப்பின் வரும் நித்தியத்தில் கடவுளின் மக்களே என்றும், பொது உயிர்ப்பு நாளில் அவர்கள் தங்கள் உடல்களோடு மீண்டும் இணையும்போது சாவானது இறுதியாக வெற்றிகொள்ளப்படும் என்றும் விசுவசிக்கிறோம்" (இறைமக்களின் விசுவாச அறிக்கை 28)

"இயேசுவையும் மரியாளையும் விண்ணகத்தில் சூழ்ந்திருக்கும் பெரும் கூட்டம் விண்ணகத் திருச்சபையாக அமைந்து, இறைவனை அவர் இருப்பதுபோலவே தெளிவாகக் கண்டு, நித்திய பேரின்பத்தை அனுபவித்து, கிறிஸ்து தமது மாட்சிமையில் செலுத்தும் ஆட்சியில் வான தூதர்களோடு பல்வேறு படிகளில் பங்கு கொண்டு, தங்கள் சகோதரத்துவ அக்கறையினால் நமக்காகப் பரிந்துரைத்து, நமது பெலவீனத்தை உறுதிப்படுத்துகின்றனர் என்று விசுவசிக்கிறோம்" (இறைமக்களின் விசுவாச அறிக்கை 29).

இறைவனின் அருளோடும் அன்போடும், ஆனால் பூரண சுத்தியின்றி இறப்பவர்கள் நித்திய மீட்பைப்பெறுவார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருப்பினும், இறைவனின் பேரின்பத்தில் பிரவேசிப்பதற்கு வேண்டிய பரிசுத்ததனத்தை அடையும் பொருட்டு சாவின் பின் வேண்டிய சுத்திகரிப்பைப் பெறுவர்.

புனிதர்களின் சமூக உறவால் திருச்சபை மித்தவர்களைக் கடவுளின் இரக்கத்திற்கு ஒப்படைத்து, அவர்களுக்காகப் பரிந்துரைகளை, சிறப்பாக திவ்விய பூசைப்பலியை, ஒப்புக்கொடுக்கிறது.

கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி திருச்சபை "நித்திய சாவின் துக்கத்திற்குரிய, அழுகைக்குரிய நிலையை, அல்ல நரகத்தைப் பற்றி" (திருமறைப் போதகம் பற்றிய பொது வழிகாட்டி 69) விசுவாசிகளை எச்சரிக்கின்றது.

நரகத்தின் பிரதான வேதனை இறைவனிடமிருந்து நித்தியத்திற்கும் பிரிக்கபடுவதே. ஏனெனில், மனிதன் கடவுளில் மட்டுமே தனது வாழ்வையும் இன்பத்தையும் அடைய முடியும், அதற்காகவே அவன் படைக்கப்பட்டான், அதையே ஆசிக்கிறான்.

எவரும் இழந்துபோகாவண்ணம் திருச்சபை மன்றாடுகின்றது. "நாம் உம்மை விட்டுப் பிரிந்துபோக விட்டுவிடாதேயும்" எவனாவது தானாகவே தன்னை மீட்கமுடியாது என்பது உண்மையெனினும், "எல்லா மனிதரும் மீட்புப்பெற வேண்டும்" (1திமோ. 2:4) என் பதும், "கடவுளால் எல்லாம் முடியும்" (மத். 19:26) என்பதும் உண்மையே.

பரிசுத்த கத்தோலிக்க திருச்சபை விசுவசித்து உறுதியாய் அறிக்கையிடுவது யாதெனில், பொதுத்தீர்வை நாளில் எல்லாமனிதரும் தங்கள் சொந்தச் செயல்களுக்குக் கணக்குக் கொடுப்பதற்கு கிறிஸ்துவின் நீதி நிலையத்தின் முன் தங்கள் சொந்த உடல்களுடன் தோன்றுவர்.

உலக முடிவில் கடவுளின் அரசு தனது பூரண நிலையை அடையும். அப்போது நீதிமான்கள், தங்கள், உடலிலும் ஆன்மாவிலும் மகிமை யடைந்து, கிறிஸ்துவோடு என்றென்றும் அரசாள்வர். மண்ணுலகும் மாற்றம் அடையும். அப்போது நித்திய வாழ்வில் "கடவுளே அனைத்திலும் அனைத்துமாய்" (1கொரி. 15:28) இருப்பார்.

# 2ஆம் பாகம் : கிறிஸ்தவ மறைபொருளைக் கொண்டாடுதல்.

## 1வது பெரும் பிரிவு :அருளடையாளத் திட்டம்.

## 1வது அத்தியாயம்: பாஸ்கா மறைபொருள் திருச்சபையின் காலத்தில்.

### 1. திருவழிபாடும் பரிசுத்த திரித்துவமும்.

**சுருக்கம்**

திருச்சபையின் வழிபாட்டில் தந்தையாகிய கடவுள் எமக்குத் தந்த படைப்பின் எல்லாக் கொடைகளுக்காகவும், சுவீகாரப்பிள்ளைகளுக்குரிய ஆவியைத் தரும்பொருட்டு மீட்பின் கொடைகளை தமது மகன் வழியாகத் தந்தமைக்காகவும், இக் கொடைகளின் ஊற்றாகிய அவரைப் போற்றி ஆராதிக்கிறோம்.

திருவழிபாட்டில் கிறிஸ்து நிகழ்த்தும் செயல் ஒரு அருளடையாளச் செயலே: ஏனெனில், அவரது மீட்பின் மறைபொருள் பரிசுத்த ஆவியின் வல்லமையால் அதில் பிரசன்னப்படுத்தப்படுகிறது: ஏனெனில், அவரது மறை உடலாகிய திருச்சபை ஒரு அருளடையாளத்தைப் போல் (அடையாளமும் கருவியும்போல்) இருக்கிறது. அதில் பரிசுத்த ஆவி மீட்பின் மறைபொருளை வழங்குகிறார், ஏனெனில், பயணம் செய்யும் திருச்சபை தனது வழிபாட்டுச் செயல்களால் பரலோக வழிபாட்டில் முன்னோடியாக இப்போதே பங்குகொள்கிறது.

பரிசுத்த ஆவியின் வேலை திருச்சபையின் வழிபாட்டில் கிறிஸ்துவைச் சந்திக்க திருக்கூட்டத்தை ஆயத்தப்படுத்துதல், திருக்கூட்டத்தின் விசுவாசத்திற்குக் கிறிஸ்துவை ஞாபகப்படுத்தி வெளிக்காட்டுதல், கிறிஸ்துவின் மீட்பு வேலையைத் தனது மாற்றியமைக்கும் வல்லமையால் பிரசன்னப்படுத்தி நிகழச் செய்தல், திருச்சபையில் உறவு எனும் கொடையைப் பயனளிப்பதாக்குதல் என்பனவாம்.

### 2. திருச்சபையின் அருளடையாளங்களில் பாஸ்கா மறைபொருள்.

**சுருக்கம்**

அருளடையாளங்கள் கிறிஸ்துநாதரால் ஏற்படுத்தப்பட்டுத் திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்ட, அருளை அளிக்க வல்லமையுள்ள அடையாளங்கள், அவை மூலம் இறைவாழ்வு நமக்கு அளிக்கப்படுகிறது. அருளடையாளங்களில் நிறைவேற்றப்படும் காணக்கூடிய சடங்குகள் தமக்குரிய அருளை அடையாளத்தால் காட்டும் ஒவ்வொரு அருளடையாளம் வழியாக நிறைவேற்றுகின்றன.

திருச்சபை திருமுழுக்குக் குருத்துவத்தாலும், நியமனக் குருத்துவத்தாலும் அணிசெய்யப்பெற்ற குருத்துவ சபையாகவே அருளடையாளங்களை நிறைவேற்றுகிறது.

பரிசுத்த ஆவி, இறைவாக்கினாலும், அதைத் தகுந்த ஆயத்தத்துடன் ஏற்றுக்கொள்வோரின் விசுவாசத்தினாலும், அருளடையாளங்களைப் பெறப்போகிறவர்களை ஆயத்தப்படுத்துகிறார்.

அருளடையாள வாழ்க்கையின் பயன் ஒரே நேரத்தில் தனிமயமானதும் திருச்சபை மயமானதும் ஆகும். ஒரு பக்கத்தில், இப்பயன் இயேசு கிறிஸ்துவில் கடவுளுக்காக வாழும் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் உரியது, மறுபக்கத்தில், இது அன்பிலும் சாட்சியப் பணியிலும் திருச்சபை வளர்ச்சியடைவதற்கு உரியது.

## 2வது அத்தியாயம் : பாஸ்கா மறைபொருளை அருளடையாளங்கள் வழியாகக் கொண்டாடுதல்.

### 1. திருச்சபையின் திருவழிபாட்டை நிறைவேற்றுதல்.

**சுருக்கம்**

திருவழிபாடு, மறை உடலும் சிரசுமாகிய முழுக் கிறிஸ்துவினதும் பணியாகும். நம் நித்திய தலைமைக்குருவாகிய கிறிஸ்து இறைவனின் தாயாரோடும். அப்போஸ்தலரோடும், எல்லாப் புனிதர்களோடும் பரலோக அரசை அடைந்துள்ள பெரிய மானிட கூட்டத்தோடும் பரலோக வழிபாட்டை இடைவிடாமல் நிறைவேற்றுகின்றார்.

ஒரு திருவழிபாட்டு நிகழ்ச்சிக்குக் கூடியிருக்கும் முழுச்சபையும், தங்களுக்குரிய செயல்களின்படி ஒவ்வொருவரும் வழிபாடு நிறைவேற்றுகிறவர்கள் ஆகின்றனர்.

திருவழிபாடு நிறைவேற்றும் இயற்கையோடு தொடர்புள்ளவை (வெளிச்சம், நீர், நெருப்பு) மனிதவாழ்க்கையோடு தொடர்புள்ளவை (கழுவுதல், எண்ணெய் பூசுதல், அப்பம் பிட்டல்) மீட்பின் வரலாற்றுடன் தொடர்புள்ளவை (பாஸ்காமறைபொருள் சடங்குகள்) ஆகிய அடையாளங்களையும், அறிகுறிகளையும் அடக்கியுள்ளது. இந்த உலக பொருள்கள், மனித சடங்குகள் இறைவனின் ஞாபகச் செயல்கள் விசுவாச உலகில் புகுத்தப்பட்டு பரிசுத்த ஆவியின் வல்லமையால் கிறிஸ்துவின் மீட்பளிக்கும் புனிதப்படுத்தும் கருவிகள் ஆகின்றன.

**அருள்வாக்கு வழிபாடு** திருவழிபாட்டை நிறைவுபடுத்தும் ஒரு பாகம் ஆகும். அறிவிக்கப்படும் இறைவாக்கினாலும், அதற்கு விடை அளிக்கும்

விசுவாசத்தினாலும், நிறைவேற்றப்படும் வழிபாட்டின் கருத்து வெளிப்படுத்தப்படுகிறது.

கீதங்களும் இசையும் திருவழிபாட்டுச் செயலோடு நெருங்கிய தொடர்புள்ளவை. செபத்தின் அழகைக்காட்டுதல், செயல்பாட்டின் புனிதத்தன்மை, சபையினர் ஒன்றாகச் சேர்ந்து அதில் பங்கு கொள்ளல், என்பனவே அவற்றைப் பயன்படுத்துவதற்குரிய காரணங்களாக இருக்க வேண்டும்.

எங்கள் ஆலயங்களிலும் இல்லங்களிலும் உள்ள கிறிஸ்துவின் திரு உருவங்கள் எமது விசுவாசத்தைத் தூண்டி வளர்க்கும் படியே வைக்கப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவின் உருவம் வழியாக அவரையே நாம் ஆராதிக்கிறோம். இறைவனது தாயின், வானதூதரின் புனிதர்களின் உருவங்கள் வழியாக அவ்வுருவங்கள் குறிப்பவர்களுக்கு வணக்கம் செலுத்துகிறோம்.

**"ஆண்டவரின் நாள்"** ஆகிய ஞாயிறு நாள் நற்கருணைக் கொண்டாட்டத்திற்குரிய பிரதான நாள். ஏனெனில், அது கிறிஸ்துவின் உயிர்ப்பு நாள். அது திருவழிபாட்டுக் கூட்டத்திற்குரிய முதற்தரமான நாள், கிறிஸ்தவ குடும்பத்தின் நாள், மகிழ்ச்சிக்கும் வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்கும் உரிய நாள். இந்நாளே திருவழிபாட்டு ஆண்டு முழுவதற்கும் அடிப்படையாகவும் மையக்கருவாகவும் துலங்குகிறது (திருவழிபாடு 106).

"கிறிஸ்துவின் மனுவுருவேற்கை, பிறப்பு ஆகியவற்றிலிருந்து தொடங்கி, அவர் தம் விண்ணேற்றம், தூய ஆவியின் வருகைநாள் புனித நம்பிக்கையையும் ஆண்டவரின் வருகையையும் எதிர்பார்த்தல் ஆகியவை முடிய ஓர் ஆண்டுக்கால வட்டத்துக்குள் கிறிஸ்துவின் மறை பொருள் முழுவதையும் திருச்சபை படிப்படியாக வெளிப்படுத்துகிறது" (திருவழிபாடு 102)

**புனிதர்களை**, முதல்முதல் இறைவனின் புனித அன்னையையும், அவளின் பின் அப்போஸ்தலர், வேதசாட்சிகள், மற்றப் புனிதர்கள் ஆகியோரையும், திருவழிபாட்டு ஆண்டில் குறித்த நாட்களில் இவ்வுலக திருச்சபை நினைவுகூர்ந்து தான் பரலோக வழிபாட்டோடு இணைந்திருப்பதைக் காட்டுகிறது, கிறிஸ்து தமது மகிமையடைந்த உறுப்பினரில் மீட்பை நிறைவேற்றியமைக்கு அவரை மகிமைப்படுத்துகிறது, அவர்களின் முன்மாதிரி பிதாவை நோக்கிச்செல்லும் பயணத்தில் அதை ஊக்குவிக்கிறது.

**திருப்புகழ் மாலை** வழிபாட்டை நிறைவேற்றும் விசுவாசிகள், சங்கீதங்கள், இறைவாக்குத் தியானம், கீர்த்தனைகள், ஆசிச்செபங்கள் ஆகியவை மூலம் நம் உன்னதகுருவாகிய கிறிஸ்துவோடு தங்களை இணைக்கின்றனர். இவ்வாறு பரமபிதாவுக்கு அவர் ஒப்புக்கொடுக்கும் முடிவில்லாத பொதுச் செபத்துடன் தங்கள் செபத்தை இணைத்து முழு உலகின்மேல் பரிசுத்த ஆவி என்னும் கொடையை இரந்து நிற்கின்றனர்.

**கிறிஸ்துவே கடவுளின் உண்மை ஆலயம்** அவரில்தான் கடவுளின் மகிமை குடிகொண்டுள்ளது." கடவுளின் அருளால் கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியின் ஆலயங்கள் ஆகின்றனர். இந்த உயிருள்ள கற்களைக் கொண்டே திருச்சபை என்னும் ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

திருச்சபையின் இவ்வுலக நிலையில் கிறிஸ்தவ சமூகங்கள் ஒன்றாகக் கூடுவதற்கு இடங்கள் தேவை : நாம் காணக்கூடிய ஆலயங்கள் பரிசுத்தமான இடங்கள், யாத்திரிகளாகிய நாம் நோக்கிச் செல்லும் பரிசுத்த நகரமாகிய பரலோக யெருசலேமின் ஞாபகச் சின்னங்கள்.

இவ்வாலயங்களில்தான் திருச்சபை பரிசுத்த திரித்துவத்தின் மகிமைக்காகப் பிரசித்த வழிபாடு செலுத்துகிறது, கடவுளின் வார்த்தையைக் கேட்டு அவர் புகழைப் பாடுகிறது, தனது செபத்தை ஒப்புக்கொடுத்து அருள்சாதனவடிவில் சபையின் மத்தியில் பிரசன்னமாயிருக்கும் கிறிஸ்துவின் பலியை நிறைவேற்றுகிறது இவ்வாலயங்கள் விசுவாசிகளின் தியானத்திற்கும் தனிப்பட்ட செபத்திற்குமுரிய இடங்களாகவும் அமைகின்றன.

## 2. வழிபாட்டில் வேற்றுமையும் மறைபொருளில் ஒற்றுமையும்.

### சுருக்கம்

திருச்சபை எங்கு உள்ளதோ, ஒருபுறத்தில் அங்குள்ள பண்பாட்டை அதற்கு முற்றாக அடிபணியாமல், தனது திருவழிபாட்டில் பயன்படுத்துவது முறையே : மறுபுறத்தில் வழிபாடு பண்பாட்டை உருவாக்கி வளர்க்கிறது.

திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட திருவழிபாட்டு முறைகள் அல்லது திருச்சடங்கு முறைகள், கிறிஸ்துவின் ஒரே மறைபொருளை வெவ்வேறு அடையாளங்களால் காட்டி, அளிப்பதால், திருச்சபையின் பொதுத்தன்மையைக் காட்டுகின்றன.

திருவழிபாட்டு முறைகளின் ஒற்றுமையை உறுதிப்படுத்துவது, அவை அப்போஸ்தலருடைய பாரம்பரியத்திற்குப் பிரமாணிக்கமுள்ளவையாய் இருப்பதே. அதாவது, அது அப்போஸ்தலரின் வழியாகப் பெறப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்ட விசுவாச அருளடையாளங்களிலும் உள்ள ஒற்றுமையே ஆகும்.

**2வது பெரும்பிரிவு : திருச்சபையின் ஏழு அருளடையாளங்கள்.**

**1வது அத்தியாயம் : கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத்திற்குரிய அருளடையாளங்கள்**

### 1. திருமுழுக்கு என்னும் அருளடையாளம்

**சுருக்கம்**

கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கம் மூன்று அருளடையாளங்களால் நிறைவு பெறுகின்றது. அவை: புதுவாழ்வின் தொடக்கமாகிய **திருமுழுக்கு**, அதை உறுதிப்படுத்தும் **உறுதிப்படுத்தல்**, கிறிஸ்துவின் சீடன் கூடிய மாற்றம் அடையும்படி அவருடைய உடலாலும் இரத்தத்தாலும் அவனுக்கு உணவூட்டும் **தேவநற்கருணை** என்பனவாம்.

"நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள்" (மத். 28:19:20)

திருமுழுக்கு கிறிஸ்துவில் புதுவாழ்வுக்குப் பிறப்பு ஆகும். ஆண்டவருடைய சித்தத்தின்படி, மீட்புக்குத் திருச்சபை அவசியமாயிருப்பதுபோல, திருமுழுக்கும் அவசியம். அது நம்மைத் திருச்சபையில் சேர்க்கிறது.

திருமுழுக்கைப் பெறப்போகிறவரை நீரில் அமிழ்த்தி அல்லது அவரது தலைமேல் நீரை ஊற்றி, அதிபரிசுத்த திரித்துவமாகிய பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயர்களைச் சொல்லி வேண்டுதல் செய்வதே திருமுழுக்கு அளிப்பதற்கு அவசியமான சடங்கு ஆகும்.

திருமுழுக்கின் பயன் அல்லது திருமுழுக்கின் அருள் ஞானச்செல்வம் நிறைந்த ஒன்றாகும். அது சென்ம பாவத்தினதும், தனது சொந்தப் பாவங்கள் அனைத்தினதும் மன்னிப்பு, மனிதன் புதுவாழ்வுக்குப் பிறந்து பரம தந்தையின் சுவிகாரப்பிள்ளையாகுதல், கிறிஸ்துவின் உறுப்பும் பரிசுத்த ஆவியின் ஆலயமும் என்பவற்றை அடக்கியுள்ளது. திருமுழுக்குப் பெற்றவர் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையில் சேர்க்கப்பட்டு, கிறிஸ்துவின் குருத்துவத்திலும் பங்குகொள்கிறார்.

திருமுழுக்கு ஆத்துமத்தில் **ஓர் அழியாத ஞானமுத்திரையைப் பதிக்கிறது**. திருமுழுக்குப் பெற்றவர் இம் முத்திரையால் திருமறை வழிபாட்டிற்கு அர்ப்பணிக்கப்படுகிறார். இம்முத்திரையின் காரணமாகவே ஒருவர் திருமுழுக்கை ஒரு முறைக்குமேல் பெற முடியாது.

விசுவாசத்திற்காகச் சாவை ஏற்றுக்கொள்வோர், திருமுழுக்கு ஆயத்தக்காரர், திருவருளின் ஏவுதலால் கடவுளை உண்மையாகத் தேடி அவருடைய சித்தத்தை நிறைவேற்ற முயலுவோர் ஆகியவர்கள் திருமுழுக்கைப் பெறாதிருந்தாலும் மீட்பை அடைவார்கள் (திருச்சபை 16)

மிகப்பழைய காலத்திலிருந்தே குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஏனெனில், இறைவனின் ஒரு கொடையும் அருளுமாகிய அதைப் பெறுவதற்கு எவ்வித மானிடத் தகைமையும் தேவையில்லை, திருச்சபையின் விசுவாசத்திலேயே குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்படுகிறது.

திருமுழுக்குப் பெறாமல் மரிக்கும் குழந்தைகளின் மீட்புக்காக இறை இரக்கத்தில் நம்பிக்கை வைத்து மன்றாடும்படி திருவழிபாடு நம்மை அழைக்கின்றது.

தேவை ஏற்படும்போது, திருச்சபை செய்வதையே தான் செய்யப் போவதாகிய கருத்தைக்கொண்டு எவரும் திருமுழுக்குப் பெற இருப்பவருடைய தலைமேல் தண்ணீரை ஊற்றி, "பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் நான் உனக்குத் திருமுழுக்கு அளிக்கிறேன்" என்றுகூறி திருமுழுக்குக் கொடுக்கலாம்.

### 2. உறுதிப்படுத்தல் என்னும் அருளடையாளம்

**சுருக்கம்**

"கடவுளின் வார்த்தையைச் சமாரியர் ஏற்றுக்கொண்டதை எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு பேதுருவையும் யோவானையும் அவர்களிடம் அனுப்பினர். அவர்கள் போய், சமாரியர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர்களுக்காக வேண்டினர். ஏனெனில், அதுவரையில் அவர்களில் ஒருவர்மீதும் பரிசுத்த ஆவி இறங்கவில்லை. ஆண்டவராகிய கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு மட்டுமே பெற்றிருந்தனர். ஆதலின் அப்போஸ்தலர் அவர்கள் மீது கைகளை விரிக்கவே, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள்" (தி.தூ 8:14-17).

உறுதிப்படுத்தல் திருமுழுக்கின் அருளைப் பூரணப்படுத்துகிறது. இவ்வருளடையாளமே **பரிசுத்த ஆவியை நமக்கு அளிக்கிறது**. இதனால் நாம் தேவமக்கள் தன்மையில் மிக ஆழமாக வேரூன்றுகிறோம், கிறிஸ்துவோடு மிக உறுதியாக இணைக்கப்படுகிறோம், திருச்சபையோடு நமக்குள்ள தொடர்பு மிகவும் உறுதிப்படுத்தப்படுகிறது, அதன் பணியில் அது நம்மைக் கூடுதலாக இணைக்கிறது, வார்த்தையினாலும், செயல்களினாலும் கிறிஸ்தவ விசுவாசத்திற்குச் சாட்சியம் அளிக்க அது நமக்கு உதவி அளிக்கிறது.

உறுதிப்படுத்தல் திருமுழுக்கைப் போல் கிறிஸ்தவனின் ஆன்மாவில் ஒரு அழியாத ஞான முத்திரையைப் பதிக்கிறது. ஆகையால்தான்

இவ்வருளடையாளத்தை வாழ்க்கையில் ஒருமுறை மாத்திரமே பெற முடியும்.

கீழைத் திருச்சபையில் இவ்வருளடையாளம் திருமுழுக்குக்குப்பின் உடனடியாக அளிக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து தேவநற்கருணை அளிக்கப்படுகிறது. இப்பாரம்பரியம் இம் மூன்று அருளடையாளங்களின் ஒற்றுமையைக் காட்டுகிறது. இலத்தீன் திருச்சபையில் ஒருவர் புத்திவிபரம் அடைந்த பின்தான் உறுதிப்படுத்தல் அளிக்கப்படுகிறது. இதனால் திருச்சபையோடு அதற்குள்ள தொடர்பு வெளிக்காட்டப்படுகிறது.

உறுதிப்படுத்தல் பெறப்போகிறவர் புத்தி விபரம் அடைந்தவராயிருந்தால் விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். அருள் நிலையில் இருக்கவேண்டும். அருளடையாளத்தைப் பெறக் கருத்துள்ளவராகவும், தான் வாழும் கிறிஸ்தவ சமூகத்திலும், இவ்வுலக காரியங்களிலும் கிறிஸ்துவின் சீடராகவும் சாட்சியாகவும் வாழ மனமுள்ளவராகவும் இருக்கவேண்டும்.

உறுதிப்படுத்தலுக்கு அவசியமான வெளிச்சடங்கு இலத்தீன் திருச்சபையில் உறுதிப்படுத்தல் அளிப்பவர் திருமுழுக்குப் பெற்றவருடைய தலை மீது தனது கைகளை வைத்தலிலும் பரிசுத்த பரிமள எண்ணெயால் நெற்றியில் சிலுவை அடையாளம் வரைந்து, "பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெற்றுக்கொள்: பரமதந்தையின் உன்னத கொடை அவரே" என்ற வாக்கியத்தைக் கூறுவதிலும் தங்கி உள்ளது.

கீழைத் திருச்சபைச் சடங்குமுறையில் கைகளைத் தலைமேல் வைப்பதிலும், நெற்றியிலும் புலன்களுக்குரிய உறுப்புகளிலும் பரிமள எண்ணெயால் பூசுதலும் "பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெற்றுக்கொள்" என்ற வாக்கியத்தை (பிசன்ரைன் - Bysantine - சடங்கு முறையில்) கூறுவதிலும் தங்கியுள்ளது.

உறுதிப்படுத்தல் திருமுழுக்கோடு சேர்ந்துக் கொடுக்கப்படாமல் தனியாகக் கொடுக்கப்படும்போது திருமுழுக்கோடு அதற்குள்ள தொடர்பு திருமுழுக்கு வாக்குறுதிகள் புதுப்பிக்கப்படுவதால் காட்டப்படுகிறது.

தேவநற்கருணைப் பலியின்போது உறுதிப்படுத்தல் நிறைவேற்றப்படுவது கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத்திற்குரிய மூன்று அருளடையாளங்களும் ஒற்றுமையாக இணைந்திருப்பதைக் காட்ட உதவுகிறது.

### 3. தேவநற்கருணை என்னும் அருளடையாளம் சுருக்கம்

இயேசு கூறினார், "நானே வானின்று இறங்கி வந்த உயிருள்ள உணவு. இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான். . . என் தசையைத் தின்று, என் இரத்தத்தைக் குடிப்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான்... அவன் என்னில் நிலைத்திருக்கிறான் நானும் அவனில் நிலைத்திருக்கிறேன்" (யோ. 6:51,54 & 56)

**தேவநற்கருணையே திருச்சபையின் வாழ்வின் இருதயமும் உச்சக்கட்டமும்.** ஏனெனில், அதில் கிறிஸ்து திருச்சபையையும், அதன் உறுப்பினர்களையும் தாம் பிதாவுக்குச் சிலுவையில் ஒரு முறை ஒப்புக் கொடுத்த புகழ்ச்சிப் பலியிலும் நன்றிப் பலியிலும் சேர்த்துக் கொள்கிறார். இப்பலி வழியாக மறை உடலாகிய திருச்சபைக்கு மீட்பின் அருள்களை வழங்குகிறார்.

தேவநற்கருணைக் கொண்டாட்டம் பின்வரும் பாகங்களை எப்போதும் கொண்டுள்ளது. இறைவார்த்தை அறிவிப்பு, தந்தையாகிய இறைவன் அளித்த சகல நன்மைகளுக்காகவும், சிறப்பாகத் தமது திருமகனை நமக்கு அளித்ததற்காகவும் அவருக்கு நன்றி கூறுதல், அப்பத்தையும் இரசத்தையும் ஆசீர்வதித்தல், ஆண்டவருடைய திரு உடலையும் இரத்தத்தையும் அருந்தித் திருவழிபாட்டு விருந்தில் பங்கு கொள்ளல் என்பனவாம் இப்பிரிவுகள் எல்லாம் ஒன்றாகச்சேர்ந்து ஒரே வழிபாட்டுச் செயலை உருவாக்குகின்றன.

**தேவநற்கருணை கிறிஸ்துவுடைய பாஸ்காவின் ஞாபகமாகும்.** அதாவது, கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம், உயிர்ப்பு ஆகியவைகளால் நிறைவேறப்பட்ட மீட்புப்பணி திருவழிபாட்டுச் செயலால் பிரசன்னப்படுத்துவதாகும்.

புதிய ஏற்பாட்டின் நித்திய தலைமைக்குருவாகிய கிறிஸ்து தாமே பலி ஒப்புக்கொடுக்கும் குருவின் பணிமூலம் திவ்விய நற்கருணைப்பலியை ஒப்புக்கொடுக்கிறார். அப்ப இரசக் குணங்களில் உண்மையாகப் பிரசன்னமாயிருக்கும் அதே கிறிஸ்துவே நற்கருணைப் பலியின் காணிக்கையாகவும் இருக்கிறார்.

குருப்பட்டம் முறையாகப் பெற்றவர்கள் மாத்திரமே தேவநற்கருணைச் சடங்கிற்குத் தலைமை தாங்கி, அப்பத்தை ஆண்டவருடைய உடலாகவும், இரசத்தை அவருடைய இரத்தமாகவும் திருநிலைப்படுத்த முடியும்.

தேவநற்கருணை அருளடையாளத்திற்கு அவசியமான அடையாளங்கள் பரிசுத்த ஆவியின் ஆசீரைப் பெற்றுள்ள கோதுமை அப்பமும் முந்திரிகை இரசமுமாகும். அவற்றைத் திருநிலைப்படுத்த இயேசு கடைசி இராப்போசனத்தின் போது உச்சரித்த அதே வார்த்தைகளைக் குருவானவரும் உச்சரிக்கிறார், "இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல்" . . . "இது உங்களுக்காகச் சிந்தப்படும் என் இரத்தத்தின் கிண்ணம்" (லூக், 22:19 &20)

திருநிலைப்படுத்தலினால் அப்பமும்இரசமும் கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் பொருள் உருமாற்றம் பெறுகின்றன. திருநிலைப்படுத்தப்பட்ட அப்ப இரசக் குணங்களில் உயிருள்ள, மகிமையுள்ள கிறிஸ்து

தாமே உண்மையாக, நிச்சயமாக, பொருள்மய முறையில், தமது உடலோடும், இரத்தத்தோடும், ஆத்துமத்தோடும் தேவ சுபாவத்தோடும் பிரசன்னமாய் இருக்கிறார். (திரிதெந்தீன் பொதுச் சங்கம்)

திருப்பலி என்ற முறையில் தேவநற்கருணை சீவியருடையவும் மரித்தவருடையவும் பாவங்களுக்குப் பரிகாரமாகவும், இறைவனிடமிருந்து ஞான நன்மைகளையும் உலக நன்மைகளையும் பெறும் பொருட்டும் ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

கிறிஸ்துவைத் தேவநற்கருணையில் ஆன்ம உணவாகப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர் தான் சாவானபாவ நிலையில் இருக்கிறார் என்று உணர்ந்தால் ஒப்புரவு அருளடையாளம் மூலம் பாவமன்னிப்புப் பெறாமல் தேவநற்கருணையைப் பெறமுடியாது.

கிறிஸ்துவின் உடலிலும் இரத்தத்திலும் பங்குகொள்வதால் நற்கருணை பெறுபவர் ஆண்டவரோடு கொண்டுள்ள ஞான உறவு வளர்ச்சி அடைகிறது. அவருடைய அற்ப பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன, கனமான பாவங்களில் நின்று அவர் பாதுகாக்கப்படுகின்றார். தேவநற்கருணை பெறுபவருக்கும் கிறிஸ்துவுக்கு மிடையிலுள்ள அன்புறவு உறுதியடைகிறபடியால் இவ்வருளடையாளத்தைப் பெறுவதால் கிறிஸ்துவின் மறை உடலாகிய திருச்சபையின் ஒற்றுமை உறுதிப்படுத்தப்படுகிறது.

விசுவாசிகள் நற்கருணைப் பலியில் பங்குகொள்ளும் நாட்களில் திவ்விய பலிவிருந்திலும் பங்குகொள்ளும்படி திருச்சபை அவர்களை ஊக்குவிக்கிறது. வருடத்தில் ஒருமுறை என்றாலும் நற்கருணை விருந்தில் பங்குகொள்ள வேண்டும் என்றும் சட்டம் விதித்துள்ளது.

தேவநற்கருணை என்னும் அருளடையாளத்தில் இறைவனின் மகனாகிய கிறிஸ்துநாதர் தாமே பிரசன்னமாய் இருப்பதால், அது **ஆராதனை என்னும் வழிபாட்டிற்கு உரியதாகும்**. "பீடத்திலுள்ள அதி பரிசுத்த அருளடையாளத்தை தரிசித்தல் நம் ஆண்டவராகிய கிறிஸ்துவை ஆராதிக்க நமக்குள்ள கடமையை நிறைவேற்றுவதாகவும், "அவருக்கு நன்றி கூறி அவரை அன்புசெய்வதற்கு அறிகுறியாகவும் அமைகிறது" ("விசுவாசத்தின மறைபொருள்")

இவ்வுலகை விட்டுத் தந்தையிடம் சென்ற கிறிஸ்துநாதர், தந்தையிடம் நாம் மகிமை அடைவோம் என்ற உறுதிப்பாட்டைத் தேவநற்கருணையில் அளிக்கிறார். அவருடைய பலியில் பங்குபற்றுதல் நம்மை அவருடைய இருதயத்தோடு இணைக்கிறது, இவ்வாழ்க்கையின் நீண்ட யாத்திரையில் நமக்கு உறுதி அளிக்கிறது, நித்திய வாழ்வை ஆசிக்கச் செய்து, பரலோக திருச்சபையோடும், பரிசுத்த கன்னிமரியாளோடும்,எல்லா புனிதர்களோடும் நம்மை இணைக்கிறது.

## 2வது அத்தியாயம் : குணப்படுத்தலுக்குரிய அருளடையாளம்

### 1. பச்சாத்தாபத்திற் கும் ஒப்புரவுக்குமுரியஅருளடையாளம்

### சுருக்கம்

பாஸ்கா விழாவின் மாலை இயேசு அப்போஸ்தலர்களிடையே தோன்றி, அவர்கள்மேல் ஊதி, "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவை மன்னிக்கப்பெறும். எவருடைய பாவங்களை மன்னியாது விடுவீர்களோ அவை மன்னிப்பின்றி விடப்படும்" என்றார் (யோ20,22-23)

திருமுழுக்கின் பின் கட்டிக்கொள்ளப்பட்ட பாவங்களின் மன்னிப்பு **பச்சாத்தாபத்தின், ஒப்புரவின் அருளடையாளம்** என்று அழைக்கப்படும் ஒரு விசேட அருளடையாளத்தால் அளிக்கப்படுகிறது.

பாவம் செய்பவன் இறைவனுக்குரிய மகிமையையும் அன்பையும், இறைவனின் பிள்ளையாயிருக்க அழைக்கப்பட்டுள்ள தனது மனித மகிமையையும், திருச்சபையின் உயிருள்ள கல்லாயிருந்து வளர்க்கவேண்டிய அதன் ஞான நன்மையையும் பங்கப்படுத்துகிறான்.

விசுவாசக் கண்கொண்டு பார்க்கும்போது, பாவிகளுக்கும், திருச்சபைக்கும், முழு உலகிற்கும், பாவத்தைப்போன்ற பெரிய தீமையும், தீய விளைவுகளை உண்டுபண்ணுவதும் வேறு எதுவுமில்லை.

இறைவனோடுள்ள அன்புறவை பாவத்தால் இழந்தபின் அதை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு மனிதரின் மீட்புப்பற்றி நிறைந்த இரக்கமும் அக்கறையுமுள்ள இறைவனின் அருளிலிருந்து வரும் தூண்டுதல் வேண்டும் இவ்விலைமதிக்க முடியாத கொடையை நாமும் மற்றவர்களும் பெறுவதற்கு அவரிடம் மன்றாடவேண்டும்.

இறைவனிடம் திரும்புதல், மனமாற்றம், **பச்சாத்தாபம்** என்று அழைக்கப்படுகிறது. கட்டிக்கொண்ட பாவங்களுக்குத் துக்கப்பட்டு அவற்றை வெறுப்பதைவிட, இனிமேல் பாவம் செய்வதில்லை என்ற உறுதியான தீர்மானத்தை எடுப்பதையும் அது அடக்கியுள்ளது, ஆகையால், மனமாற்றம் இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும் அடக்கியுள்ளது. அது இறைவனின் இரக்கத்தில் கொண்டுள்ள நம்பிக்கையால் ஊட்டம் பெறுகிறது.

ஒப்புரவு அருளடையாளம் மனந்திரும்புபவரின் மூன்று செயல்களையும், குரு பாவமன்னிப்பு அளித்தலையும் அடக்கியுள்ளது மனந்திரும்புவரின் மூன்று செயல்கள் பின்வருவனவாகும் : செய்த பாவங்களுக்காகத் துக்கப்படுதல், அவற்றையும் அவற்றிற்குப் பரிகாரம் செய்ய மனம் இருப்பதையும் குருவிடம் அறிக்கையிடுதல், அவர்

குறிக்கும் பரிகாரச் செயல்களைச் செய்தல், என்பன.

மனஸ்தாபம் விசுவாச முகாந்திரங்களால் உருவாக்கப்பட்டதாய் இருக்க வேண்டும் அது இறைவன் மட்டிலுள்ள அன்பினால் உருவாகினால் **உத்தம மனஸ்தாபம்** எனப்படும் அது வேறு முகாந்திரங்களால் உருவாகினால் குறைந்த மனஸ்தாபம் எனப்படும்.

இறைவனோடும் திருச்சபையோடும் ஒப்புரவு அடைய விரும்புகிறவர் தனது மனச்சாட்சியைக் கவனமாய்ச் சோதித்துப்பார்த்து, பாவ சங்கீர்த்தனத்தில் இன்னும் அறிக்கையிடாத எல்லாச் சாவான பாவங்களையும் குருவிடம் அறிக்கையிட வேண்டும், அற்ப பாவங்களை அறிக்கையிடுதல் அவசியமில்லை யெனினும் அவற்றையும் அறிக்கையிடும்படி திருச்சபை சிபாரிசு செய்கிறது.

பாவ சங்கீர்த்தனம் கேட்கும் குரு பாவங்கள் ஏற்படுத்திய தீய விளைவுகளுக்குப் பரிகாரம் செய்வதற்கும், கிறிஸ்துவின் சீடனுக்குரிய வாழ்க்கை முறையை மீண்டும் நிலைநாட்டுவதற்கும் தேவையான சில முயற்சிகளைச் செய்யும்படி பாவ அறிக்கை செய்தவருக்குக் கட்டளையிடுவார்.

திருச்சபையின் ஆட்சியதிகாரம் உள்ளவரிடமிருந்து பாவங்களுக்கு மன்னிப்பளிக்க அதிகாரம் பெற்ற குருக்கள் மட்டுமே கிறிஸ்துவின் பெயரால் பாவங்களுக்கு மன்னிப்பு அளிக்க முடியும்.

பச்சாத்தாபம் அல்லது ஒப்புரவு அருளடையாளம் அளிக்கும் ஞான விளைவுகள் பின்வருவனவாகும்:

1. இறைவனோடு ஒப்புரவாகுதல். இதனால் மனம் வருந்தியவன் இறைவனின் அருளைத் திரும்பிப்பெறுகிறான்.
2. திருச்சபையோடு ஒப்புரவாகுதல்.
3. சாவான பாவங்களுக்குரிய நித்திய தண்டனை ஓரளவென்றாலும் மன்னிக்கப்படுதல்.
4. பாவத்தின் விளைவாகிய முடிவுள்ள தண்டனை மன்னிகக்ப்படுதல்.
5. மனச்சாட்சியின் சமாதானமும் அமைதியும், ஞான ஆறுதலும்.
6. கிறிஸ்தவ போராட்டத்திற்குரிய ஞான வல்லமைகள் வளர்தல்.

இறைவனோடும் திருச்சபையோடும் ஒப்புரவு அடைதற்குத் தனது சாவான பாவங்களை எல்லாம் தனிப்பட்ட முறையில் குருவுக்கு அறிக்கையிட்டு அவரிடம் மன்னிப்புப் பெறுவதே ஒரே சாதாரண வழியாகும்.

பலன்களால் விசுவாசிகள் தமக்கும் உத்தரிப்புத் தலத்திலுள்ள ஆன்மாக்களுக்கும் பாவத்தின் விளைவாக வரும் முடிவுள்ள தண்டனைக்கு மன்னிப்புப் பெறமுடியும்.

## 2. நோயில் பூசுதல் என்னும் அருளடையாளம். சுருக்கம்

"உங்களுள் ஒருவன் நோயுற்றிருந்தால் அவன் திருச்சபையின் மூப்பர்களை அழைக்கட்டும், அவர்கள் ஆண்டவர் பெயரால் அவன்மீது எண்ணெய் பூசி, அவனுக்காகச் செபிப்பர். விசுவாசமுள்ள செபம் நோயாளியைக் குணமாக்கும். ஆண்டவர் அவனை எழுப்பிவிடுவார். அவன் பாவம் செய்தவனாயிருந்தால் மன்னிப்பு பெறுவான்" (யாக். 5:14-15).

நோயில் பூசுதல் அருளடையாளத்தின் நோக்கம் கடும் நோயினால் அல்லது வயோதிபத்தினால் கஷ்டப்படும் கிறிஸ்தவனுக்கு ஒரு விசேட அருளை அளிப்பதே.

ஒரு கிறிஸ்தவன் நோயின் அல்லது வயோதிபத்தின் காரணமாக மரண ஆபத்திற்குரிய நிலையை அடையும்போது, நோயில் பூசுதலைப் பெற்றுக்கொள்வதற்கு அது தகுந்த காலமாகும்.

ஒரு கிறிஸ்தவன் கடும் நோயினால் பீடிக்கப்படும் ஒவ்வொரு முறையும் நோயில் பூசுதலைப் பெற்றுக் கொள்ளலாம். நோயில் பூசுதலைப் பெற்றபின் நோய் கடுமையாகினால், அதை மீண்டும் பெற்றுக்கொள்ளலாம்.

குருக்கள் (சாதாரண குருக்களும், ஆயர்களும்) மாத்திரமே நோயில் பூசுதலை அளிக்கமுடியும். அதை நிறைவேற்றுவதற்கு ஆயரால் மந்திரிக்கப்பட்ட அல்லது, தேவை ஏற்படும்போது, அருளடையாளத்தை அளிக்கும் குருவினால் மந்திரிக்கப்பட்ட எண்ணெய் பயன்படுத்தப்பட வேண்டும்.

இவ்வருளடையாளத்தை நிறைவேற்றுவதற்கு அவசியமான சடங்கு, (இலத்தீன் திருச்சபைச் சடங்கு முறையில்) நோயாளியின் நெற்றியையும் கரங்களையும், (கீழைத் திருச்சபைச் சடங்கு முறையில்) உடலின் வேறு சில பாகங்களையும் திருஎண்ணெயால் பூசுவதிலும், இவ்வருட்சாதனத்தின் விசேட அருளை வேண்டி அதை அளிக்கும் குருவினால் சொல்லப்படும் செபத்திலும் தங்கியுள்ளது.

நோயில் பூசுதல் அருளடையாளத்தின் விசேட அருள் பின்வரும் விளைவுகளை ஏற்படுத்துகிறது.

1. நோயாளியை அவருடையவும், முழுத் திருச்சபையுடையவும் நன்மைக்காகக் கிறிஸ்துவின் பாடுகளோடு இணைக்கிறது.
2. நோயின் அல்லது வயோதிபத்தின் வருத்தங்களைக் கிறிஸ்தவ முறைப்படி தாங்கிக்கொள்ள உறுதியையும், அமைதியையும். துணிவையும் அளிக்கிறது.
3. பச்சாத்தாப அருள்சாதனம் வழியாகப் பாவங்களுக்கு மன்னிப்புப் பெற முடியாவிடின், அப்பாவங்களுக்கு

மன்னிப்பு அளிக்கிறது.

4. சீர சுகம் ஆன்ம மீட்புக்கு உதவுமாயின் அதை அளிக்கிறது.

5. நித்திய வாழ்வுக்குச் செல்வதற்கு ஆயத்தப்படுத்துகிறது.

### 3வது அத்தியாயம் : கிறிஸ்தவ உறவை வளர்க்கும் அருளடையாளம்

### 1.குருத்துவம் என்னும் அருளடையாளம். சுருக்கம்

புனித **பவுல்** தமது சீடனாகிய தீமோத்தேவுக்குப் பின்வருமாறு எழுதினார்: "உம்மீது என் கைகளை விரித்ததால் கடவுளின் வரம் உமக்குள் வந்தது. அதை நீர் தீயெனப் பற்றியெரியச் செய்ய வேண்டுமென்று உமக்கு நினைவுறுத்துகிறேன்" (2திமோ. 1:6) என்றும், "விசுவாசிகளை மேற்பார்வையிடும் அலுவலை ஏற்க விழைபவன் ஒரு மேன்மையான தொழிலையே விரும்புகிறான்" (1தீமோ 3:1). தீத்துவுக்குப் பின்வருமாறு எழுதினார். "நான் திருத்தாமல் விட்டுவந்ததை நீர் சீர்திருத்தவும், நான் உமக்குப் பணித்தவாறு நகரந்தோறும் மூப்பர்களை ஏற்படுத்தவும் வேண்டியே, உம்மைக் கிரேத்தா தீவிலே விட்டுவந்தேன்" (தீத் 1:5).

**முழுத் திருச்சபையும் ஒரு குருகுலம்,** திருமுழுக்கினால் எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்குகொள்கின்றார். இப்பங்குகொள்ளுதல் **"விசுவாசிகளின் பொதுக் குருத்துவம்"** எனப்படும். இவ்வத்திவாரத்தின்மேல் அதற்குப் பணிபுரிய, கிறிஸ்துவின் குருத்துவத்தில் இன்னொரு பங்கு கொள்ளுதல் உண்டு. **அதுவேகுருத்துவம் என்னும் அருளடையாளத்தால் அளிக்கப்படும் பணி** தலையாகிய கிறிஸ்துவின் பெயரால் விசுவாசிகள் மத்தியில் பணிபுரிவதே அதன் வேலை.

**பணிக்குருத்துவம்** விசுவாசிகளின் பொதுக் குருத்துவத்திலிருந்து முற்றும் வேறுபட்டதாகும். ஏனெனில், அது விசுவாசிகளின் சேவைக்கென ஒரு புனித அதிகாரத்தை அளிக்கிறது. திருநிலைப்படுத்தப்பட்ட பணியாளர் தமது கற்பிக்கும் பணியாலும், திருவழிபாட்டுப் பணியாலும், ஆண்டு நடத்தும் பணியாலும் இறைமக்கள் மத்தியில் பணி புரிகிறார்.

ஆரம்பத்திலிருந்தே**ஆயர், குரு, திருத்தொண்டர்** என்ற மூன்று படிகளில் திருப்பணி ஒழுங்குபடுத்தப்பட்டு இம்மூன்று படிகளில் அதிகாரம் அளிக்கபட்டு, நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது. குருத்துவத்தால் அளிக்கப்படும் பணிபுரியும் அதிகாரங்கள் திருச்சபையின் ஆட்சி அமைப்புக்கு இன்றியமையாதவையாகும். ஆயர், குருக்கள், திருத்தொண்டர்கள் இல்லையேல் திருச்சபை பற்றிய பேச்சுக்கே இடமில்லை (புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார்)

ஆயர், குருத்துவ அருளடையாளத்தின் நிறைவைப் பெறுகிறார். இதனால் அவர் ஆயர் குழுவில் சேர்க்கப்பட்டு, தன்னிடம் ஒப்படைக்கப்படும் தலத்திருச்சபையில் காணக்கூடிய தலைவராகிறார். ஆயர்கள் அப்போஸ்தலர்களைப் பின்தொடர்ந்து வருகிறவர்களும், ஆயர் குழுவின் உறுப்பினர்களும் என்ற முறையில், பேதுருவைப் பின்தொடர்ந்து வருபவரான பாப்பானவருடைய அதிகாரத்தின் கீழ் முழுத் திருச்சபையின் மறை பணிப் பொறுப்பிலும், பணியிலும் பங்குகொள்கின்றனர்.

குருக்கள் குருத்துவத்தின் மேன்மையில் ஆயர்களோடு இணைக்கப்பட்டுள்ளனர். அதே நேரத்தில், தங்கள் மேய்ப்புப்பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டியவர்கள். அவர்கள் ஆயர்களின் அறிவுள்ள ஒத்துழைப்பாளர்களாக இயங்க அழைக்கப்படுகிறார்கள். தங்கள் ஆயரோடு தலத்திருச்சபையின் பொறுப்பைத் தாங்கும் குருகுழாமாக இருக்கின்றனர். அவர்கள் ஆயரிடமிருந்து ஒரு பங்குச் சமூகத்தின் அல்லது ஒரு குறித்த திருப்பணியின் பொறுப்பைப் பெறுகின்றனர்.

**திருத்தொண்டர்** திருச்சபையில் சில பணிகளைப் புரிவதற்கு ஏற்படுத்தப்படுகின்றனர். அவர்கள் குருத்துவத்தைப் பெறுவதில்லை. ஆனால், ஆயருடைய மேய்ப்புப்பணி அதிகாரத்தின் கீழ் நிறைவேற்ற வேண்டிய சில முக்கியமான பணிகளுக்காகத் திருநிலைப்படுத்தப்படுகின்றனர். அவை : இறைவாக்குப்பணி, திருவழிபாட்டில் பங்குகொள்ளல், மேய்ப்புப் பணியில் பிறரன்புப்பணி புரிதல் என்பனவாகும்.

குருத்துவ அருளடையாளம் பட்டம் பெறவிருப்பவருடைய தலை மீது ஆயர் தம் கைகளை வைப்பதிலும், திருநிலைப்படுத்தலுக்குரிய செபத்தைச் சொல்வதிலும் தங்கியுள்ளது. இச்செபத்தில் பட்டம் பெறுபவருடைய பணிக்குத் தேவையான பரிசுத்த ஆவியின் அருள்கள் இறைவனிடம் வேண்டப்படுகின்றன. பட்டம் அளிக்கும் திருச்சடங்கு ஒரு **அழியாத அருள்சாதன முத்திரையைப் பதிக்கிறது.**

திருச்சபை குருத்துவ அருளடையாளத்தைக் குருத்துவப்பணிக்குத் தகுந்தவர்களெனக் கணிக்கப்படும் ஆண்களுக்கு மாத்திரமே அளிக்கிறது. ஒருவரைப் பட்டம் பெறும்படி அழைக்கும் பொறுப்பு திருச்சபையின் ஆட்சி அதிகாரத்துக்கே உரியது.

**இலத்தீன் திருச்சபையில்** குருக்களுக்குரிய அருளடையாளம் சாதாரணமாக மணத்துறவை இறை அரசின் அன்புக்காகவும், மக்களின் சேவைக்காகவும் சுயாதீனமாக ஏற்று அனுசரிப்பதாகப் பிரசித்த வாக்குறுதி அளித்தவர்களுக்கு மாத்திரமே அளிக்கப்படுகிறது.

குருத்துவ அருளடையாளத்தை மூன்று படிகளிலும் அளிக்கும் உரிமை ஆயர்களுக்கே உண்டு.

### 2. திருமணம் என்னும் அருளடையாளம்.
**சுருக்கம்**

"கணவர்களே, கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செய்ததுபோல் நீங்களும் உங்கள் மனைவியருக்கு அன்பு செய்யுங்கள்... இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது. அது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந்தும் என்று நான் சொல்லுகிறேன்" (எபேசி. 5:25,32) என்று புனித பவுல் கூறியுள்ளார்.

ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்குமிடையே மண அன்பாலும் மண வாழ்வாலும் உண்டாகும் சமூகத்தை மனிதனைப் படைத்த இறைவனே ஏற்படுத்தி, அதற்குரிய சட்டங்களையும் அமைத்துள்ளார். தனது இயல்பிலேயே மணமக்களுடைய சொந்த நலனுக்காகவும், பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதற்காகவும் அது அமைக்கப்பட்டுள்ளது. திருமுழுக்குப் பெற்றவர்களிடையில் அது ஒரு அருளடையாள நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது (இன்றைய உலகில் திருச்சபை 48).

திருமண அருளடையாளம் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையிலுள்ள ஒற்றுமையைக் காட்டும் அடையாளமாக இருக்கிறது. அது கிறிஸ்து தமது திருச்சபையை அன்புசெய்த அன்பினால் மணமக்கள் ஒருவரை ஒருவர் அன்புசெய்ய அருளளிக்கிறது அருளடையாள அருள் இவ்வாறு மணமக்களுடைய மனித அன்பை மேன்மைப்படுத்துகிறது, நித்திய வாழ்வுக்குரிய பயணத்தில் அவர்களைப் புனிதப்படுத்துகிறது. (திரிதெந்தீன் பொதுச் சங்கம்).

திருமணம் அதைச் செய்வோருடைய சம்மதத்தை அத்திவாரமாகக் கொண்டுள்ளது. அதாவது, பிரமாணிக்கமுள்ள, மகப்பேறுக்கான அன்பின் ஒற்றுமை வாழ்வுக்கென ஒருவரையொருவர் நிரந்தரமாகக் கையளிக்கும் சம்மதத்தில் அது தங்கியுள்ளது.

திருமணம் அதைச் செய்வோரைத் **திருச்சபையில் ஒரு பிரசித்தமான வாழ்க்கை முறையில்** வைப்பதால், அது ஒரு பிரசித்தமான முறையில் நிறைவேற்றப்படுதல் பொருத்தமானதே, அதாவது, அதிகாரமுள்ள ஒரு குருவின் (அல்லது திருச்சபையால் நியமிக்கப்பட்ட சாட்சியின்) முன்னும், சாட்சிகளின் விசுவாசிகள் கூட்டத்தின் முன்னும், ஒரு திருவழிபாட்டுச் சடங்கில் அது நிறைவேற்றப்படவேண்டும்.

ஒருமைப்பாடு, பிரிக்கமுடியாமை, மகப்பேறுக்கு வழிதிறந்திருத்தல் என்பன திருமணத்திற்கு இன்றியமையாத அம்சங்களாகும். பல மணக்கொள்கை திருமண ஒருமைப்பாட்டிற்கு எதிரானதாகும், மணமுறிவு இறைவன் இணைத்ததை முறிக்கிறது, மகப்பேறை மறுப்பவர் திருமண வாழ்வின் மிகச் சிறந்த கொடையை, அதாவது, குழந்தையை ஏற்க மறுக்கிறார் (இன்றைய உலகில் திருச்சபை 50).

**மண முறிவு செய்துகொண்டவர்கள்** மீண்டும் திருமணம் செய்தல் கிறிஸ்துவால் படிப்பிக்கப்பட்ட இறைவனின் திட்டத்திற்கும் சட்டத்திற்கும் முரணானதாகும் அவர்கள் திருச்சபையிலிருந்து நீக்கப்படாவிடினும், திவ்விய நற்கருணை பெறமுடியாது. தங்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளை விசுவாசத்தில் வளர்ப்பதால் அவர்கள் கிறிஸ்தவ வாழ்வை ஓரளவில் வாழலாம்.

பிள்ளைகள் விசுவாசத்தின் முதல் அறிவிப்பை பெறுவதற்குரிய இடம் கிறிஸ்தவ குடும்பம். இதனாலேயே கிறிஸ்தவ குடும்பம் **"இல்லத் திருச்சபை"** என்று உரிமையோடு அழைக்கப்படுகிறது. அதாவது, அருளின், செபத்தின் சமூகமும், மனித புண்ணியங்களிலும் கிறிஸ்தவ அன்பிலும் பயிற்சியளிக்கும் பள்ளியாகவும் அது இருக்கிறது.

### 4வது அத்தியாயம் : திருவழிபாட்டிற்குரிய பிற சடங்குகள்.
### அருள் வேண்டல் குறிகள்
**சுருக்கம்**

திருச்சபையால் ஏற்படுத்தப்பட்ட அடையாளங்கள் அருள் வேண்டல் குறிகள் என்று அழைக்கப்படுகின்றன. மக்கள் அருளயாளங்களைப் பயனுடன் பெற அவர்களை ஆயத்தப்படுத்துவதும், அவர்கள் வாழ்க்கையில் வெவ்வேறு சந்தர்ப்பங்களைப் புனிதப்படுத்துவதுமே அவைகளின் நோக்கமாகும்.

அருள் வேண்டல் குறிகளுள் ஆசீர்வாதங்கள் முக்கிய இடத்தை எடுக்கின்றன. அவை, இறைவனின் செயல்பாடுகளுக்கும் கொடைகளுக்கும் புகழ்ச்சியையும், இறைவனின் கொடைகளை நற்செய்தி மனப்பான்மையுடன் மனிதர் பயன்படுத்தும்படி திருச்சபையின் வேண்டுதலையும் அடக்கியுள்ளன.

கிறிஸ்தவ வாழ்வு, திருவழிபாட்டினாலும் வெவ்வேறு பண்பாடுகளிலிருந்து ஊற்றெடுக்கும் பொது மக்களின் பலவிதமான பக்தி முயற்சிகளாலும் ஊட்டம் பெறுகிறது. இவைகளைத் திருச்சபை விசுவாச ஒளியால் ஒளிர்விக்கிறது. நற்செய்திக் கருத்தையும், மனித ஞானத்தையும் வெளிக்காட்டி, கிறிஸ்தவ வாழ்வை வளப்படுத்தும் பொதுமக்களின் பலவிதமான பக்தி முயற்சிகளாலும் ஊட்டம் பெறுகிறது இவைகளைத் திருச்சபை விசுவாச ஒளியால் ஒளிர்விக்கிறது. நற்செய்திக் கருத்தையும், மனித ஞானத்தையும் வெளிக்காட்டி, கிறிஸ்தவ வாழ்வை வளப்படுத்தும் பொதுமக்களின் பக்திமுயற்சிகளைத் திருச்சபை ஆதரிக்கிறது.

# 3ஆம் பாகம் : கிறிஸ்துவில் வாழ்வு



## 1வது பெரும் பிரிவு:மனிதனின் அழைப்பு அருள் வாழ்வுக்கு.

### 1வது அத்தியாயம்:மனிதனின் மாண்பு
### 1.மனிதன் இறைவனின் சாயல்
### சுருக்கம்

கிறிஸ்து மனிதனை மனிதனுக்கே முழுவதும் வெளிப்படுத்தி அவனுடைய உன்னத அழைப்பை அவனுக்குத் தெளிவுபடுத்துகிறார்" (இன்றைய உலகில் திருச்சபை 22).

அரூபியான ஆன்மாவையும், புத்தியையும், சித்தத்தையும் கொண்டுள்ள மனிதன் தனது உற்பத்தியிலிருந்தே கடவுளைத் தனது கதியாகக் கொண்டு, நித்திய பேரின்பத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளான். அவன் தனது வாழ்வின் நிறைவை "உண்மையையும் நன்மையையும் விரும்பித்தேடி அன்புசெய்வதில் கண்டடைகிறான்" (இ.உ.தி.15)

"உண்மைச் சுதந்திரம் மனிதன் தன்னிலே இறைவனின் சாயலைக் கொண்டிருக்கிறான் என்பதற்கு ஒரு சிறந்த அடையாளம்" (இ.உ.தி. 17).

"நல்லதை எப்போதும் நாடிச் செல்லவும், தீமையை அகற்றவும் மனிதனுக்கு அறிவுறுத்தும்" (இ.உ.தி 16) ஒழுக்கச் சட்டத்திற்கு அவன் கீழ்ப்படிய வேண்டும். இச்சட்டம் அவன் மனச்சான்றில் ஒலிக்கிறது.

சென்ம பாவத்தினால் தனது இயல்பில் பாதிக்கப்பட்ட மனிதன் தனது சுதந்திரத்தைப் பயன்படுத்தும்போது பிழைக்கு உள்ளாகிறான். தீமைக்குச் சார்பு கொள்கிறான்.

கிறிஸ்துவில் விசுவாசங்கொள்பவன் பரிசுத்த ஆவியில் புது வாழ்வு பெறுகிறான். அருளில் வளர்ந்து உறுதிபெற்ற வாழ்வு பெறுகிறான். அருளில் வளர்ந்து உறுதிபெற்ற வாழ்வு பரலோக வாழ்வின் மகிமையில் நிறைவு பெறவேண்டும்.

### 2. பரலோக பாக்கியத்திற்கு நமக்குள்ள அழைப்பு.
### சுருக்கம்

பேறு பெற்றோருக்குரிய விதிகள் இறைவனின் வாக்குறுதிகள். அவை ஆபிரகாமின் காலத்திலிருந்து நிறைவேற்றப்பட்டு, பரலோக அரசுக்கு வழிவகுப்பனவாய் இருக்கின்றன. அவை, இறைவன் மனிதனின் இருதயத்தில நன்மைத்தனம் பற்றிப் பதிந்துள்ள ஆசைக்கு ஒத்தவையாயிருக்கின்றன.

பேறு பெற்றோருக்குரிய விதிகள் இறைவன் நம்மை அழைக்கும் கடைசிக் கதியைப் படிப்பிக்கின்றன, இறை அரசு, கடவுளைக் காணுதல், இறை இயல்பில் பங்குகொள்ளுதல், நித்திய வாழ்வு, இறை மக்களாதல், இறைவனில் இளைப்பாறுதல் என்பன.

நித்தியவாழ்வின் பேரின்பம் இறைவன் தாமாகவே விரும்பி அளிக்கும் கொடை. அது, அதற்கு இட்டுச்செல்லும் அருளைப்போல் இயல்புக்கு மேற்பட்ட கொடையாகும்.

பேறு பெற்றோருக்குரிய விதிகள் உலக நன்மைகளை விட்டு விடுவது பற்றித் தீர்க்கமான ஒரு முடிவை நமக்கு முன்வைக்கின்றன. இறைவனை எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்வதைக் கற்றுக்கொள்ள, அவை நமது இதயங்களைத் தூய்மைப்படுத்துகின்றன.

உலக நன்மைகளை எவ்வாறு இறைவனின் சட்டத்திற்கேற்ப பயன்படுத்துவது என்று அறிவதற்கு, பரலோக பேரின்பம் ஒரு மேல்வரிச் சட்டமாக விளங்குகிறது.

### 3. மனிதனின் சுதந்திரம்
### சுருக்கம்

"கடவுள் ஆதியில் மனிதனைப் படைத்து, அவன் தன் விருப்பத்தின்படியே நடக்க உரிமை கொடுத்தார்" (சீராக். 15:14). அவன் தன்னைப் படைத்தவரைச் சுயாதீனமாகப் பற்றிக்கொண்டு பேரின்பத்தின் நிறைவை அடையும்படியே அவ்வாறு செய்தார்.

செயலாற்றவும் செயலாற்றாமல் விடவும் உள்ள ஆற்றலே சுதந்திரமாம். இவ்வாறு மனிதன் தானாகவே


தீர்மானித்துச் செயல்களைச் செய்ய முடியும். அது உன்னத நன்மையாகிய இறைவனை இலக்காகக் கொண்டிருக்கும்போது, தனது நிறைவு நிலையை அடைகிறது. சுதந்திரம் மனிதனுக்குச் சொந்தமான செயல்களுக்குரிய குணமாகும்.

சுதந்திரம் உண்மையான மனித செயல்களுக்குரிய குணம் ஆகும். அது மனிதன், விரும்பிச் செய்யும் செயல்களுக்கு அவனைப் பொறுப்பாளன் ஆக்குகிறது. சிந்தித்துச் செயலாற்றுதல் அவனுக்கு உரியதாகும்.

ஒரு செயலைச் செய்வதற்குரிய பொறுப்பு, பின்வரும காரணங்களால் குறைக்கப்படக் கூடும். அல்லது, முற்றாக நீக்கப்படக் கூடும், அவை: அறியாமை, பலவந்தம், அச்சம், உளவியல் அல்லது சமூக சம்பந்தமான காரணங்கள், என்பனவாகும்.

சுதந்திரத்தைப் பயன்படுத்தும் உரிமை மனிதனுடைய மாண்பை விட்டுப் பிரிக்கமுடியாத ஒரு தேவையாகும், சிறப்பாக மதம், ஒழுக்கம் சம்பந்தமான காரியங்களில். ஆனால், சுதந்திரத்தைப் பயன்படுத்தும் உரிமை, விரும்பிய எதையும் செய்யவோ அல்லது சொல்லவோ உரிமை அளிப்பதில்லை.

"கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து விடுவித்து, உரிமை வாழ்வு நமக்கு அளித்தார்" (கலா 5:1).



### 4. மனித செயல்களின் ஒழுக்கநிலை

**சுருக்கம்**

மனித செயல்களின் ஒழுக்க நிலையை ஏற்படுத்தும் ஊற்றுக்கள் அவைகளின் பொருள், நோக்கம், சூழல்கள் என்பனவாகும்.

ஒரு சுயாதீன செயலின் ஒழுக்கநிலை தேர்ந்துகொள்ளப்பட்ட பொருள் நல்லதோ, தீயதோ என்று புத்தியால் அறிந்து தீர்மானிப்பதில் தங்கியுள்ளது.

"நல்ல நோக்கத்திற்காகச் செய்யப்படும் ஒரு தீய செயல் சரியானதென்று நாம் ஏற்றுக்கொள்ள முடியாது" (புனித அக்குவீனார் தோமையார்). நல்ல நோக்கம் தீய வழிவகைகளை நல்லவையாக்க முடியாது.

ஒரு ஒழுக்க சம்பந்தமான செயல் நல்லதாய் இருப்பதற்கு, அதன் பொருள், நோக்கம், சூழல்கள் எல்லாம் நல்லவையாய் இருக்க வேண்டும்.

தீய ஒழுக்கச் செயல்கள் சுயாதீன சித்தத்தின் பிழையான செயல்பாட்டினால் தோன்றுகின்றன. அவற்றை நாம் ஏற்க முடியாது. நன்மை விளையும்படி நாம் தீமையை ஏற்கமுடியாது.

### 5. ஆசாபாசங்களின் ஒழுக்க நிலை.

**சுருக்கம்**

"ஆசாபாசங்கள்" என்ற சொல் உணர்ச்சிகளைக் குறிக்கிறது. தனது உணர்ச்சிகள் வழியாக மனிதன் நன்மையைப் பற்றிக்கொள்கிறான். தீமையை யூகித்துக்கொள்கிறான்.

பிரதானமான ஆசாபாசங்கள்:அன்பும் வெறுப்பும்,ஆசையும் பயமும்,இன்பம், துக்கமும் கோபமும் ஆகும்.

ஆசாபாசங்கள் உணர்ச்சிகள் என்ற அளவில், நன்மை தீமை என்ற ஒழுக்க நிலை அற்றவை. ஆனால், அவை புத்திக்கும் சித்தத்திற்கும் கட்டுப்பட்டவை அல்லது கட்டுப்படாதவை என்ற அளவில் ஒழுக்கநிலையில் நல்லவை அல்லது தீயவையாய் இருக்கும்.

உணர்ச்சிகள் புண்ணியங்களோடு சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது தீய பழக்க வழக்கங்களாக மாற்றப்படலாம்.

நல்லொழுக்கத்தின் நிறைவு மனிதன் நன்மை செய்யத் தனது சித்தத்தால் மட்டுமல்ல. தனது (இருதயத்தாலும்" உணர்ச்சிகளாலும்) தூண்டப்படுவதிலே தங்கியுள்ளது.

### 6. ஒழுக்க சம்பந்தமான மனச்சான்று

**சுருக்கம்**

"மனச்சான்று மனிதனின் மிக மறைவான மையமும், திருவிடமுமாகும். அங்கே அவன் கடவுளோடு தனித்திருக்கிறான். அவன் உள்ளத்திலே அவருடைய குரல் எதிரொலிக்கிறது" (இ.உ.தி.16)

ஒரு செயலின் ஒழுக்க நிலையை ஒரு மனித ஆள் அறிந்துகொள்ள அவனுக்குத் துணைபுரியும் புத்தியின் தீர்ப்பே ஒழுக்கசம்பந்தமான மனச்சான்று.

தீமை செய்த மனிதனுக்கு அவனது மனச்சான்றின் தீர்ப்பு, அவனின் மனந்திரும்புதலுக்கும் நம்பிக்கைக்கும் ஒரு உத்தரவாதமாக இருக்கிறது.

நன்கு உருவாக்கப்பட்ட மனச்சான்று நேர்மையும், உண்மையும் ஆனது. அது பத்தியைத் தழுவி, படைத்தவரின் ஞானம் உண்மையாக விரும்பும் நன்மைக்கு ஏற்பத் தனது தீர்ப்புக்களைச் செய்கிறது.

மனச்சான்று ஒழுக்க சம்பந்தமான தெரிவை எடுக்கவேண்டிய சந்தர்ப்பத்தில், புத்திக்கும் இறைவனின் சட்டத்திற்கும் ஏற்ற, நேரான ஒரு தீர்ப்பை, அல்லது புத்திக்கும் இறைச்சட்டத்திற்கும் எதிரான, பிழையான

தீர்ப்பை எடுக்கக் கூடும்.

மனிதன் எப்போதும் தனது மனச்சான்றின் திட்டமான தீர்ப்பை ஏற்கவேண்டும்.

ஒழுக்க சம்பந்தமான மனச்சான்று அறியாமையால் பீடிக்கப்பட்டிருக்கலாம், அல்லது பிழையான தீர்ப்புக்களைச் செய்யலாம். இவ்வறியாமையும் பிழையான தீர்ப்புக்களும் எப்போதும் குற்றமற்றவைகளாக இருக்கமுடியாது.

இறைவனின் வார்த்தை எமது பாதைக்கு ஓர் ஒளிவிளக்கு. அதை நாம் விசுவாசத்தாலும் செபத்தாலும் நமதாக்கி, நடைமுறைப்படுத்தவேண்டும். இவ்வாறுதான் ஒழுக்க சம்பந்தமான மனச்சான்று உருவாக்கப்படுகிறது.

## 7. புண்ணியங்கள்

### சுருக்கம்

நன்மையைச் செய்ய ஆத்துமத்தில் உண்டாகும் நிலையான நற்குணமே புண்ணியம்.

நமது செயல்களைச் சீர்படுத்தவும், நமது ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்தவும், புத்தியின்படியும் விசுவாசத்தின்படியும் நமது நடத்தையை நடத்தவும் துணைபுரியும் புத்தியினதும் சித்தத்தினதும் நிலையான நற்குணங்களே மனித புண்ணியங்கள். அவை : விவேகம், நீதி, மனத்திடன், மட்டுத்திட்டம் என்ற நான்கு தலையான புண்ணியங்களின் கீழ் ஒழுங்குபடுத்தப்படலாம்.

விவேகம், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நமது உண்மையான நன்மையை நமது புத்தி அறிந்துகொள்ளவும், அதை அடைவதற்குரிய நீதியான வழிவகைகளைத் தேர்ந்துகொள்ளவும் உதவிபுரிகிறது.

நீதி, கடவுளுக்கும் அயலாருக்கும் அவரவருக்கு உரியதைக் கொடுக்க, நிரந்தரமாகவும், உறுதியாகவும் தூண்டும் சித்தமாகும்.

மனத்திடன், இடையூறுகள் மத்தியிலும் நல்வாழ்வை அனுஷ்டிக்கத் திடமும் உறுதியும் அளிக்கிறது.

**மட்டுத்திட்டம்,** சீர இன்பங்களைப் புத்திக்கேற்ற பிரகாரம் மட்டுப்படுத்தவும், படைப்புப் பொருள்களைப் பயன்படுத்துவதில் சம நிலையைக் கடைப்பிடிக்கவும் உதவுகிறது.

ஒழுக்கசம்பந்தமான புண்ணியங்கள் கல்வி அறிவினாலும், விரும்பிச்செய்யும் செயல்களாலும், விடாமுயற்சியாலும் வளர்ச்சியடைகின்றன. இறை அருள் அவைகளைப் புனிதப்படுத்தி, மேன்மையடையச் செய்கிறது.

**இறைசம்பந்தமான புண்ணியங்கள்** கிறிஸ்தவர்கள் அதிபரிசுத்ததிரித்துவத்துடன் தொடர்புகொண்டு வாழ வழிவகுக்கின்றன. அவை இறைவனைத் தங்கள் தொடக்கமாகவும், முகாந்திரமாகவும், கதியாகவும் கொண்டுள்ளன, அதாவது, விசுவாசத்தால் இறைவனை அறிந்து, நம்பிக்கையால் அவரைப் பற்றிக்கொண்டு, அவருக்காகவே அவரை அன்பு செய்கிறோம்.

இறைசம்பந்தமான புண்ணியங்கள் மூன்று உண்டு. அவை: **விசுவாசம், நம்பிக்கை, அன்பு** (1கொரி 13:13) என்பன. அவை எல்லா ஒழுக்க சம்பந்தமான புண்ணியங்களுக்கும் உருவளித்து உயிரூட்டுகின்றன.

**விசுவாசத்தினால்** நாம்இறைவனையும் அவர் வெளிப்படுத்தியதாக விசுவசிக்கும்படி திருச்சபை நமக்கு எடுத்துரைக்கும் யாவற்றையும் ஏற்றுக்கொள்கிறோம்.

**நம்பிக்கையினால்** நித்திய சீவியத்தையும் அதை அடைவதற்கு அவசியமான அருள்களையும் ஆசித்து, அவற்றை இறைவனிடமிருந்து பெறுவோமென்று உறுதியாக நம்பிக் காத்திருக்கிறோம்.

**அன்பினால்** எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனையும், அவருடைய அன்பின் பொருட்டு நம்மைப்போல் நம் அயலானையும் நாம் அன்பு செய்கிறோம். "அதுவே எல்லா நற்பண்புகளையும் பிணைத்து நிறைவு அளிப்பது" (கொலோ 3:14). அது எல்லாப் புண்ணியங்களுக்கும் உருவமாகவும் விளங்குகிறது.

கிறிஸ்தவர்களுக்கும் அளிக்கப்படும் **பரிசுத்த ஆவியின் ஏழு கொடைகளும்** பின்வருவனவாகும் : ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தேவபயம் என்பனவாம்.

## 8. பாவம்

### சுருக்கம்

"அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காகக் கடவுள் அனைவரும் கீழ்ப்படியாமையின் கொடுமையால் கட்டுண்டு கிடக்கச்செய்தார்" (உரோ. 11:32).

"நித்திய சட்டத்திற்கு எதிரான ஒரு சொல், செயல் அல்லது ஆசையே" (புனித அகுஸ்தீனார்) பாவம். அது இறைவனுக்கு எதிரான ஒரு குற்றம். அது கிறிஸ்து நாதரின் கீழ்ப்படிதலுக்கு மாறாக, ஒரு கீழ்ப்படியாமையால் இறைவனுக்கு எதிராக நிற்கிறது.

பாவம் மனித புத்திக்கு எதிரான ஒரு செயல். அது மனித இயல்பைக் காயப்படுத்தி, மனித ஒற்றுமையைப் பங்கப்படுத்துகிறது.

எல்லாப் பாவங்களின் வேரும் மனித இருதயத்தில் தான் உள்ளது. அவைகளின் தன்மையும் கனாகனமும் பிரதானமாக அவைகளின் பொருளினாலேயே கணிக்கப்படுகின்றன.

இறைச்சட்டத்திற்கும் மனிதனின் கடைசிக் கதிக்கும் எதிரான ஒரு கனமான காரியத்தை அறிந்து கொண்டு, விரும்பியும் செய்தல் **சாவான பாவமாகும்.** அது நம்மில் அன்பை அகற்றிவிடுகிறது. அன்பு இல்லையேல் நாம் நித்திய பாக்கியத்தை அடைய முடியாது.

மனந்திரும்பாவிடின் அது நித்திய சாவுக்கு இட்டுச்செல்லும்.

**அற்ப பாவம்** சீர்படுத்தப்படக் கூடிய ஒரு ஒழுக்க சம்பந்தமான குற்றமாகும். ஏனெனில் அது அன்பை அழித்து விடுவதில்லை.

அற்ப பாவங்களைக் கூட திரும்பித் திரும்பிச் செய்தல் பாவப் பழக்கங்களை உருவாக்குகிறது. இவைகளுள். பிரதானமானவை **தலையான பாவங்கள்**

## 2வது அத்தியாயம் : மனித சமூகம்.

### 1. மனிதன் ஆளும், சமூகமும்.

### சுருக்கம்

மனிதர் தங்களுக்கிடையில் ஏற்படுத்தவேண்டிய சகோதரத்துவத்திற்கு இறை ஆட்களுக்கிடையிலுள்ள ஒற்றுமை ஒருவித மாதிரியாக விளங்குகிறது.

தனது இயல்புக்கேற்பத் தன்னை வளர்ப்பதற்கு



மனித ஆளுக்கு சமூக வாழ்வு அவசியம். குடும்பம், பட்டணம் போன்ற சமூகங்கள் மனித இயல்போடு நெருங்கிய முறையில் தொடர்பு கொள்கின்றன.

"மனிதனே எல்லாச் சமூக நிறுவனங்களின் முதலும், பொருளும், முடிவுமாக இருக்கின்றான்" (இ.உ.தி. 25).

மனிதர் சமூகங்களிலும், தேர்தல் நிறுவனங்களிலும் அதிகமாகப் பங்குகொள்ள அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

அரசியல் சமூகமோ, வேறு எந்தப் பெரிய சமூகமோ, கீழ்ச்சமூகங்களினதும், தனி ஆட்களினதும் சுதந்திரத்தையும் பொறுப்பையும் மதியாமல் செயல்படக் கூடாது. இதுவே **கீழ்ச் சமூகச் சுதந்திரக்கொள்கை.**

சமூகம் புண்ணியங்களைச் செய்வதற்கு ஆதரவு அளிக்கவேண்டும். அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது. அது ஒரு நீதியான, ஒழுங்குபடுத்தப்பட்ட நலன்களால் தூண்டப்படவேண்டும்.

சமூகத்தின் நல் நிலையைப் பாவம் குழப்பும்போது, மனங்களின் மாற்றத்திற்கும், இறை அருளுக்கும் வேண்டுதல் செய்யப்படவேண்டும். அன்பு நீதியான மாற்றங்களை ஊக்குவிக்கிறது. சமூகப் பிரச்சனைக்கு நற்செய்திக்கு வெளியே சரியான தீர்ப்பு இல்லை (2ஆம் அருள் சின்னப்பர் : "நூறாவது ஆண்டு").

### 2. சமூகவாழ்வில் பங்குகொள்ளல்

### சுருக்கம்

"கடவுளிடமிருந்து வராத அதிகாரம் எதுவுமில்லை: இப்பொழுதுள்ள ஆட்சிப்பீடங்களை கடவுளே நிறுவினார்" (உரோ. 13:1).

எல்லா மனித சமூகங்களும் நிலைத்து நிற்பதற்கும், வளர்வதற்கும் அவைகளில் ஒரு அதிகாரம் இருத்தல் அவசியம்.

"அரசியல் சமூகமும் பொது அதிகாரமும் மனித இயல்பிலேயே வேரூன்றி நிற்கின்றன. எனவே, அவை இறைவனால் முன்கூட்டியே திட்டமிடப்பெற்றவை என்பது தெளிவு" (இ.உ.தி. 74).

அதிகாரம் சமூகத்தின் பொதுநலனை அடைவதற்காக இயங்கினால் அது சரியான முறையில் இயங்குவதாகும். இவ்விலக்கை அடைவதற்கு அது ஒழுக்க வாழ்வில் ஏற்றுக்கொள்ளப்படும் வழிவகைகளைப் பயன்படுத்தவேண்டும்.

அரசியல் ஆட்சி முறைகளின் வேற்றுமை சமூகத்தின் நலனுக்கு உதவுமாயின் அது முறையானதாகும்.

அரசியல் அதிகாரம் ஒழுக்க அமைப்பின் எல்லைகளுக்குள் இயங்கவேண்டும். மனிதன் சுதந்திரமாய் இயங்குவதற்கு அவசியமான சூழ்நிலையைப் பாதுகாக்கவேண்டும்.

பொதுநலன் "குழுக்களும் தனி உறுப்பினர்களும் தத்தம் நிறைவை முழுமையாகவும் ஏற்ற முறையிலும் அடைய உதவும் சமூக வாழ்வின் சூழ்நிலைகள் அனைத்தின் முழு மொத்தத்தையும் "(இ.உ.தி.26)அடக்குகிறது.

பொதுநலன் பின்வரும் மூன்று அவசிய அம்சங்களை அடக்கியுள்ளது.அவை:மனித ஆளின் அடிப்படை உரிமைகளை மதித்து வளர்த்தல்,சமூகத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதல் என்பனவாகும்.

மனித ஆளின் மாண்பு பொதுநலனைத் தேடுதலை அடக்கியுள்ளது. மனித வாழ்வின் நிலைகளில்

நன்மைத்தனத்தை வளர்க்கவும் நிறுவனங்களை உருவாக்கவும் வளர்க்கவும் ஒவ்வொருவரும் அக்கறை கொள்ள வேண்டும்.

தேசிய சமூகத்தின் பொதுநலனை அரசியல் சமூகம் பாதுகாத்து வளர்க்கவேண்டும். மனித குலத்தில் பொதுநலன் சர்வதேச சமூகத்தின் ஒரு நிறுவனத்தை வேண்டி நிற்கிறது.

### 3. சமூக நீதி.

#### சுருக்கம்

சபைகளும் தனி மனிதரும் உரிமையாகப் பெறவேண்டியவைகளைப் பெறுவதற்கு உதவியளிக்கும் நிலபரங்களை சமூகம் உருவாக்குவதால் சமூக நீதியை உறுதிப்படுத்துகிறது.

மனித ஆள் மற்றவரைத் தன்னைப்போல மதிக்கவேண்டும். ஆகையால் ஆளுக்குரிய மகத்துவத்திலிருந்து வரும் அடிப்படை உரிமைகளையும் மதிக்கவேண்டும்.

மனிதர்களிடையிலுள்ள சமத்துவம் அவர்கள் ஆளுமையின் மகத்துவத்தையும், அதிலிருந்து ஊற்றெடுக்கும் உரிமைகளையும் அடித்தளமாகக் கொண்டுள்ளது.

ஆள்களுக்கிடையிலுள்ள வேற்றுமைகள் ஒருவர் மற்றவருக்குத் தேவைப்படும் படி இறைவன் அமைத்த திட்டத்திற்குரியவை - அவை அவர்கள் மத்தியில் அன்பை வளர்க்கத் தூண்டவேண்டும்.

மனித ஆள்களிடையேயுள்ள சமத்துவ மாண்பு அவர்களிடையே தோன்றும் அளவுகடந்த சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்குரிய முயற்சிகளை வேண்டிநிற்கிறது.

ஒற்றுமை ஒரு முக்கியமான கிறிஸ்தவ புண்ணியமாகும். அது சீர சம்பந்தமான நலன்களையும், ஆத்தும சம்பந்தமான நலன்களையும் பகிர்ந்துகொள்வதில் தங்கியுள்ளது.

## 3வது அத்தியாயம் : இறைவன் தந்த மீட்பு : சட்டமும் அருளும்.

### 1.ஒழுக்கச் சட்டம்.

#### சுருக்கம்

திருமறை நூலின்படி சட்டம், வாக்குப்பண்ணப்பட்ட பேரின்பத்திற்கு இட்டுச் செல்லும் வழிகளைப் பின்பற்றும்படியும், தீமையின் வழிகளை விலக்கும்படியும் இறைவன் மனிதனுக்குத் தந்தைக்குரிய அன்புடன் அளிக்கும் அறிவுரையாகும்.

"ஒரு சமூகத்திற்குப் பொறுப்பாயுள்ளவர், மனிதர் புத்தியைப் பொதுநலனுக்குப் பயன்படுத்தும்படி வெளிப்படுத்தும் விதியே சட்டம்" (புனித அக்குவீனாத் தோமையார்).

கிறிஸ்துவே சட்டத்தின் குறிக்கோள் (உரோ. 10:4). அவரே இறைவனின் நீதியைப் படிப்பித்து அளிப்பவர்.

படைத்தவரின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் கடவுளுடைய ஞானத்திலும் நன்மைத்தனத்திலும் பங்குகொள்வதே இயற்கைச் சட்டமாகும். அது மனித ஆளின் மாண்பை எடுத்துரைத்து, அவனது உரிமைகளுக்கும் அடிப்படைக் கடமைகளுக்கும் அத்திவாரமாக விளங்குகிறது.

இயற்கைச் சட்டம் மாற்றமுடியாதது. அது சரித்திரத்தின் வழியாக நிலைத்து நீடித்து வருகிறது. அதற்கு உருவமளிக்கும் ஒழுங்குகள் பொருள் முறையில் சரியானவை ஆகும். ஒழுக்க விதிகளை அமைப்பதற்கும், குடிமக்களுக்குரிய சட்டங்களுக்கும் அது அவசியமான அடித்தளமாக விளங்குகிறது.

பழையஏற்பாட்டுச் சட்டம் வெளிப்படுத்தப்பட்ட சட்டத்தின் முதற் கட்டமாகும், அதன் ஒழுக்க விதிகள் பத்துக் கற்பனைகளில் சுருக்கமாகத் தரப்படுகின்றன.

மோயீசனின் சட்டம், இயற்கை முறையில் மனித புத்தியால் அறியக்கூடிய பல உண்மைகளை அடக்கியுள்ளது. அவற்றை மனிதர் தங்கள் இருதயங்களில் ஆராய்ந்து அறிந்துகொள்ளாதபடியால் இறைவன் அவற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

பழைய ஏற்பாட்டுச் சட்டம் நற்செய்திச் சட்டத்திற்கு ஓர் ஆயத்தமாகும்.

புதியஏற்பாட்டுச் சட்டம் கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தால் பரிசுத்த ஆவியிடமிருந்து பெறப்படும் ஓர் அருளாகும். அது அன்பினால் செயல்படுகிறது. அது கிறிஸ்துவின் மலைப்பொழிவில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது, அருளை நமக்கு அளிப்பதற்கு அருளடையாளங்களைப் பயன்படுத்துகிறது.

நற்செய்திச்சட்டம் பழைய ஏற்பாட்டுச் சட்டத்தைக் கடந்து சென்று, அதை நிறைவேற்றிப் பூரணப்படுத்துகிறது: பழைய ஏற்பாட்டின் வாக்குறுதிகள் பரலோக அரசின் பேறு பெற்றோருக்குரிய விதிகளால் நிறைவேற்றப்படுகின்றன. செயல்களுக்கு அடித்தளமாயிருக்கும் இருதயம் மாற்றியமைக்கப்படுவதால் அதன் சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

புதியஏற்பாட்டுச் சட்டம், அன்பின் சட்டம், அருளின் சட்டம், சுதந்திரத்தின் சட்டமுமாகும்.

புதியஏற்பாட்டுச் சட்டம் விதிகளோடு அறிவுரைகளையும் அடக்கியுள்ளது. "நற்செய்தியில் ஆண்டவர் தம் சீடர்கள் கடைப்பிடிப்பதற்காக எடுத்துரைத்த பற்பல அறிவுரைகள் வழியாகத் திருச்சபையின்

புனிதத்தன்மை சிறந்த முறையில் பேணி வளர்க்கப்பெறுகிறது" (திருச்சபை 42).

## 2. அருளும் நீதிமானாக்கப்படுதலும்.

### சுருக்கம்

தூய ஆவியின் அருள் நமக்குக் கடவுளின் நீதியை அளிக்கிறது. விசுவாசத்தினாலும் திருமுழுக்கினாலும் நம்மைக் கிறிஸ்துவின் பாடுகளோடும் உத்தானத்தோடும் அது இணைப்பதால், தூய ஆவி நம்மை அவருடைய வாழ்வில் பங்குபெறச் செய்கிறார்.

மனந்திரும்புதலைப் போல, நீதிமானாக்கப்படல் இரு அம்சங்களை அடக்கியுள்ளது : அருளின் இயக்கத்தால் மனிதன் பாவப் பொறுத்தலையும் நீதியையும் இறைவனிடமிருந்து பெற்று இறைவன் பக்கம் திரும்புகிறவன், பாவத்தை விட்டுவிடுகிறான்.

நீதிமானாக்கப்படுதல் பாவங்களின் மன்னிப்பையும், உள்ளரங்க மனிதன் புனிதப்படுத்தப்பட்டுப் புதுப்பிக்கப்படுவதையும் அடக்கியுள்ளது.

நீதிமானாக்கப்படுதலைக் கிறிஸ்துநாதர் நமக்குத் தமது பாடுகளால் உரிமையாக்கியுள்ளார். அது நமக்குத் திருமுழுக்கு வழியாக அளிக்கப்படுகிறது. அது நம்மை நீதிமான்களாக்கும் இறைவனின் நீதிக்கும் ஒத்தவர்களாக்குகிறது. அது இறைவனினதும் கிறிஸ்துவினதும் மகிமையையும், நித்திய சீவியமாகிய கொடையையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதுவே இறைவனின் இரக்கத்தின் மிகச்சிறந்த செயல்பாடாகும்.

கடவுளின் ஏற்புப் பிள்ளைகளாக நமக்குள்ள அழைப்பை நாம் ஏற்று வாழ்வதற்கு இறைவன் தரும் உதவியே அருள். அது நம்மைத் திரித்துவத்தின் நெருங்கிய ஒற்றுமை வாழ்விற்கு இட்டுச்செல்கிறது.

அருள் வேலைப்பாட்டில் இறைவனே திட்டமிட்டு, ஆயத்தப்படுத்தி, மனிதனின் சுயாதீனமான ஒத்துழைப்பை உருவாக்குகிறார். அது மனித சுதந்திரத்தின் ஆழமான ஆசைகளுக்குப் பதில் அளிக்கிறது. அது தன்னோடு ஒத்துழைக்குமாறு அவனை அழைத்து நிறைவுபடுத்துகிறது.

அர்ச்சிக்கும் அருள், தமது வாழ்வில் நாம் பங்குகொள்ளும் படி இறைவன் தாமாக விரும்பி அளிக்கும் கொடையாகும், நமது ஆன்மாவைப் பாவத்திலிருந்து குணப்படுத்திப் புனிதப்படுத்த அது தூய ஆவியால் பொழியப்படுகிறது.

அர்ச்சிக்கும் அருள் நம்மை "இறைவனுக்கு உகந்தவர்கள்" ஆக்குகிறது. அருங்கொடைகளும், தூய ஆவியின் சிறப்பான அருள்களும் அர்ச்சிக்கும் அருளுக்கு இட்டுச் செல்கின்றன. அவை திருச்சபையின் பொது நலனை இலக்காகக் கொண்டுள்ளன. இறைவன் ஏராளமான உதவி அருள்களாலும் செயலாற்றுகிறார். அவை நம்மிலுள்ள நிரந்தர அருளிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றன.

மனிதனை அருளின் செயல்பாட்டில் இணைக்க இறைவன் சுதந்திரமாகக் கொண்ட திட்டத்தைத் தழுவாமல் இறைவன் முன் நமக்குப் பெறுபேறுகளில்லை, பெறுபேறு முந்தமுந்த இறைவன் அளிக்கும் அருளுக்கே உரியது. அடுத்தபடியாக அது மனிதனின் ஒத்துழைப்புக்கு உரியது. மனிதனின் பெறுபேறுகள் இறைவனிடம் திரும்பிச் செல்கின்றன.

நாம் இறைவனின் ஏற்புப் பிள்ளைகளாய் இருப்பதால், தூய ஆவியின் அருள் இறைவன் தாமாக விரும்பி அளிக்கும் நீதியைத்தழுவி நமக்கு ஒரு உண்மையான பெறுபேறை அளிக்கமுடியும். நம்மிலுள்ள அன்பே இறைவன் முன் நமக்கு பெறுபேறுக்குரிய பிரதான ஊற்றாகும்.

மனந்திரும்புதலுக்குக் காரணமாயிருக்கும் முதல் அருளை எவரும் தனது பெறுபேறாக அடைய முடியாது. தூய ஆவியின் இயக்குதலால் நித்திய வாழ்வை அடைவதற்கு உதவி அளிக்கும் எல்லா அருள்களையும், இவ்வுலக வாழ்வுக்குத் தேவையான நலன்களையும் நமக்கும் பிறருக்கும் பெற்றுக்கொள்ள உரிமை பெறுகின்றோம்.

"கிறிஸ்தவ வாழ்வின் முழுமைக்கு ஒரு அளவு இல்லை என்பதைத் தவிர வேறு அளவு இல்லை" (நிஸ்சாவின் புனித கிறகோரியார்)

"என்னைப் பின்செல்ல விரும்புகிறவன், தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும்" (மத். 16:24).

## 3. திருச்சபை அன்னையும், ஆசிரியையும்.

### சுருக்கம்

ஒழுக்க வாழ்வு ஓர் ஆன்மீக வழிபாடு, கிறிஸ்தவனின் ஒழுக்க வாழ்வு திருவழிபாட்டாலும்; அருளடையாளங்களாலும் ஊட்டம் பெறுகிறது.

திருச்சபையின் சட்டங்கள் திருவழிபாட்டோடு இணைந்து அதனால் ஊட்டம்பெறுகின்ற கிறிஸ்தவ ஒழுக்கவாழ்வை இலக்காகக் கொண்டுள்ளன.

திருச்சபை ஆயர்களின் ஒழுக்க சம்பந்தமான ஆசிரியம், சாதாரணமாக பத்துக்கற்பனைகள் பற்றிய அவர்களின் மறைப்போதகத்தினாலும் பிரசங்கங்களினாலும் நிறைவேற்றப்படுகிறது. பத்துக் கற்பனைகள் எல்லா மனிதருக்குமுரிய ஒழுக்க tho;tpd; விதிகளைத் தருகின்றன.

உரோமை ஆயரும் மற்ற ஆயர்களும் அதிகாரபூர்வமான ஆசிரியர்கள் என்ற முறையில் இறைமக்களுக்கு அவர்கள் விசுவசித்து வாழ்வில் அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகளைப் போதிக்கின்றனர். இயற்கை சட்டத்திற்கும் உட்பட்டுள்ள ஒழுக்கப்

பிரச்சனைகள் பற்றி விளக்கம் அளித்தல் அவர்கள் பொறுப்பாகும்.

ஆயர்களின் பிழையற்ற ஆசிரியம் ஈடேற்றத்திற்குரிய விசுவாச உண்மைகளோடு தொடர்புள்ள ஒழுக்க சம்பந்தமான உண்மைகளையும் பாதுகாத்து, விளக்கி, அனுசரிக்கச்செய்ய வேண்டும்.



## 2வது பெரும் பிரிவு: பத்துக்கற்பனைகள்

### சுருக்கம்

ஒருவன் இயேசுவிடம் வந்து, "போதகரே, முடிவில்லா வாழ்வு பெற நான் என்ன நன்மை செய்யவேண்டும்?" என்று கேட்டான். அவர் அவனை நோக்கி, "வாழ்வுபெற விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடி" என்றார். (மத் .19:16-17).

இயேசு தமது அனுசரிப்பாலும் போதனையாலும் பத்துக் கற்பனைகளின் நிரந்தரத் தன்மைக்குச் சாட்சியம் அளித்துள்ளார்.

பத்துக்கற்பனைகள் என்னும் கொடை கடவுள் தமது மக்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் உட்கருத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. கடவுளின் கற்பனைகள் தங்கள் உண்மைக் கருத்தை உடன்படிக்கையிலும் அதன் வழியாகவும் பெறுகின்றன.

திருச்சபையின் பாரம்பரியம் திருமறை நூலின் பாரம்பரியத்திற்கும் இயேசுநாதரின் முன்மாதிரிக்கும் ஏற்ற முறையில் பத்துக் கற்பனைகளுக்கு ஒரு முக்கியத்துவத்தையும், முதற் தரமான கருத்தையும் அளித்துள்ளது.

பத்துக்கற்பனைகள் ஒரு ஒற்றுமையுள்ள அமைப்பாகும். அவற்றில் ஒவ்வொரு கற்பனையும் எல்லாக் கற்பனைகளையும் நினைவூட்டுகிறது. ஒரு கற்பனையை மீறுதல் கற்பனைகள் யாவற்றையும் மீறுவதற்குச் சரியாகும். (வி.பய. 2:10-11).

பத்துக்கற்பனைகள் இயற்கைச் சட்டத்தின் ஒரு சிறப்பான கூற்றை அடக்கியுள்ளன, அவற்றை நாம் இறைவனின் வெளிப்படுத்தலாலும், மனித புத்தியாலும் அறிந்துகொள்கிறோம்.

பத்துக் கற்பனைகள் தங்கள் அடிப்படையான உள்ளடக்கத்தில் காத்திரமான கடமைகளை எடுத்துரைக்கின்றன. எனினும், இக்கட்டளைகளுக்குரிய சில விதிகள் தங்களிலே காத்திரமற்ற பொருள்களைக் கொண்ட சில கடமைகளையும் அடக்கியுள்ளன.

கடவுள், தாம் கற்பிப்பதை நாம் நிறைவேற்றுவதற்கு நமக்குத் தேவையான அருளை அளிக்கிறார்.

## 1ஆவது அத்தியாயம் : "உன் ஆண்டவராகிய கடவுளை அன்பு செய்வாயாக"

### 1. முதலாம் கற்பனை : "ஒரே கடவுளை முழுமனதுடனே ஆராதிப்பாயாக"

### சுருக்கம்

"உன் முழு இதயத்தோடும், உன் முழு ஆன்மாவோடும், உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அன்பு செய்வாயாக" (உப ஆகமம். 6:5).

முதலாம் கற்பனை கடவுளை விசுவசிக்கும்படியும் அவரில் நம்பிக்கை வைக்கும்படியும், எல்லாவற்றிற்கும் மேலாக அவரை அன்பு செய்யும்படியும் மனிதனுக்கு அழைப்பு விடுக்கிறது.

"உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவரை மட்டுமே ஆராதிப்பாயாக" (மத். 4:10). கடவுளை ஆராதித்தல், அவரைப் பார்த்துச் செபித்தல், அவருக்குரிய வழிபாட்டைச் செலுத்துதல், அவருக்குச் செய்த நேர்த்திகளையும் வாக்குத்தத்தங்களையும் (Vows) நிறைவேற்றுதல் என்பன முதலாம் கற்பனைக்குரிய வேதம் (Religion) என்னும் புண்ணியத்திற்குரிய செயல்களாகும்.

கடவுளுக்கு உண்மையான வழிபாடு செலுத்தவேண்டிய கடமை மனிதனுக்கு தனிப்பட்ட முறையிலும், அவன் சமூகத்தின் ஒரு உறுப்பு என்ற முறையிலும் உரியதாகும்.

"இன்றைய மனிதர் தனித்தும், பொதுவிலும் தங்களுடைய மறையைச் சுதந்திரமாக அறிக்கையிட இயலவேண்டும்" (மறைச் சுதந்திரம் 15).

குருட்டுப்பத்தி (Superstition) உண்மைக் கடவுளுக்கு நாம் செலுத்தவேண்டிய வழிபாட்டில் ஒழுங்கை மீறி நடந்துகொள்ளத் தூண்டும் துர்க்குணமாகும். அது விக்கிரக ஆராதனை (Idolatry), நிமித்த சாத்திரம் (Sooth saying), சோதிட சாத்திரம் (Astrology) முதலியனவிலும், வருங்காலச்

சம்பவங்களை முன் அறிவிக்கும் முயற்சிகளிலும், மாயத்திலும் (Magic) தெளிவாகத் தோன்றுகிறது.

கடவுளைச் சொல்லாலும் செயலாலும் சோதித்தல், தேவ துரோகம் (Sacrileg), சிமோனியம் (Simony) என்பன முதலாம் கற்பனையால் விலக்கப்பட்டுள்ள, மதத்திற்கு எதிரான பாவங்களாகும்.

கடவுளை மறுதலிக்கும் கொள்கை(Atheism) கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளாவிடில் அல்லது அதை மறுதலித்தால் அது முதலாவது கற்பனைக்கு எதிரான பாவமாகும்.

பரிசுத்த உருவங்களை வழிபடுதல், வார்த்தையானவர் மனுவுரு எடுத்தார் என்ற உண்மையை அடித்தளமாகக் கொண்டுள்ளது. அது முதலாம் கற்பனைக்கு எதிரானதன்று.

## 2. இரண்டாம் கற்பனை : கடவுளுடைய திருப்பெயரை வீணாகச் சொல்லாதிருப்பாயாக.

### சுருக்கம்

ஆண்டவரே, எம் ஆண்டவரே, உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு வியப்புக்குரியது" (தி.பா 8:1)

இரண்டாம் கற்பனை கடவுளின் பெயரை மதிக்கும்படி கற்பிக்கிறது. கடவுளின் பெயர் பரிசுத்தமானது.

இரண்டாம் கற்பனை கடவுளுடைய பெயரை முறையற்றவகையில் பாவிப்பதைத் தடுக்கிறது.

கடவுளின் பெயரை, இயேசுகிறிஸ்துநாதரின் பெயரை, கன்னிமரியாளின் அல்லது புனிதர்களின் பெயரை நிந்தனைக்குரிய முறையில் பாவிப்பது தேவதூஷணம் (Blasphemy) ஆகும்.

பொய் ஆணை (False oath) ஒரு பொய்க்குச் சாட்சியாகக் கடவுளை அழைக்கிறது. பொய் ஆணை எப்போதும் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றும் கடவுளுக்கு நாம் செலுத்தவேண்டிய வணக்கத்துக்கு முற்றும் முரணானது.

"உண்மைப்படியும், வணக்கத்துடனும், தேவையின்படியுமன்றி படைத்தவருடைய பெயராலோ, படைப்புக்களின் பெயராலோ ஆணையிடவேண்டாம்" (புனித லொயோலா இன்னாசியார் : ஞான ஒடுக்கச் சிந்தனைகள் 38).

திருமுழுக்கில் கிறிஸ்தவன் திருச்சபையில் ஒரு பெயரைப் பெறுகிறான். பெற்றோர், ஞானப்பெற்றோர், பங்குக்குரு ஆகியோர் திருமுழுக்குப் பெறுபவருக்கு ஒரு கிறிஸ்தவ பெயர் கொடுக்கப்படுவதற்குக் கவனம் செலுத்தவேண்டும்.

ஒரு கிறிஸ்தவன் தனது செபங்களையும் கருமங்களையும் பிதா, சுதன், பரிசுத்தஆவியறன் பெயராலே, ஆமென்" என்று சொல்லி சிலுவை அடையாளம் வரைந்து, தொடங்கவேண்டும்.

கடவுள் ஒவ்வொருவரையும் அவரவருடைய சொந்தப் பெயராலே கூப்பிடுகிறார். (எசா. 43:1).

## 3. மூன்றாம் கற்பனை : "கடவுளுடைய திருநாள்களை பரிசுத்தமாய் அனுசரிக்க மறவாதிருப்பாயாக"

### சுருக்கம்

"உன் கடவுளாகிய நான் உனக்குக் கட்டளையிட்டபடியே ஓய்வுநாளைப் புனிதமுள்ளதாக நினைக்கக் கடவாய்" (உப ஆக. 5:12) "ஏழாம் நாளோ ஆண்டவருக்குப் பரிசுத்தமான ஓய்வு நாளாகிய "சபத் நாள்" (யாத். 31:15).

முதற் படைப்பின் நிறைவாகிய ஓய்வுநாளின் (சபத்தின்) இடத்தை கிறிஸ்துவின் உத்தானத்தினால் தொடங்கப்பட்டுள்ள புதிய படைப்பை நினைவூட்டுகிற ஆண்டவருடைய நாள் (ஞாயிறு) எடுக்கிறது.

கிறிஸ்துவின் உத்தான விழாவை வாரத்தின் எட்டாவது நாளில் திருச்சபை கொண்டாடுகிறது. அது ஆண்டவரின் நாள் என்று உரிமையோடு அழைக்கப்படுகிறது (திருவழிபாடு 106).

"ஆண்டவரின் நாள் (ஞாயிறு) முழுத்திருச்சபையிலும் பிரதான கடன்திருநாளாக அனுசரிக்கப்படவேண்டும்". (தி.ச. 1246). "ஆண்டவரின் நாளிலும் மற்றக் கடன் திருநாட்களிலும் விசுவாசிகள் கடவுளுக்கு அளிக்கவேண்டிய வழிபாட்டிற்கு அல்லது ஆண்டவருடைய நாளின் ஆனந்தத்திற்கு அல்லது உடலின், ஆன்மாவின் ஓய்வுக்குத் தடையாயிருக்கக் கூடிய, சரீரஒ; பிரயாசையுள்ள வேலைகளையும், வேறு வேலைகளையும் தவிர்க்கவேண்டும்" (தி.ச.1247).

ஆண்டவருடைய நாளை ஏற்படுத்தியதால் இளைப்பாறிக்கும், குடும்ப, பண்பாட்டு, சமூக, பத்திமுற்சிகளில் சுதந்திரமாக ஈடுபடுவதற்கும் போதிய நேரம் எல்லாருக்கும் அளிக்கப்படுகிறது.

ஆண்டவருடைய நாளை அனுசரிக்கத் தடையாயிருக்கும் எதையும் அவசியமின்றி மற்றவர்மேல் சுமத்துவதை ஒரு கிறிஸ்தவன் தவிர்க்கவேண்டும்.

### 2வது அத்தியாயம்: "உன்னை அன்பு செய்வது போல உன் அயலானையும் அன்பு செய்வாயாக"

### 1. நாலாம் கற்பனை : "உன் தந்தையையும் தாயையும் சங்கித்திருப்பாயாக"

**சுருக்கம்**

"உன் தந்தையையும் தாயையும் மதித்துப் பேணக்கடவாய்" (உப ஆ. 5:16, மத். 7:10).

நாலாம் கற்பனையால் கடவுள் தமக்குப் பின் நம் பெற்றோரையும், நமது நலனுக்காக அதிகாரம் அளிக்கப்பட்டவர்களையும் நாம் மதிக்கவேண்டுமென்று கற்பித்துள்ளார்

திருமணச் சமூகம் தம்பதிகளின் சம்மதத்தாலும் ஒற்றுமையாலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மெய்விவாகமும் குடும்பமும் இணைக்கப்படுவோரின் நலனையும் பிள்ளைகளைப் பெற்றெடுத்துப் பயிற்றுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

"தனி மனிதனுடையவும், மனித சமுதாயத் தினுடையவும் கிறிஸ்தவ சமுதாயத்தினுடையவும் நல்வாழ்வு, திருமண, குடும்ப சமூகத்தின் நன்னிலைமையோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது" (இ.உ.தி. 47).

பிள்ளைகள் பெற்றோருக்கு மரியாதையும் நன்றியறிதலும், நீதியான அமைச்சலும், உதவியும் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளனர். பிள்ளைக்குரிய மரியhதை குடும்ப வாழ்வு முழுவதிலும் ஒற்றுமையை வளர்க்க உதவுகிறது.

தங்கள் பிள்ளைகளுடைய விசுவாசத்தின், செபத்தின், எல்லாப் புண்ணியங்களின் பயிற்சிக்கு பெற்றோரே முதல் பொறுப்புள்ளவர்கள். பிள்ளைகளின் சீரசம்பந்தமான, ஆத்தும சம்பந்தமான தேவைகளுக்கு அவர்கள் தங்களாலியன்ற அளவுக்கு ஒழுங்குகள் செய்யக் கடமைப்பட்டுள்ளனர்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் அழைத்தலை மதித்து ஊக்குவிக்கவேண்டும். கிறிஸ்தவனின் முதல் அழைப்பு கிறிஸ்துவைப் பின்பற்றலே என்பதை நினைவில் கொண்டு, அதை அவர்களுக்குப் படிப்பிப்பார்களாக.

தேச அதிகாரிகள் மக்களின் அடிப்படை உரிமைகளையும் அவற்றைச் சுதந்திரமாய் அனுபவிப்பதற்குரிய சூழலையும் மதித்துச் செயலாற்றக் கடமைப்பட்டுள்ளனர்.

தேச சமூகத்தை உண்மையிலும், நீதியிலும், ஒற்றுமையிலும், சுதந்திரத்திலும் கட்டி எழுப்பத் தேச அதிகாரிகளுடன் சேர்ந்து உழைத்தல் தேசப் பிரசைகளின் கடமையாகும்.

தேசப்பிரசை தேச அதிகாரிகளால் விதிக்கப்படும் நல்லொழுக்க விதிகளுக்கு முரணான சட்டங்களை மனச்சாட்சியின்படி பின்பற்ற முடியாது," மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதற்கு மேலாகக் கடவுளுக்கல்லவா கீழ்ப்படிய வேண்டும்" (தி.தூ. 5:29).

எல்லாத் தேச சமூகங்களும் மனிதனின் தன்மையையும் அவனது கதியையும் மனதில் கொண்டு, தங்கள் தீர்மானங்களையும், தங்கள் நடத்தையையும் செயல்படுத்துகின்றன. கடவுளைப்பற்றியும் மனிதனைப்பற்றியும் நற்செய்திதரும் ஒளிக்கு வெளியே இயங்கும் தேச சமூகங்கள் இலகுவில் சர்வதிகார சமூகங்களாக மாறிவிடும்

### 2 ஐந்தாம் கற்பனை:"கொலை செய்யாதிருப்பாயாக"

**சுருக்கம்**

"உயிருள்ளவை அனைத்தின் வாழ்வும், எல்லா மனிதரின் மூச்சும் கடவுள் கையில்தான் உள்ளன" (யோபு 12:10).

எல்லா மனித உயிரும் உற்பவத்திலிருந்துமரணபரியந்தம் பரிசுத்தமானது, ஏனெனில், மனித ஆள் தனக்காகவே உயிருள்ள பரிசுத்தமான கடவுளின் சாயலாகவும், மாதிரியாகவும் அவரால் படைக்கப்பட்டுள்ளது.

மனித ஆளின் கொலை மனித ஆளின் மகிமைக்கும், படைத்தவரின் பரிசுத்த தனத்துக்கும் காத்திரமான முறையில் முரணானது.

கொலையிபீ; தடை அநீதியாகத் தாக்குபவரைத் தீங்கிழைக்கக் கூடிய நிலையிலிருந்து நீக்கிவிடும் உரிமையை எடுத்து விடுவதில்லை. முறையான பாதுகாப்பு அளித்தல் பிறருடைய உயிருக்கு அல்லது பொதுநலனுக்குப் பொறுப்பாயுள்ளவருடைய கடமையாகும்.

ஒரு குழுந்தைக்கு அதன் உற்பவத்திலிருந்தே வாழும் உரிமையுண்டு. நேரடி கருவழிப்பு (Direct Abortion), அதாவது, அது இலக்காகவோ, வழிவகையாகவோ விரும்பப்படுதல் ஒழுக்கவிதிக்கு முற்றும் முரணான ஒரு "இழிசெயல்" (இ.உ.தி. 27) ஆகும். மனித உயிருக்கு எதிரான

இப்பாவத்திற்குத் தண்டனையாகத் திருச்சபை அதைச் செய்பவரை திருச்சபையிலிருந்து நீக்கும் தண்டனையை விதித்துள்ளது.

ஒரு கரு (சிசு) தனது உற்பவத்திலிருந்தே அரு ஆளாக மதிக்கப்பட வேண்டுமாகையால், அது முழுமையாகப் பாதுகாக்கப்பட்டு மற்ற எல்லா மனிதரைப்போல் பேணப்பட்டு, குணமாக்கப்பட வேண்டும்.

விரும்பிச் செய்யப்படும் இரக்கக்கொலை (Voluntary Euthenasia), அதன் தன்மையும் காரணங்களும் எப்படி இருந்தாலும், அது உண்மையான கொலையே, அது மனித ஆளின் மகிமைக்கும், அதைப் படைத்த உயிருள்ள கடவுளுக்குரிய மரியாதைக்கும் எதிரானது.

தற்கொலை நீதிக்கும், நம்பிக்கைக்கும், அன்புக்கும் மிகவும் எதிரான பாவம். அது ஐந்தாம் கற்பனையால் விலக்கப்பட்டுள்ளது.

பிறரைப் பாவத்தில் விழுத்தும்படி ஒரு செயலைச் சுயாதீனமாகச் செய்தல் அல்லது செய்யாமல் விடுதல் இடறலாகும் (Scandal), அது ஒரு கனமான பாவம்.

போர் பல தீமைகளையும், அநீதிகளையும் விளைவிப்பதால்' அதைத் தடுப்பதற்கு நம்மால் இயன்றவைகளை எல்லாம் செய்யவேண்டும். "பஞ்சம், படை' கொள்ளைநோய்களிலிருந்து எங்களைக் காத்தருளும். ஆண்டவரே" என்று திருச்சபை மன்றாடுகிறது.

திருச்சபையும், மனித புத்தியும் ஒழுக்கச் சட்டம் போரில்கூட நிலையான தன்மையுள்ளதென்று கூறுகின்றன. மனித உரிமைக்கும் அதன் பொதுவான கொள்கைகளுக்கும் எதிராகத் தெரிந்துகொண்டு இயங்குதல் பாரிய குற்றமாகும்.

"படைப்பலப் போட்டி மனிதகுலத்துக்கு உற்ற ஒரு கொள்ளைநோய், அது எளியோரைத் தாங்கமுடியாத அளவிற்குத் துன்புறுத்துகிறது" (இ.உ. திருச்சப 81).

"சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்" (மத். 5:9).

## 3. ஆறாம் கற்பனை : "மோகபாவம் செய்யாதிருப்பாயாக"

சுருக்கம்

"எல்லா மனிதரின் அடிப்படையான இயற்கையான அழைத்தல் அன்பு செய்வதே" (Familiaris Consortio 11)

கடவுள் மனிதரை ஆணாகவும் பெண்ணாகவும் படைத்தபடியால் மனித ஆளுமையின் மாண்பை இருவருக்கும் சமனான முறையில் அளித்துள்ளார். ஆகவே, ஆணும், பெண்ணும் தங்கள் பால்வேற்றுமையை அறிந்து ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கிறிஸ்துவே கற்பின் சிறந்த மாதிரி. திருமுழுக்குப் பெற்றவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையின் நிலைக்கு ஏற்ப கற்பை அனுசரிக்க அழைக்கப்படுகின்றனர்.

கற்பு ஆளில் பால்தன்மை இணைக்கப்படுவதைக் குறிக்கிறது. ஒரு ஆள் சொந்த ஆதிக்கத்தைக் கற்றுக் கொள்வதில் அது தங்கியுள்ளது.

கற்புக்கு எதிரான கனத்த பாவங்களுள் பின்வருவனவும் அடங்கும் : மணமாகாத ஒரு ஆணும் ஒரு பெண்ணும் விரும்பிச் செய்யும் உடலுறவு (Fornication), ஆசாபாசங்களைத் தூண்டும் சித்திரங்கள் (Pornography), ஒரே பாலாருடன் பால் உறவுகொள்ளுதல் (Homosexuality) என்பன.

தம்பதிகள் சுயாதீனமாகச் செய்துகொள்ளும் உடன்பாடு பிரமாணிக்கமுள்ள அன்பை அடக்கியுள்ளது. அது அவர்கள் திருமணம் பிரியாமல் பாதுகாக்கும் கடமையை அவர்களுக்கு அளிக்கிறது.

மகப்பேறு திருமணத்தின் ஒரு நலன், ஒரு கொடை, ஒரு இலக்கு. தம்பதிகள் உயிர் அளிப்பதால் கடவுளின் தந்தைத் தன்மையில் பங்குகொள்கின்றனர்.

பிள்ளைகளின் பிறப்பை முறைப்படுத்துதல் தந்தைக்கும் தாய்க்குமுரிய பொறுப்பாகும். தம்பதிகளுடைய கருத்துக்களின் நன்மைத்தனம் ஒழுக்கமுறைப்படி பிழையான வழிவகைகளை அங்கீகரிக்க முடியாது (உதாரணமாக மலடாக்குதல் (Sterilization) அல்லது கர்ப்பத்தடை (Contraception).

விபச்சாரம் (Adultery), விவாகரத்து (Divorce) பல மணப்பழக்கம் (Poligamy). சுயாதீன மண ஐக்கியம் (Free Union) என்பன திருமணத்தின் மகிமைக்கு எதிரான பாரிய குற்றங்களாகும்.

## 4. ஏழாம் கற்பனை : "களவு செய்யாதிருப்பாயாக"

சுருக்கம்

"களவு செய்யாதிருப்பாயாக" (உப. 5:19) "திருடர், பொருளாசை பிடித்தவர்... கொள்ளைக்காரர் இவர்களுக்குக் கடவுளின் அரசு உரிமையாகாது" (1கொரி. 6:10).

ஏழாம் கற்பனை உலக பொருள்களினதும், மனிதரின் உழைப்பினதும் பயன்களை நீதியின் படியும் அன்புடனும் பயன்படுத்தும்படி கற்பிக்கிறது.

படைப்பின் நலன்கள் மனிதகுலம் முழுவதையும் இலக்காகக் கொண்டுள்ளன. தனிச்சொத்துரிமை நலன்களின் பொது இலக்கை அழித்து விடுவதில்லை. ஏழாங்கற்பனை களவை நீக்குகிறது. பிறருடைய பொருளை உரிமையாளரின் நீதியான விருப்பத்திற்கு எதிராகத் தன் வசப்படுத்துவதே களவு ஆகும்.

பிறர் பொருளை அநீதியாக அபகரித்துப் பயன்படுத்துவது ஏழாம் கற்பனைக்கு எதிரான குற்றமாகும். செய்யப்பட்ட அநீதி பரிகாரத்தை வேண்டுகிறது. அபகரிக்கப்பட்ட பொருள்களை திருப்பிக்கொடுக்கும்படி கொடுத்தல் வாங்கலின் சமனான நீதி (Commutative Justice) வேண்டுகிறது.

வியாபாரத்தை அல்லது சர்வாதிகாரத்தை இலக்காகக் கொண்டுள்ள செயல்கள், மனிதரை அடிமைப்படுத்தி வியாபாரப் பொருள்களைப் போல் வாங்கவும், விற்கவும், மாற்றி எடுக்கவும் வழிவகுக்கிற படியால் அவற்றைப் பிழையானவை என்று ஒழுக்கச் சட்டம் நீக்குகிறது.

உலகின் சுரங்கப் பொருள்கள், திரவிய சாதனங்கள் மேல், காய்கறி வகைகள், மிருகங்கள் மேல், படைத்தவரால் மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள ஆதிக்கம் வருங்காலச் சந்ததியினருக்கு அவைமட்டிலுள்ள உரிமையை மதிக்கவேண்டிய ஒழுக்கக் கடமையிலிருந்து பிரித்து விட முடியாது.

மிருகங்கள் மனிதனுடைய நிர்வாகத்தின்கீழ் வைக்கப்பட்டுள்ளன. ஆகையால் அவன் அவைகளை அன்போடு பராமரிக்க வேண்டும். அவன் தன் தேவைகளை நீதியான முறையில் நிறைவேற்றுவதற்கு அவைளைப் பயன்படுத்தலாம்.

மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அல்லது ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்குத் தேவைப்படும்போது, திருச்சபை பொருளாதார, சமூக காரியங்கள் பற்றித் தீர்மானங்களை எடுக்கிறது. மனிதர் அதி உன்னத நன்மையாகிய கடவுளையே தங்கள் கடைசிக் கதியாகக் கொண்டிருக்கிறபடியால், திருச்சபை உலக பொது நலன்களில் அக்கறை கொள்கிறது.

மனிதன்தானே பொருளாதார, சமூக வாழ்வின் கர்த்தாவும், மையமும், இலக்குமாக இருக்கிறான். சமூகப் பிரச்சினையின் முக்கிய தீர்வு யாதெனில், எல்லாருக்குமெனக் கடவுளால் படைக்கப்பட்ட பொருள்கள் நீதியின்படி அன்பின் உதவியுடன் உண்மையில் எல்லாருக்கும் கிடைக்கச் செய்வதே.

உழைப்பின் முக்கிய பெறுமதி, அதன் கர்த்தாவும் கதியுமாகிய மனிதனிலேயே தங்கியுள்ளது. தனது உழைப்பு மூலம் மனிதன் சிருட்டிப்பு வேலையில் பங்குகொள்கிறான். உழைப்பு கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டால், மீட்பளிக்கவும் கூடும்.

உண்மையான முன்னேற்றம் எல்லா மனிதரின் முன்னேற்றமே. ஒவ்வொரு மனிதனும் தனது தொழிலுக்கு, அதாவது கடவுளின் அழைப்புக்குப் பதில் அளிக்கும் ஆற்றலை வளரச்செய்வதில் அது தங்கியுள்ளது (Centesimus Annus 29).

வறியவர்களுக்குப் பிச்சை அளித்தல் சகோதர அன்புக்கு ஒரு சாட்சியமாகும். அது கடவுளுக்கு உவப்பான ஒரு நீதியின் பழக்கமாகும்.

உணவின்றி, வீடின்றி, இடமின்றித் தவிக்கும் மனிதரின் பெருந்தொகையில், உவமையில் காட்டப்படும் பசியுற்றுக் கிடந்த பிச்சைக்காரன் இலாசரை எப்படிக் கண்டு கொள்ளாமலிருக்கலாம்? (லூக். 17:19-31). "சின்னஞ் சிறியவர் இவர்களுள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்யாதபோதெல்லாம் எனக்கே செய்யவில்லை" (மத். 25:45) என்று இயேசு சொல்வதை எப்படி நாம் கேளாமலிருக்கலாம்?

5. எட்டாம் கற்பனை : "பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக"

சுருக்கம்

"உன் அயலானுக்கு விரோதமாய்ப் பொய்ச் சாட்சி சொல்லா திருப்பாயாக" (வி.ப. 20:16). கிறிஸ்துவின் சீடர்கள் "உண்மையால் ஏற்படும் நீதியிலும் புனிதத்திலும் கடவுள் சாயலாகப் படைக்கப்பட்ட புதிய இயல்பை அணிந்துகொண்டார்கள்" (எபே, 4:24).

தனது செயல்களில் உண்மையைக் காட்டவும், தனது பேச்சில் உண்மையைக் கூறவும், ஏமாற்றுதல், நடித்தல், பாசாங்கு செய்தல் முதலிய செயல்களிலிருந்து தன்னைப் பாதுகாக்கவும் உதவும் புண்ணியமே உண்மை கூறுதலாம்.

கிறிஸ்தவன் தனது செயலிலும் பேச்சிலும் "ஆண்டவரைப் பற்றிச் சாட்சியம் கூற வெட்கப்படவேண்டியதில்லை" (2திமோ. 1:8). விசுவாசத்தின் உண்மைக்கு அளிக்கப்படும் உன்னத சாட்சியமே வேத சாட்சியம்.

மனிதரின் நற்பெயருக்கும், கௌரவத்துக்கும் மதிப்பளிக்க வேண்டிய கடமை அவதூறான சொல்லையும் செயலையும் தடை செய்கிறது.

உண்மையை அறிய உரிமையுள்ள அயலானை ஏமாற்றும் நோக்கத்துடன் உண்மையை மறைத்தலே பொய் ஆகும்.

உண்மைக்கு எதிராகச் செய்யப்படும் குற்றம் பரிகாரத்தை வேண்டுகிறது.

சகோதர அன்புக் கட்டளை, குறித்த நிலைமைகளில் உண்மையை அறிய விரும்புகிறவருக்கு அதைத் தெரிவிப்பது நல்லதோ இல்லையோ என்று அறிந்துகொள்ள உதவுகிறது.

"பாவசங்கீர்த்தன இரகசியம் மீறக்கூடாதது" (திருச்சபைச் சட்டம் 981), உத்தியோகம் சம்பந்தமான இரகசியங்கள் பாதுகாக்கப் படவேண்டும். பிறரைப்பற்றி தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தும் இரகசியங்களைப் பிரசித்தப்படுத்தக்கூடாது.

உண்மையிலும், சுதந்திரத்திலும், நீதியிலும் ஊன்றி நிற்கும் தகவலைப் பெற, சமூகத்திற்கு உரிமையுண்டு சமூகத் தொடர்புச்சாதனங்களைப் பயன்படுத்துவதில் நிதானத்தையும் கட்டுப்பாட்டையும் விதித்தல் பொருத்தமானதாகும்.



கவின் கலைகளும், திருக்கலையும் "இயல்பாகவே இறைவனின் எல்லையற்ற எழிலோடு தொடர்புடையவை. இவ்வெழில் மனித படைப்புச் செயல்களில் ஒருவகையில் வெளிப்படுத்தப்படவேண்டும். இவை தம் படைப்புக்களால் மக்களின் இருதயங்களைப் பக்தியுடன் இறைவன்பால் திரும்புவதேயன்றி வேறு எந்தக் குறிக்கோளும் கொண்டிருக்கவில்லை. ஆதலால். அந்த அளவுக்கு இறைவனுக்கும், அவரது புகழ்ச்சியையும் மாட்சியையும் வளர்ப்பதற்கும் பொருத்தமானவை" (திருவழிபாடு 122).

6. ஒன்பதாம் கற்பனை : "பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக"

சுருக்கம்

"ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும், ஏற்கெனவே தன்னுள்ளத்தில் அவளோடு விபச்சாரம் செய்தாயிற்று" (மத். 5:28).

ஒன்பதாம் கற்பனை சரீர சம்பந்தமான ஆசைகளுக்கு எதிராக நமக்கு எச்சரிக்கை தருகிறது.

சரீர சம்பந்தமான ஆசைகளுக்கு எதிரான போர், இருதயத்தைத் தூய்மைப்படுத்துவதாலும், மட்டுத்திட்டத்தைக் கடைப்பபிடிப்பதாலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இருதய தூய்மை கடவுளைக்காணும் கொடையை இப்போதே நமக்குத் தருகிறது.

இருதயத்தைத் தூய்மைப்படுத்துதல் செபத்தையும், கற்பை அனுசரிப்பதையும், கருத்தின், பார்வையின் தூய்மையையும் வேண்டுகிறது.

இருதயத் தூய்மை, பொறுமை, நாணம், அறிவுடமை ஆகியவையை வேண்டுகிறது. நாணம் மனித ஆளின் அந்தரங்கத்தைப் பாதுகாக்கிறது.

7. பத்தாம் கற்பனை : "பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக.


சுருக்கம்

"உங்கள் செல்வம் எங்குள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்" (மத் 6:21).

பத்தாம் கற்பனை செல்வத்தின்மேலும், அதனால் வரும் ஆதிக்கத்தின் மேலும் கொள்கின்ற அளவு கடந்த ஆசையினால் பிறக்கும் மட்டற்ற ஆவலை நீக்Fகிறது.

பிறருடைய நன்மையைக் கண்டு

# 4ஆம் பாகம் : கிறிஸ்தவ செபம்.



துக்கப்படுதலும்
அதைத் தனதாக்கிக்கொள்ள மட்டற்ற ஆசைகொள்வதும் பொறாமை ஆகும். அது ஒரு தலையான துர்க்குணமுமாகும்.

திருமுழுக்குப் பெற்றவர் பொறாமையை தரும் சிந்தனையாலும். தாழ்ச்சியினாலும், தேவ பராமரிப்புக்குத் தன்னை முற்றாகக் கையளிப்பதாலும் எதிர்த்துப்போராடலாம்.

கிறிஸ்துவின் விசுவாசிகள் "ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும், இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள்" (கலா. 5:24). அவர்கள் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு, அவருடைய விருப்பங்களைக் கடைப்பிக்கின்றனர்.

பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பதற்கு செல்வங்களை விட்டுப் பிரிதல் அவசியமானது, "இருதயத்தில் வறுமையுள்ளவர்கள் பேறுபெற்றோர்"

ஆசையுள்ள மனிதன் "கடவுளைக் காண விரும்புகிறேன்" என்று சொல்கிறான். கடவுள் மட்டிலுள்ள தாகம் நித்திய வாழ்வின் நீராலேயே தீர்க்கப்படும் (யோவா. 4:14).

## 1வது பெரும்பிரிவு : கிறிஸ்தவ வாழ்வில் செபம்.

### 1வது அத்தியாயம் : செபத்தின் வெளிப்பாடு.

### செபிக்க எல்லோருக்கும் அழைப்பு.

### 1. பழைய ஏற்பாட்டில் செபம்

#### சுருக்கம்

"ஆன்மாவை இறைவன் பக்கம் உயர்த்துவது அல்லது பொருத்தமான நன்மைகளை இறைவனிடம் கேட்பது செபம் ஆகும்" (புனித டமசீன் அருளப்பர்)

கடவுள் ஒவ்வொரு மனிதனையும் மனித புத்திக்கு எட்டாத முறையில் தம்மைச் சந்திக்கச் சளைப்பின்றி அழைக்கிறார். செபம் கடவுளுக்கும் மனிதனுக்குமிடையிலுள்ள பரஸ்பர வேண்டுதலாக மீட்பின் வரலாறு முழுவதிலும் துணையாக நிற்கிறது.

ஆபிரகாமினதும் யாக்கோப்பினதும் செபம், கடவுளின் தவறாத்தன்மையிலும், விடாமுயற்சிக்கு வாக்களிக்கப்பட்டுள்ள நிச்சயமான வெற்றியிலும் நம்பிக்கைகொள்ளும் விசுவாசப் போராகக் காட்சியளிக்கிறது.

மோசேசின் செபம் உயிருள்ள கடவுள் தமது சனத்தின் மீட்புக்கு எடுத்த பூர்வாங்க முயற்சிக்கு விடையாக அமைகிறது, அது, ஏக மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிந்துபேசும் செபத்திற்கு முற்குறியாக விளங்குகிறது.

கடவுளின் மக்களின் செபம், கடவுளின் இருப்பிடத்தின், உடன் படிக்கைப் பேழையின் நிழலில், தேவாலயத்தில், குருக்களின், இறைவாக்கினரின் விசேடமாகத் தாவீதரசனின் வழிநடத்தலில் விஸ்தரிப்புப் பெற்றது.

இறைவாக்கினர் இருதய மனந்திரும்புதலுக்கு வேண்டுதல் விடுக்கின்றனர். கடவுளின் திருமுகத்தைக் காண ஆர்வத்துடன் தேடும்போது, எலியாசைப்போல, அவர்கள் மக்களுககாகப் பரிந்துபேசுகின்றனர்.

திருப்பாடல்கள் பழைய ஏற்பாட்டில் செபத்தின் சிறந்த சாதனையாக விளங்குகின்றன. அவை பிரிக்கமுடியாத இரு உறுப்புகளை அதாவது தனி உறுப்புக்களையும் சமூக உறுப்பையும் கொண்டு விளங்குகின்றன. அவை சரித்திரத்தின் எல்லாப்

பரப்புகளுக்கும் தங்களை நீட்டுகின்றன. அதாவது, கடவுளின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதற்கு ஞாபகார்த்தத்தை ஏற்படுத்தி, மெசியாவின் வருகையை எதிர்பார்த்து நிற்கின்றன.

செபித்துக் கிறிஸ்துவில் நிறைவேற்றப்பட்ட திருப்பாடல்கள் திருச்சபையின் செபத்தின் நிரந்தரமான. முக்கியமான அம்சமாக விளங்குகின்றன. அவை எல்லா நிலைகளிலுமுள்ள மனிதருக்கும், எல்லாக் காலங்களுக்கும் பொருத்தமானவகைகளாக விளங்குகின்றன.

2. காலத்தின் நிறைவில் செபம்.

சுருக்கம்

புதிய ஏற்பாட்டில் செபத்தின் பூர்த்தியான மாதிரி மகனாகிய இயேசுவின் செபத்தில் உள்ளது. அந்தரங்கத்திலும், இரகசியமாகவும், அடிக்கடியும் செய்யப்பட்ட இயேசுவின் செபம் தந்தையின் சித்தத்தை சிலுவைபரியந்தம் அன்புடன் ஏற்பதையும், அது கேட்கப்படும் என்ற பூரண நம்பிக்கையையும் அடக்கியுள்ளது.

இயேசு தமது படிப்பினையில் தமது சீடர்களுக்கு ஒரு நிறைவான இருதயத்தோடும், உயிருள்ள. விடாமுயற்சியுள்ள விசுவாசத்தோடும், மகனுக்குரிய துணிவோடும் செபம் செய்யக் கற்பித்தார். விழிப்பாயிருக்கும்படியும், தங்கள் விண்ணப்பங்களைக் கடவுளுக்குத் தமது பெயரால் சமர்ப்பிக்கும்படியும் கற்பித்தார். இயேசுகிறிஸ்துநாதர் தமக்குச் சமர்ப்பிக்கப்படும் செபங்களைத் தாமே ஏற்று நிறைவேற்றுகிறார்.

"உம்முடைய சித்தத்தின்படியே ஆகட்டும்", "என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது" என்ற கன்னிமரியாளின் செபங்கள் தன்னை முழுதும் விசுவாசத்தில் உதார குணத்துடன் ஒப்புக் கொடுத்தலைக் காட்டுகின்றன.

3. திருச்சபையின் காலத்தில் செபம்

சுருக்கம்

இயேசு கூறியவைகளையெல்லாம் ஞாபகப்படுத்தித் திருச்சபையைப் படிப்பிக்கும் பரிசுத்த ஆவி செபவாழ்வையும் படிப்பிக்கிறார். இதனால் செபத்தின் நிலையான உருவங்களைப் புதுப்பித்துத் தெரிவிக்கிறார். அவை : **ஆசீர்வதித்தல், விண்ணப்பித்தல், பரிந்துரைத்தல், நன்றிகூறுதல், புகழ்தல்** என்பனவாம்.

கடவுள் மனிதன் இருதயத்தை ஆசீர்வதிக்கிறபடியால்தான், மனிதன் எல்லா ஆசீர்வாதங்களின் ஊற்றாகிய கடவுளை போற்ற முடியும்.

விண்ணப்பச் செபம் பாவங்களுக்கு மன்னிப;பையும், கடவுளின் அரசையும் உண்மையான எல்லாத் தேவைகளையும் தேடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பரிந்துரைக்கும் செபம் வேறொருவருக்காக விண்ணப்பித்தலில் தங்கியுள்ளது. அதற்கு ஒரு எல்லையில்லை. அது எதிரிகளையும் அடக்கியுள்ளது.

எல்லா ஆனந்தமும், எல்லாத் துன்பமும், எல்லா நிகழ்ச்சிகளும், எல்லாத்தேவைகளும் நன்றிச் செபத்துக்குப் பொருளாக இருக்க முடியும். அது கிறிஸ்துவின் நன்றிச் செபத்தில் பங்குபற்றுகிறது. அது முழு வாழ்வையும் நிரப்பவேண்டும். "என்ன நேர்ந்தாலும் நன்றிகூறுங்கள்" (1 தெச 5:18).

புகழ்தல் செபம் பாரபட்சமற்ற முறையில் கடவுளிடம் செல்கிறது. அவரை அவருக்காகப் புகழ்கிறது, ஏனெனில் அவரே இருப்பவர்.

2வது அத்தியாயம் : செபத்தின் பாரம்பரியம்

1. செபத்தின் ஊற்றுக்கள்

சுருக்கம்

பாரம்பரியம் என்னும் உயிருள்ள தொடர்புப் பரிமாறுதலால் திருச்சபையில் பரிசுத்த ஆவி கடவுளின் மக்களுக்குச் செபிக்கக் கற்றுக் கொடுக்கிறார்.

கடவுளின் வார்த்தை, திருச்சபையின், வழிபாடு, விசுவாசம் நம்பிக்கை அன்பு என்னும் புண்ணியங்கள், செபத்தின் ஊற்றுக்களாக, விளங்குகின்றன.

2. செபத்தின் பாதை.

சுருக்கம்

செபம் பிரதானமாக கடவுளை நோக்கியே சொல்லப்படுகிறது. அதுபோல, அது இயேசுவை நோக்கியும் சொல்லப்படுகிறது, முக்கியமாக, அவருடைய பரிசுத்த பெயரை உச்சரித்து வேண்டப்படுகிறது, "கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவே, ஆண்டவரே, பாவிகளாகிய எங்கள் மேல் இரக்கமாயிரும்! ".

"பரிசுத்த ஆவியின் ஏவுதலாலன்றி 'இயேசு ஆண்டவர்' என்று யாரும் சொல்ல முடியாது" (1கொரி, 12:3). திருச்சபை பரிசுத்த ஆவியைக் கிறிஸ்தவ செபத்தின் அந்தரங்க ஆசிரியராக ஏற்று அவர் மூலம் செபிக்கும்படி நம்மைத் தூண்டுகிறது.

கன்னி மரியாள் பரிசுத்த ஆவியோடு தனிப்பட்ட முறையில் ஒத்துழைத்தபடியால், திருச்சபை அவளோடு சேர்ந்து செபிக்க விரும்புகிறது, கடவுள் அவளில் நிறைவேற்றிய மாபெரும் காரியங்களுக்கு அவளோடு சேர்ந்து அவரை மகிமைப்படுத்தவும், அவருக்குரிய

தனது விண்ணப்பங்களையும் புகழ்ச்சிகளையும் அவளிடம் ஒப்படைக்கவும் விரும்புகிறது.

### 3. **செபத்திற்கு வழிகாட்டிகள்**

**சுருக்கம்**

பயணம் செய்யும் திருச்சபை தனது செபத்தில் புனிதர்களின் செபத்தோடு இணைந்துள்ளது. அவர்களின் பரிந்துரைத்தலை வேண்டிநிற்கிறது.

கிறிஸ்தவ ஞானவாழ்வு முறைகள் செபத்தின் உயிருள்ள பராம்பரியத்தில் பங்குபற்றுகின்றன. அவை ஞானவாழ்வுக்கு மிக மதிப்புக்குரிய வழிகாட்டிகளாக விளங்குகின்றன.

கிறிஸ்தவ குடும்பமே செபத்திற்குப் பயிற்சி அளிக்கும் முதல் இடமாக விளங்குகிறது.

திருப்பட்டம் பெற்ற பணியாளர், கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு, திருமறைப்போதகம், செபக்குழுக்கள், ஞான வழிகாட்டுதல், திருச்சபையில் செபத்திற்கு உதவியை உறுதிப்படுத்துகின்றன.

செபத்திற்கு மிக அனுகூலமான இடங்கள் பின்வருவன சொந்த அல்லது குடும்பச் செபக் கூடம், சந்நியாச மடங்கள், திருயாத்திரைத் தேவாலயங்கள், விசேடமாக, பங்குச் சமூகத்தின் திருவழிபாட்டிற்கும், நற்கருணை ஆராதனைக்கும் உரிய தேவாலயம் என்பனவாம்.

## 3வது அத்தியாயம் : செப வாழ்வு

### 1. செபத்தின் வெளித்தோற்றங்கள்

சுருக்கம்

திருச்சபை விசுவாசிகளை ஒரு ஒழுங்கு முறையுள்ள செபத்திற்கு அழைக்கிறது. அது நாளாந்த செபம், மணித்தியாலங்களுக்குரிய செப வழிபாடு, ஞாயிறு நற்கருணை வழிபாடு, திருவழிபாட்டு ஆண்டின் திருநாள்கள் என்பவற்றை அடக்கியுள்ளது.

கிறிஸ்தவ பாரம்பரியம் செபவாழ்வின் மூன்று பெரிய தோற்றங்களை அடக்கியுள்ளது. அவை: **வாய் மொழிச் செபம், தியானம், மனதிலே செய்யப்படும் செபம்** என்பனவாம். இருதயத்தில் ஆழ்ந்து சிந்தித்தல் தான் அவைக்குப் பொதுவாக உள்ளது.

உடலும் ஆன்மாவும் மனிதனின் இயல்பில இணைக்கப்பட்டிருப்பதால், வாய் மொழிச் செபம் அதை அத்திவாரமாகக் கொண்டும், கிறிஸ்து தமது தந்தையை மன்றாடுவதையும் தமது சீடர்களுக்குப் 'பரலோக மந்திரத்தை' கற்பிக்கிறதையும் மாதிரியாகக் கொண்டும், இருதயத்தின் உள்ளரங்க செபத்திலும் உடலை இணைக்கிறது.

தியானம் மன்றாடிச் செய்யும் ஆராய்ச்சி, அது சிந்தனை கற்பனை, உணர்ச்சி, ஆசை ஆகியவைகளைப் பயன்படுத்துகிறது. அது ஆராயப்படும் விடயத்தை நமது வாழ்வின் உண்மை நிலையோடு, எதிர்நோக்கி, அதை விசுவாசத்தால் தனதாக்கிக்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மனதில் செய்யப்படும் செபம் செபமறைபொருளின் எளிய வெளித்தோற்றமாகும். அது இயேசுவை விசுவாசத்தால் உற்றுநோக்குதலும், கடவுளின் வார்த்தையைக் கேட்டலும், ஒரு மௌனமான அன்புமாகும். அது கிறிஸ்துவின் செபத்தோடு இணைதலை, அவரது மறைபொருளில் பங்கு பற்றச் செய்யும் அளவிற்கு நிறைவேற்றுகிறது.

### 2. செபத்தின் போராட்டம்.

சுருக்கம்

செபம் ஒரு முயற்சியையும், நமக்கு எதிராகவும், சோதிப்பவனுடைய தந்திரத்திற்கு எதிராகவும் ஒரு போராட்டத்தையும் எதிர்பார்க்கிறது. செபத்தின் போராட்டத்தைக் கிறிஸ்துவின் ஆவியின்படி வழக்கமாகச் செயலாற்றுவதற்கு அவசியமான ஞானப்போராட்டத்திலிருந்து பிரிக்கமுடியாது. ஒருவன் வாழ்வது போல் செபிக்கிறான், ஏனெனில் ஒருவன் செபிப்பது போல் வாழ்கிறான்.

செபத்தின் போராட்டத்தில் சில பிழையான எண்ணங்களுக்கும், வெவ்வேறு மனப்போக்கு ஓட்டங்களுக்கும், நமது தடைகளின் அனுபவத்திற்கும் எதிராக நாம் செயலாற்றவேண்டும். செபத்தின் பிரயோசனத்தில், ஏன் அதன் சாத்தியத்தன்மையிலேயே ஐயம் ஏற்படுத்தும் சோதனைகளுக்குத் தாழ்ச்சி, நம்பிக்கை, விடாமுயற்சியால் விடைபகர்தலே பொருத்தமாகும்.

செபப்பயிற்சியில் தோன்றும் பிரதான கஷ்டங்கள் ஊராக்கும், மனவரட்சியுமாகும். இவைகளுக்குத் தகுந்த பரிகாரம், விசுவாசத்திலும் மனமாற்றத்திலும், இருதயக் கண்காணிப்பிலும் தங்கியுள்ளது.

இரு சோதனைகள் செபத்தை அடிக்கடி அச்சுறுத்துகின்றன. அதாவது, விசுவாசமின்மையும், வரட்சியும்ஆகும். அவை உலக இன்பங்களைத் துறந்ததின் தளர்வால் ஏற்படும் மனச்சோர்வும், அதைரியமும் ஆகும்.

நமது செபம் எப்போதும் கேட்கப்படுவதில்லை என்ற உணர்ச்சியால், கடவுளின் பிள்ளைக்குரிய நமது நம்பிக்கை பரிசோதிக்கப்படுகிறது. நமது செபம் பரிசுத்த ஆவியின் விருப்பத்தோடு ஒத்திருக்கிறதா என்று

கேட்கும்படி நற்செய்தி நமக்கு அழைப்பு விடுக்கிறது.

"இடைவிடாது செபியுங்கள்" (1 தெச. 5:17) நாம் எப்போதும் செபிக்கமுடியும். அது ஒரு ஆசீர்வாதமான தேவையாகவும் இருக்கிறது. செபமும் கிறிஸ்தவ வாழ்வும் பிரிக்கமுடியாதவை.

இயேசுவின் மணித்தியாலச் செபம் "குருத்துவச் செபம்" (யோவா 17) என்ற சரியான பெயரைக் கொண்டுள்ளது. அது படைப்பின், மீட்பின் முழுத்திட்டத்தை சுருக்கிக் கூறுகிறது. அது "பரலோக மந்திரத்தின்" பிரதான வேண்டுதல்களை ஊக்குவிக்கிறது.

2வது பெரும் பிரிவு: கிறிஸ்து கற்பித்த செபம்
"பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே."

1. முழு நற்செய்தியின் சுருக்கம்.

சுருக்கம்

தமது சீடர்களின் "ஆண்டவரே எங்களுக்கும் செபிக்கக் கற்றுக்கொடும்" (லூக்.11:1) என்ற வேண்டுகோளுக்கு விடையாக இயேசு மூலாதாரமான கிறிஸ்தவ செபமாகிய "பரலோக மந்திரத்தை" அவர்களிடம் ஒப்படைத்தார்.

"ஆண்டவரின் செபம் ("பரலோக மந்திரம்") உண்மையாக முழு நற்செய்தியின் சுருக்கம்" (தேர்த்துல்லியன்) - அது தான் "மிகச் சிறந்த செபம்" (அக்குவீனாத் தோமையார்). அது திருமறைநூலின் மையமாகும்.

பரலோக மந்திரம் "ஆண்டவரின் செபம்" தான் திருச்சபையின் மிகச் சிறந்த செபம். அது, மணித்தியாலங்களுக்குரிய செபவழிபாட்டையும், கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத்துக்குரிய அருளடையாளங்களாகிய திருமுழுக்கு, உறுதிப்படுத்தல், தேவநற்கருணையையும் பூரணப்படுத்தும் ஓர் அம்சமாகும். அது நற்கருணையோடு இணைக்கப் பட்டு, தனது வேண்டுதல்களின் மறுவுலகத் தன்மையை "ஆண்டவர் வரும்வரை" (1கொரி.11:26) அவரில் நம்பிக்கை வைத்துக் காட்டுகிறது.

2. "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே."

சுருக்கம்

பரலோக மந்திரத்தைச் செபிக்கிறவருக்கு எளிய, விசுவாசமுள்ள நம்பிக்கையும், தாழ்ச்சியுள்ள சந்தோஷமுள்ள உறுதியும், பொருத்தமான மனச்சார்புகளாகும்.

கடவுளைப் பார்த்து நாம் "பிதாவே" என்று மன்றாடலாம். ஏனெனில் மனிதனான கடவுளின் மகன் அதை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். திருமுழுக்கினால் நாம் கடவுளின் சுவீகாரப்பிள்ளைகளாக அவரில் இணைக்கப்பட்டுள்ளோம்.

"ஆண்டவரின் செபம்" நம்மைப் பிதாவோடும். அவர் மகன் இயேசுக்கிறிஸ்துவோடும் கூட்டுறவு கொள்ளச் செய்கிறது. அதே நேரத்தில் நம்மை நமக்கும் வெளிப்படுத்துகிறது (இ.உ.தி, 22:1)

"பரலோக மந்திரத்தை" செபித்தல் பிதாவை ஒத்திருக்கும் விருப்பத்தையும், தாழ்ச்சியும் நம்பிக்கையுமுள்ள இருதயத்தையும் நம்மில் வளர்க்கவேண்டும்.

"எங்கள் பிதாவே" என்று சொல்லும்போது, இயேசு கிறிஸ்துவில் உருவான புதிய உடன்படிக்கையையும், பரிசுத்த திரித்துவத்துடன் கொண்டுள்ள கூட்டுறவையும், திருச்சபையால் உலகெங்கும் பரப்பப்படும் தெய்வீக அன்பையும் நாம் வேண்டுகிறோம்.

"பரலோகத்தில் இருக்கிற" என்ற சொற்றொடர் ஒரு இடத்தையல்ல, கடவுளின் மாட்சிமையையும், நீதிமான்களின் இருதயங்களில் அவரது பிரசன்னத்தையுமே குறிக்கிறது. பிதாவின் இல்லமாகிய பரலோகமே நமது உண்மையான சொந்த நாடு. அதை நோக்கியே நாம் பயணம் செய்கிறோம், அதற்கே ஏற்கெனவே நாம் உரியவர்களாய் இருக்கிறோம்.

**3. ஏழு விண்ணப்பங்கள்.**

**சுருக்கம்**

பரலோக மந்திரத்தில் முதல் மூன்று விண்ணப்பங்களும் பிதாவின் மகிமையை நோக்கமாகக் கொண்டுள்ளன. அவருடைய பெயர் அர்ச்சிக்கப்படுதல், அவருடைய இராச்சியம் வருதல், அவருடைய சித்தம் நிறைவேற்றப்படுதல். மற்ற நாலு விண்ணப்பங்கள் எங்கள் விருப்பங்களைச் சமர்ப்பிக்கின்றன. இவ்விண்ணப்பங்கள் எங்கள் வாழ்க்கையை வளர்க்க அல்லது பாவத்திலிருந்து குணமாக்க, தீமைக்கு எதிராக நன்மை நடத்தும் போராட்டத்தில் நாம் வெற்றிபெற வேண்டுகின்றன.

"உம்முடைய நாமம் அச்சிக்கப்படுவதாக" என்று மன்றாடும்போது. நாம் கடவுளின் நாமம் அர்ச்சிக்கப்படுதல் என்ற கடவுளின் திட்டத்தில் பிரவேசிக்கிறோம். அது மோசேசாலும், பின்பு கிறிஸ்துவிலும் வெளிப்படுத்தப்பட்டது. நம்மாலும், நம்மிலும், எல்லாத்தேசங்களிலும், ஒவ்வொரு மனிதனிலும் கடவுளின் திட்டம் நிறைவேற்றப்பட

வேண்டும்.

இரண்டாவது விண்ணப்பத்தால் திருச்சபை பிரதானமாக கிறிஸ்து திரும்பி வருவதையும், கடவுளின் இராச்சியத்தின் இறுதி வரவையும் எதிர்பார்க்கிறது. கடவுளின் இராச்சியம் நமது வாழ்வின் "இன்றைய நாளில்" வளரும்படியும் திருச்சபை மன்றாடுகிறது.

"ஆமென்" என்ற முடிவால் ஏழு விண்ணப்பங்களைப் பற்றிய விருப்பத்தை "அப்படியே ஆகட்டும்" என்று கூறி வெளிப்படுத்துகிறோம்.

வலிமையுள்ள ஆவியை வேண்டுகிறது. அது விழிப்பென்னும் கொடையையும். இறுதிமட்டும் விடாமுயற்சியையும் வேண்டுகிறது.


மூன்றாவது விண்ணப்பத்தில் உலகின் வாழ்வில் தமது மீட்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நமது சித்தத்தைத் தமது மகனின் சித்தத்தோடு இணைக்கும் படி நமது பிதாவை நாம் மன்றாடுகிறோம்.

நாலாவது விண்ணப்பத்தில் "எங்களுக்கு அளித்தருளும்" என்று கூறும்போது, நமது சகோதரர்களோடு ஒன்றாக இணைந்து, நமது பரலோக பிதாவிடம் நம்மிடமுள்ள பிள்ளைக்குரிய நம்பிக்கையை நாம் கூறுகிறோம். "எங்கள் அப்பம்" நாம் எல்லோரும் வாழ்வதற்கு அவசியமான இவ்வுலக உணவையும் சீவியத்தின் அப்பத்தையும், அதாவது, கடவுளின் வார்த்தையையும், கிறிஸ்துவின் உடலையும் குறிக்கிறது. அது கடவுளின் "இன்றைய நாளில்" அத்தியாவசியமான உணவாக, பரலோக இராச்சியத்தின் விருந்துக்குத் தேவைப்படுகிற உணவாக, ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

ஐந்தாம் விண்ணப்பம் நமது பாவங்களுக்கு கடவுளின் இரக்கத்தை வேண்டுகிறது. எங்கள் எதிரிகளுக்கு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி, அவருடைய உதவியோடு நாம் மன்னிப்பு அளித்தால் தான் அவரது இரக்கம் எங்கள் இருதயத்தில் நுழைய முடியும்.

"எங்களைச் சோதனையில் விழவிடாதேயும்" என்ற விண்ணப்பத்தால் பாவத்திற்கு இட்டுச்செல்லும் பாதையை நாம் எடுக்க விடாதேயும் என்று கடவுளை வேண்டுகிறோம். இவ் விண்ணப்பம் பகுத்தறியும்,

"தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும்" என்ற கடைசி விண்ணப்பத்தில், கடவுளையும் அவரது மீட்புத் திட்டத்தையும் நேர் நேராக எதிர்த்த சம்மனசான "இவ்வுலகின் அரசனான" சாத்தான் மேல் ஏற்கெனவே கிறிஸ்து கொண்ட வெற்றியை வெளிப்படுத்தும்படி கிறிஸ்தவன் திருச்சபையோடு சேர்ந்து மன்றாடுகிறான்.



# அட்டவணை

**அறிமுகம்**
**பொருளடக்கம்**

**1ஆம் பாகம் : விசுவாச அறிக்கை**
**1வது பெரும் பிரிவு : நான்விசுவசிக்கிறேன் : நாங்கள் விசுவாசிக்கிறோம்**

1. இறைவனின் வெளிப்படுத்தல்
2. இறைவெளிப்பாடு வழிவழியாக வழங்கப்படல்
3. திருமறை நூல்

**3வது அத்தியாயம் : இறைவனுக்கு மனிதனின் பதில்**
**2வது பெரும் பிரிவு : கிறிஸ்தவ விசுவாசத்தின் அறிக்கை - விசுவாசப் பிரமாணங்கள்**

**1வது அத்தியாயம் : பிதாவாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.**

1. சருவேசுரன்
2. பிதாவாகிய சருவேசுரன்
3. எல்லாம்வல்ல சருவேசுரன்
4. படைத்த கடவுள்
5. பரலோகத்தையும் பூலோகத்தையும்படைத்தார்
6. மனிதனைப் படைத்தார்.

**2வது அத்தியாயம் : சுதனாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்**

1. "அவருடைய ஏக சுதனாகிய ..... விசுவசிக்கிறேன்"
2. "இயேசு கிறிஸ்துநாதர் ......... பிறந்தார்"
3. "போஞ்சியு பிலாத்துவின் ...... அடக்கம் செய்யப்பட்டார்
4. "பாதாளத்தில் இறங்கி ..... உயிர்த்தெழுந்தருளினார்"
5. "பரலோகத்திற்கு எழுத்தருளி ..... வீற்றிருக்கிறார்."
6. "அவ்விடத்திலிருந்து ....... ..... நடுத்தீர்க்க வருவார்"

**3வது அத்தியாயம் : பரிசுத்த ஆவியாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்**

1. "பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன்"
2. "பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையையும் ... ... விசுவசிக்கிறேன்"
3. "பாவம் பொறுத்தலை விசுவசிக்கிறேன்"
4. "சரீர உத்தானத்தை விசுவசிக்கிறேன்"
5. "நித்திய சீவியத்தை விசுவசிக்கிறேன்"

### 2ம் ஆம் பாகம் கிறிஸ்தவ மறைபொருளைக்கொண்டாடுதல்

**1வது பெரும் பிரிவு** அருளடையாளத்திட்டம்

**1வது அத்தியாயம் : பாஸ்கா மறை பொருள் திருச்சபையின் காலத்தில்**

1. திருவழிபாடும் பரிசுத்த திரித்துவமும்
2. திருச்சபையின் அருளடையாளங்களில் பாஸ்கா மறைபொருள்

**2வது அத்தியாயம் : பாஸ்கா மறைபொருளை அருளடையாளங்கள் வழியாகக் கொண்டாடுதல்**

1. திருச்சபையின் திருவழிபாட்டை நிறைவேற்றுதல்.
2. வழிபாட்டில் வேற்றுமையும் மறை பொருளில் ஒற்றுமையும்.

### 2வது பெரும் பிரிவு திருச்சபையின் ஏழு அருளடையாளங்கள்

**1வது அத்தியாயம் : கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத்திற்குரிய அருளடையாளங்கள் … … … … …**

1. திருமுழுக்கு என்னும் அருளடையாளம்............
2. உறுதிப்படுத்தல் என்னும் அருளடையாளம்........
3. தேவநற்கருணை என்னும் அருளடையாளம்.......

**2வது அத்தியாயம் : குணப்படுததலுக்குரிய** அருளடையாளங்கள் … … … …

1. பச்சாத்தாபத்திற்கும் ஒப்புரவுக்குமுரிய அருளடையாளம் … … …
2. நோயில் பூசுதல் என்னும் அருளடையாளம் … … … …

**3வது அத்தியாயம் : கிறிஸ்தவ உறவை வளர்க்கும் அருளடையாளம்… … … … … … … …**

1. குருத்துவம் என்னும் அருளடையாளம்.
2. திருமணம் என்னும் அருளடையாளம்.

**4வது அத்தியாயம் : திருவழிபாட்டிற்குரிய பிற சடங்குகள், அருள்வேண்டல் குறிகள்.**

### 3ஆம் பாகம் கிறிஸ்துவில் வாழ்வு

**1வது பெரும் பிரிவு மனிதனின் அழைப்பு அருள்வாழ்வுக்கு … … … … … … … … … … … …**

**1வது அத்தியாயம் : மனிதனின் மாண்பு**

1. மனிதன் இறைவனின் சாயல்
2. பரலோக பாக்கியத்திற்கு நமக்குள்ள அழைப்பு
3. மனிதனின் சுதந்திரம்
4. மனித செயல்களின் ஒழுக்கநிலை
5. ஆசாபாசங்களின் ஒழுக்கநிலை
6. ஒழுக்க சம்பந்தமான மனச்சான்று

மறைக்கல்வி நடுநிலையம்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்

நன்றி:அருட்பணி மௌலிஸ்
மறைக்கல்வி நடுநிலையம்
யாழ்ப்பாணம்

**வெளியீடு**

தேசிய மறைக்கல்வி, விவிலியப் பணி நடுநிலையம்

“லங்காராம” முதலாம் மாடி,

இல.19,பல்கம் இடம்

கொட்டா வீதி,

கொழும்பு - 08

தொலைபேசி - 011-2685459